(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 9(5).]

# பாராளுமன்றம்

## 9ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2013 ஒற்றோபர் 11 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2013 ஒற்றோபர் 22, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1),— காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான (52ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 22(1) ஆம் பிரிவின் கீழ், மதுவரி தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2013 யூலை 29 ஆம் திகதிய 1821/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.10.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 958)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான (52ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 22(1) ஆம் பிரிவின் கீழ், மதுவரி தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2013 யூலை 29 ஆம் திகதிய 1821/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.10.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல்கள் 959, 960, 961)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— சுங்கக் கட்டளைச்சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 2013.10.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழான இறக்குமதிகள் தீர்வைகள் சம்பந்தமான தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

(2013 யூலை 29 ஆம் திகதிய 1821/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1),— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியால் ஆக்கப்பட்டு 2013 யூலை மாதம் 11 ஆம் திகதிய 1818/36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.10.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியால் ஆக்கப்பட்டு 2013 யூலை மாதம் 31 ஆம் திகதிய 1821/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.10.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 3),— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியால் ஆக்கப்பட்டு 2013 ஓகத்து மாதம் 22 ஆம் திகதிய 1824/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.10.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— நிதிச்சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 2013 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் மூலம் திருத்தியமைக்கப்பட்ட, 2012 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் IV ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2013 யூலை மாதம் 11 ஆம் திகதிய 1818/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.10.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— நிதிச்சட்டத்தின் கீழ் கட்டளை,— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2013 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 15(1) ஆம் பிரிவின் கீழ் பயிர் காப்புறுதி அறவீடு தொடர்பில் சனாதிபதியால் ஆக்கப்பட்டு 2013 ஓகத்து மாதம் 23 ஆம் திகதிய 1824/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப் பட்டதும் 2013.10.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழான உற்பத்தி வரி தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2013 யூலை மாதம் 29 ஆம் திகதிய 1821/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.10.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 1),— வருமானங்கள் மற்றும் மூலதனத்தின் மீதான வரிகள் தொடர்பில் இரட்டை வரி விதிப்பனவைத் தவிர்ப்பதற்காகவும் வரி செலுத்தாது தட்டிக்கழிப்பதனைத் தடுப்பதற்காகவும் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அரசாங்கத்திற்கும் லக்ஸம்பேர்க் பேரரசின் அரசாங்கத்திற்கும் இடையில் 2013 சனவரி 31 ஆந் திகதி செய்து கௌ்ளப்பட்டதும், 2013.10.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான சமவாயமானது 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 97(1)(அ) பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 2),— வருமானம் மீதான வரிகள் தொடர்பில் இரட்டை வரி விதிப்பைத் தவிர்ப்பதற்காகவும் வரி செலுத்தாது தட்டிக் கழிப்பதனைத் தடுப்பதற்காகவும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்திற்கும் பலஸ்தீன அரசாங்கத்திற்கும் இடையில் 2012 ஏப்பிறல் 16 ஆந் திகதி செய்துகொள்ளப்பட்டதும், 2013.10.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 97(1)(அ) பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 3),— வருமானம் மீதான வரிகள் தொடர்பில் இரட்டை வரி விதிப்பனவைத் தவிர்ப்பதற்காகவும் வரி செலுத்தாது தட்டிக் கழிப்பதனைத் தடுப்பதற்காகவும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்திற்கும் சீசெல்ஸ் குடியரசின் அரசாங்கத்திற்கும் இடையில் 2011 செத்தெம்பர் 23 ஆந் திகதி செய்துகொள்ளப்பட்டதும், 2013.10.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 97 (1)(அ) பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 4),— வருமானத்தின் மீதான வரிகள் தொடர்பில் இரட்டை வரி விதிப்பனவைத் தவிர்ப்பதற்காகவும் வரி செலுத்தாது தட்டிக் கழிப்பதனைத் தடுப்பதற்காகவும் பெலாருஸ் குடியரசின் அரசாங்கத்திற்கும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்திற்கும் இடையில் 2013 ஓகத்து 26 ஆந் திகதி செய்துகொள்ளப்பட்டதும் 2013.10.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது, 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 97 (1)(அ) பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் கீழ் கட்டளை,— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 126 ஆம், 321 ஆம் பிரிவுகளின் கீழ் சனாதிபதியால் ஆக்கப்பட்டு 2013 யூலை மாதம் 12 ஆம் திகதிய 1818/37 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.10.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*

முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1),— திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(4) ஆம் பிரிவின் கிழ், நிதி, திட்டமிடல் அமைச்சரிடம் கலந்துரையாடி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2013 செத்தெம்பர் 23 ஆம் திகதி 1829/23 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.10.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(4) ஆம் பிரிவின் கிழ், நிதி, திட்டமிடல் அமைச்சரிடம் கலந்துரையாடி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2013 செத்தெம்பர் 23 ஆம் திகதி 1829/24 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.10.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

பௌத்த அறநிலையங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*

இலங்கை கொள்கைக் கற்கைகள் நிறுவகம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*

விளையாட்டில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.

# 2013 நவெம்பர் 05, செவ்வாய்க்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

2589/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையின் மிகத் தனவந்தர்களில் 20% அனுபவிக்கும் தேசிய வருமானத்தின் பெறுமதி;

(ii) இலங்கையின் மிக வறியவர்களில் 20% அனுபவிக்கும் தேசிய வருமானத்தின் பெறுமதி

யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேலே (அ) i மற்றும் ii இற்கான விடைகளுக்கமைய, தேசிய வருமானப் பகிர்வில் முரண்பாடு காணப்படுமாயின், இதனை நிவர்த்தி செய்வதற்கு அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர், இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2946/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில்,

(i) வரவு செலவுத் திட்டத்தில் உயர் கல்விக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகைகளையும்;

(ii) உண்மையில் உயர் கல்விக்காக செலவிடப்பட்ட பணத்தின் அளவையும்;

(iii) மேற்படி தொகைகள் உண்மையில் செலவிடப்பட்ட செலவினத் தலைப்புகளையும்;

(iv) உயர் கல்விக்காக மாதாந்தம் செலவிடப்பட்ட பணத்தொகை மற்றும் அப்பணம் மாற்றப்பட்டுள்ள செலவினத் தலைப்புகள் ஆகியவற்றையும்;

(v) வரவு செலவுத் திட்டத்தில் உயர் கல்விக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட பணம் மாற்றப்பட்டுள்ள வரவு செலவுத் திட்ட செலவினத் தலைப்புகளையும்

அவர் தனித்தனியாகக் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3048/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரச நிறுவனங்கள் மத்தியில் உரிய தினத்தன்று ஊழியர்களின் மாதாந்தச் சம்பளத்தை முழுமையாக வழங்காத ஒரே நிறுவனம் இலங்கை போக்குவரத்துச் சபை என்பதையும்;

(ii) வரவு-செலவுத் திட்டத்தினூடாக போக்குவரத்து அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட பணத்தொகை நாளுக்குநாள் குறைக்கப்படுகின்றதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) இ.போ.ச. ஊழியர்களுக்கு மாதாந்தச் சம்பளத்தை வழங்குவதற்காக மாதந்தோறும் செலவிடப்படுகின்ற பணத் தொகை யாது;

(ii) இதன் பொருட்டு கடந்த வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட பணத்தொகை யாது;

(iii) எதிர்வரும் வரவு-செலவுத் திட்டங்களிலேனும் மாதாந்தச் சம்பளம் செலுத்துவதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தொகையினை எவ்விதத்திலும் குறைக்காமல் வழங்கி ஒழுங்கான விதத்தில் இ.போ.ச. ஊழியர்களின் சம்பளத்தைச் செலுத்த நடவடிக்கை எடுப்பாரா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3292/ '12

கௌரவ புத்திக பதிரண,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005 ஆம் ஆண்டு முதல், 2008 ஆம் ஆண்டில் ஊடகவியலாளர்களுக்கு நேரிடுகின்ற துன்புறுத்தல்கள் தொடர்பாக ஆராய்வதற்கென அமைச்சர்கள் குழுவொன்று நியமிக்கப்படல் வரையான காலப்பகுதிக்குள் ஊடகவியலாளர்களுக்கு நேரிட்ட துன்புறுத்தல்கள் தொடர்பாக கிடைத்திருந்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி அமைச்சர்கள் குழு நியமிக்கப்பட்ட பின்னர் இது வரை கடத்திச் செல்லல் மற்றும் தாக்குதலுக்கு உள்ளான ஊடகவியலாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) இச் செயற்பாடுகள் தொடர்பாக அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3370/ '12

கௌரவ பி. ஹரிசன்,— சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போது விபச்சாரத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் எண்ணிக்கை யாதெனப்தையும்;

(ii) விபச்சாரத் தொழிலில் ஈடுபடுட்டுள்ளோருக்கு புனர்வாழ்வளிப்பதற்காக செயற்படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் யாவையென்பதையும்;

(iii) இதற்கென 2013 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3582/ '13

கௌரவ சுஜீவ சேனசிங்க,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை போக்குவரத்துச் சபையின் கதிர்காமம் டிப்போவில் சேவையாற்றும் ஊழியர்களுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் உரிய தினத்தில் மாதாந்த சம்பளம் செலுத்தப்படுவதில்லை என்பதையும்;

(ii) இலங்கை போக்குவரத்துச் சபை உரிய தினத்தில் சம்பளத்தை செலுத்தாமையால் சில ஊழியர்கள் நிர்க்கதியான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) மேற்கூறப்பட்ட சம்பளம் செலுத்தாமை பற்றிய பிரச்சினை தொடர்பில் எதிர்வரும் காலத்தில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3633/ '13

கௌரவ ரஞ்சன் ராமநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் மற்றும் நிரல் அமைச்சின் அனுசரணையுடன் தனியார் தொலைக்காட்சி அலைவரிசையொன்றில் ஒளிபரப்பான "ரட்டவிருவோ டெலனட் ஸ்டார் ரியலிட்டி" நிகழ்ச்சிக்கு மதிப்பீடு செய்யப்பட்ட பணத் தொகை எவ்வளவு;

(ii) மேற்படி பணத் தொகையில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் குறிப்பிட்ட தொலைக்காட்சி அலைவரிசைக்கு செலுத்தப்பட்ட பணத்தொகை எவ்வளவு;

(iii) அரச தொலைக்காட்சி அலைவரிசைகள் இருக்கும் போது தனியார் அலைவரிசையொன்றுக்கு அந் நிகழ்ச்சியை வழங்குவதற்கான காரணங்கள் யாவை

என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி நிகழ்ச்சியின் நடுவர்கள் குழுவினரினதும் மற்றும் அறிவிப்பாளர்களாக பணியாற்றியவர்களினதும் பெயர்கள் யாவை;

(ii) இவர்களுக்கு செலுத்தப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு;

(iii) வெளிநாடு செல்கின்றபோது அந்த ஒவ்வொரு நபருக்கும் விமான இருக்கைகள் ஒதுக்கப்பட்ட விதம் இருக்கை வகுப்புகளுக்கமைய வெவ்வேறாக யாது;

(iv) மேற்படி அறிவிப்பாளர்கள் மற்றும் நடுவர்கள் குழு அங்கத்தவர்களுக்கும் தங்குமிட வசதிகளை வழங்கிய ஹோட்டல்கள் மற்றும் அதற்காக மேற்படி பணியகத்தினால் ஏற்க்கப்பட்ட பணத் தொகைகள் வெவ்வேறாக யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) மத்திய கிழக்கில் இலங்கை ஊழியர்கள் முகாம்களில் கஷ்டப்படுகின்றபோது பாரிய செலவில் 'ரியலிட்டி' நிகழ்ச்சிகளை நடத்துவது பொருத்தமற்றதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும் அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3655/ '13

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாறை மாவட்டத்தில் 30 இற்கும் குறைவான மாணவர் தொகையைக் கொண்டுள்ள பாடசாலைகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு பாடசாலையிலும் பணியாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி பாடசாலைகளை விருத்திசெய்து மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது அல்லது குறித்த பாடசாலைகளை அதே நிலையில் தொடர்ந்தும் பேணிவருவது பொருத்தமானதா என்பதைப் பற்றிய ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அதனடிப்படையில் விருத்தி செய்யப்பட்ட பாடசாலைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மாணவர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளமையின் காரணமாக அம்பாறை மாவட்டத்தில் கடந்த 05 வருடத்தினுள் மூடப்பட்ட பாடசாலைகள் யாவை என்பதையும்;

(ii) குறித்த மாணவர்களுக்கு வேறு பாடசாலைகளை ஏற்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) மூடப்பட்டுள்ள மேற்படி பாடசாலைக் கட்டங்களின் தற்போதைய நிலைமை யாதென்பதையும்;

(iv) மேற்படி கட்டடங்கள் வேறு தொழிற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனின், அத் தொழிற்பாடுகள் யாவை என்பதையும்;

(vi) இன்றேல், மேற்படி கட்டடங்களை பயன்படுத்தாது காடடர்வதற்கு விடப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3724/ '13

கௌரவ அனுர திசாநாயக்க,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2013 மார்ச் 02 ஆம் திகதியன்று கொழும்பு, டுப்ளிகேசன் வீதியில் ஆளொருவரை விபத்துக்குள்ளாக்கிவிட்டு வாகனமொன்று தப்பிச் சென்றுள்ளமை அறிக்கையிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், விபத்துக்குள்ளான நபர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டாரா என்பதையும்;

(iii) மேற்படி சம்பவம் தொடர்பாக அதற்குப் பக்கத்தில் பொருத்தப்பட்டிருந்த CCTV கமரா முறைமையில் பதிவாகி உள்ளதா என்பதையும்;

(iv) மேற்படி விபத்து தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(v) குறித்த விபத்தை சம்பவிக்கச் செய்தமை தொடர்பாக எவரேனும் ஆளொருவர் கைது செய்யப்பட்டுள்ளாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3899/ '13

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— பிரதம அமைச்சரும் புத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி புகையிரத நிலைய வீதியில் சிறு வர்த்தகர்களுக்கான 98 கடைகள் உள்ளனவென்பதையும்;

(ii) மேற்படி சிறு வர்த்தக நிலையங்களை நீக்கிவிட்டு அவற்றிற்குப் பதிலாக புதிய வர்த்தக நிலையக் கட்டிடத் தொகுதியொன்றை நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) ஏற்கனவே மேற்படி வர்த்தக நிலையமொன்றை பெற்றுக்கொடுப்பதற்காக சிறு வர்த்தகர் ஒருவரிடமிருந்து நகர அபிவிருத்தி அதிகார சபையின் கண்டி அலுவலகம் ரூபா 250,000/- ஐ அறவிட்டுள்ளதென்பதையும்;

(iv) மேற்படி பணத் தொகைக்கு மேலதிகமாக ரூபா 950,000/- ஐ மேலும் அறவிடுவதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை எடுத்து வருகின்றதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மேலே குறிப்பிட்டுள்ள சிறு வர்த்தகர்களுக்கு இத்தகைய பெரும் தொகைப் பணத்தை செலுத்துவதற்கு பொருளாதார இயலுமை இன்மையால், புதிய வர்த்தக நிலையங்களை பெற்றுக்கொடுக்க இவ்வாறான பெரும் தொகைப் பணத்தை அறவிட வேண்டாமென நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு அறிவுரை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3914/ '13

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கொழும்பு மேற்கு, கொள்ளுப்பிட்டி கிராம அலுவலர் பிரிவுக்கு உரித்தான நெல்சன் ஒழுங்கை, பன்சல்வத்தை, தேவாலய ஒழுங்கை, முகந்திரம் வீதி, ஸ்டேஷன் வத்தை ஆகிய பிரதேசங்களில் வாழும் குடும்பங்கள் தொடர்பான தகவல்களை சேகரித்தல் நகர அபிவிருத்தி அதிகார சபை அறிந்திருக்கத்தக்க வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி தகவல் சேகரிப்புக்கான நோக்கம் யாது என்பதையும்;

(ii) மேற்படி தகவல்களைப் பெற்றுக் கொண்டுள்ள அலுவலர்கள் யாவர் என்பதையும்;

(iii) அவர்கள் சேகரித்துள்ள தகவல்கள் யாவை என்பதையும்;

(iv) அவ்வீடுகளில் ஒட்டப்பட்டுள்ள 'ஸ்ரிகர்களின்' அர்த்தம் யாது என்பதையும்;

(v) மேற்படி வீடுகளின் புகைப்படங்கள் எடுக்கப்பட்டதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3915/ '13

கௌரவ அ. விநாயகமூர்த்தி,— அரச வளங்கள், தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலைக்கு சொந்தமான நிலத்தை இலங்கை இராணுவம் பொறுப்பேற்று அங்கு முகாம் ஒன்றை அமைத்துள்ளனர் என்பதையும்;

(ii) காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலைகயின் சில இரும்புப் பாகங்கள் இராணுவத்தினரால் நீக்கப்பட்டுள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையை விரைவாக மீண்டும் ஆரம்பிக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதை அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4098/ '13

கௌரவ கயந்த கருணாதிலக்க,— அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வளிமண்டலவியல் திணைக்களத்தினால் வெளியிடப்படுகின்ற வானிலை எதிர்வுகூறல்களின் துல்லியத்தன்மை தொடர்பாக பிரச்சினைகள் காணப்படுகின்றன என்பதையும்;

(ii) குறைந்தபட்சம் வெளிநாடுகளினால் அஞ்சல் செய்யப்படுகின்ற இலங்கைக்கு தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய சீரற்ற வானிலை தொடர்பான எதிர்வுகூறல்களையேனும் ஆராய்ந்து பார்த்து, அது தொடர்பாக முன்கூட்டியே மக்களுக்கு அறிவிப்பதற்கு மேற்படி திணைக்களம் பல தடவைகள் தவறியுள்ளது என்பதையும்;

(iii) சரியான வானிலை எதிர்வுகூறல்கள் உரிய நேரத்தில் வெளியிடப்படாத காரணத்தினால் நாட்டு மக்களுக்கு குறிப்பாக மீனவர் சமூகத்துக்கு பாரதூரமான உயிர் மற்றும் சொத்துச் சேதங்களுக்கு முகங்கொடுக்க நேரிட்டுள்ளதென்பதையும்;

(iv) சரியாகவும் உரிய நேரத்திலும் எதிர்வுகூறல்களை வெளியிடுவதற்கு, மேற்படி திணைக்களத்துக்கு சொந்தமான முன் எச்சரிக்கை முறைமையை புதிய தொழில்நுட்பத்துக்கமைய உடனடியாக நவீனமயமாக்க வேண்டிய தேவைப்பாடு நிலவுகின்றதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) வளிமண்டலவியல் திணைக்களத்தில் நீண்ட காலமாக நிலவும் வானிலை விஞ்ஞானி பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி வெற்றிடங்கள் அனைத்தும் திட்டவட்டமாக நிரப்பப்படும் திகதி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2604/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான விசாரணை ஆணைக்குழு அறிக்கையில் பிரதானமான அவதானிப்புகள் மற்றும் சிபாரிசுகளின் பொழிப்பின் 69 ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரச ஊழியர்களின் நியமனம், இடமாற்றம் ஆகியன தொடர்பாக ஆட்சியிலுள்ள கட்சியின் அரசியல்வாதிகளின் தலையீடு அதிர்ச்சியளிக்கும் காரணியொன்றாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்வாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி ஆணைக்குழுவினால் சுயாதீன பகிரங்க சேவைகள் ஆணைக்குழுவொன்று தாமதமின்றி நியமிக்கப்படல் வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ள சிபாரிசு செயற்படுத்தப்படுமா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், இவ்வாணைக்குழு நியமிக்கப்படும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3120/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) திருகோணமலை– புல்மோடை வீதி அபிவிருத்திக் கருத்திட்டம் தொடர்பில்,

(i) பாதையின் நீளத்தையும்;

(ii) புனரமைப்பிற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட காலத்தையும்;

(iii) ஒப்பந்தகாரர் ஒரு கேள்விப்பத்திர நடைமுறையினைப் பின்பற்றியா தெரிவு செய்யப்பட்டார் என்பதையும்;

(iv) அவ்வாறாயின் தெரிவு செய்யப்பட்ட விலைகூறுநரின் பெயரையும்;

(v) நிதி மூலங்களையும்;

(vi) ஒரு கிலோ மீற்றருக்கான நிர்மாணச் செலவையும்;

(vii) யாருக்காவது இழப்பீடு செலுத்தப்பட்டதா என்பதையும்;

(viii) அவ்வாறாயின் இழப்பீடு செலுத்தப்பட்ட நபர்களின் பெயர்களையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2013 நவெம்பர் 22, வெள்ளிக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

2586/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— கைத்தொழில், வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தற்போது இலங்கைக்கும் ஐக்கிய அமெரிக்காவுக்கும் இடையே காணப்படும் வர்த்தக உறவுகளின் இயல்பு யாதென்பதையும்;

(ii) ஐக்கிய அமெரிக்காவுடனான வர்த்தக உறவு எமது நாட்டுக்கு எந்தளவுக்கு முக்கியமானதென்பதையும்

(iii) தற்போது இரு நாடுகளுக்குமிடையிலான இறக்குமதி மற்றும் ஏற்றுமதிகளின் அளவு ரூபாய் மில்லியன்களில் எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஐக்கிய அமெரிக்காவின் உற்பத்திப் பொருட்களை இலங்கையில் பகிஷ்கரிப்பதற்கான முயற்சியேதும் உண்டா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வாறான பகிஷ்கரிப்பின் மூலம் இலங்கைக்கு ஏற்படக்கூடிய தாக்கம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2883/ '12

கௌரவ மனுஷ நாணாயக்கார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (5)

(அ) 2012 ஆம் ஆண்டில் காலி கல்வி வலயத்தில் அமைந்துள்ள தேசிய பாடசாலைகளில்,

(i) முதலாம் தரம் முதல் பதின்மூன்றாம் தரம் வரையிலான வகுப்புகளில் கல்வி கற்ற மாணவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு வகுப்பின் அடிப்படையில் தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) முதலாம் தரத்திற்கு நேர்முகப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைத் தவிர, வேறு மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளார்களா என்பதையும்;

(iii) முதலாம் தரத்திற்கு அவ்வாறு அனுமதிக்கப்பட்டுள்ள மேற்படி மாணவர்கள் யாவர் என்பதையும்;

(iv) முதலாம் தரத்தைத் தவிர, வேறு தரங்களுக்கும் மாணவர்கள் அனுமதிக்கப் பட்டுள்ளார்களா என்பதையும்;

(v) ஏனைய தரங்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள மேற்படி மாணவர்கள் யாவர் என்பதையும்

தனித்தனியே அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி பாடசாலைகளுக்கு நேர்முகப் பரீட்சைகளில் சித்தியடைகின்ற மாணவர்களைத் தவிர, வேறு மாணவர்களை அனுமதிப்பதற்கு அதிகாரமளிக்கின்ற சட்டரீதியான ஆவணங்கள் உள்ளனவா என்பதையும்;

(ii) மேற்படி ஆவணங்களை இச்சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2932/ '12

கௌரவ புத்திக பதிரண,— சீனிக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கரும்பு ஆராய்ச்சி நிறுவகத்தின் தலைவர் உள்ளிட்ட பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் கல்வித் தகைமைகள் மற்றும் முகவரிகள் தனித்தனியே யாவை என்பதையும்;

(ii) இவர்கள் தற்போது பெறுகின்ற கொடுப்பனவுகள் உள்ளிட்ட சலுகைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) கரும்பு ஆராய்ச்சி நிறுவகத்தின் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான கலாநிதி திரு. என். டீ. குமாரசிங்கவுக்கு வழங்கப்படும் மாதாந்த சம்பளம், கொடுப்பனவுகள், ஏனைய சலுகைகள் யாவை என்பதையும்;

(ii) 2012 சனவரி தொடக்கம் இற்றைவரையிலான இவரது நிரந்தர சேவை நிலையம் யாது என்பதையும்;

(iii) கலாநிதி திரு. என்.டீ. குமாரசிங்கவிடமிருந்து கடந்த காலத்தில் கரும்பு ஆராய்ச்சி நிறுவகத்திற்கு கிடைக்கப்பெற்ற சேவை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3121/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அனுராதபுரம் - மன்னார் வீதி அபிவிருத்திக் கருத்திட்டம் தொடர்பில்,

(i) பாதையின் நீளத்தையும்;

(ii) புனரமைப்பிற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட காலத்தையும்;

(iii) ஒப்பந்தகாரர் ஒரு கேள்விப்பத்திர நடைமுறையினைப் பின்பற்றியா தெரிவு செய்யப்பட்டார் என்பதையும்;

(iv) அவ்வாறாயின் தெரிவு செய்யப்பட்ட விலைகூறுநரின் பெயரையும்;

(v) நிதி மூலங்களையும்;

(vi) ஒரு கிலோ மீற்றருக்கான நிர்மாணச் செலவையும்;

(vii) யாருக்காவது இழப்பீடு செலுத்தப்பட்டதா என்பதையும்;

(viii) அவ்வாறாயின் இழப்பீடு செலுத்தப்பட்ட நபர்களின் பெயர்களையும்;

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3260/ '12

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— மீள் குடியேற்ற அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வலிகாமம் வடக்கு பிரதேசத்தில் கொல்லன்கலட்டி, கந்தெய், செல்வாபுரம், மாவட்டபுரம் ஆகிய நான்கு கிராமங்களிலும் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கையை வெவ்வேறாக யாது என்பதையும்;

(ii) இக்கிராமங்களில் நலனோம்புகை பணிகளுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) இக்கிராமவாசிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்று செயற்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3375/ '12

கௌரவ பி. ஹரிசன்,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது உர மானியத்தை பெறுகின்ற நெல் விவசாயிகளின் எண்ணிக்கை;

(ii) உர மானியத்தின் கீழ் வருடாந்தம் நெற் செய்கைக்காக விநியோகிக்கப்படும் 50 கிலோ கிராம் உரப் பைகளின் எண்ணிக்கை;

மாவட்ட மட்டத்தில் மற்றும் கமநல சேவை நிலைய மட்டத்தில் தனித் தனியாக யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2013 வரவு - செலவுத்திட்டத்தின்படி, உர மானியத்தை பெறுகின்ற ஒவ்வொரு விவசாயியும் உள்ளடங்குகின்ற பயிர் காப்புறுதி திட்டமொன்றை செயற்படுத்துகின்ற நிறுவனம் யாதென்பதையும்;

(ii) குறித்த பயிர் காப்புறுதி முறையின்படி அதன் பிரதிபலன்களைப் பெறக் கூடிய அனர்த்த நிலைமைகள் யாவையென்பதையும்;

(iii) அதன் பிரகாரம், ஒரு விவசாயிக்கு செலுத்தப்படும் காப்புறுதிக் கொடுப்பனவு எவ்வளவென்பதையும்;

(iv) குறித்த பயிர்க் காப்புறுதி முறை அமுல்படுத்தப்படும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3407/ '13

கௌரவ அஜித் குமார,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2006 முதல் 2012 ஆம் ஆண்டு வரையிலான காலத்தினுள் கடற்றொழில் துறைசார்ந்ததாக இறக்குமதி செய்யப்பட்டுள்ள,

(i) மீன்பிடி வள்ளங்கள்;

(ii) மீன்பிடி வள்ளங்களுக்கு தேவையான பொருட்கள்;

(iii) மீன்பிடி வள்ளங்களுக்கான என்ஜின்கள்;

(iv) வலைகள், உபகரணங்கள் அல்லது வலைகள், உபகரணங்களுக்கு தேவைப்படும் பொருட்கள்;

(v) ஏனைய மீன்பிடி உபகரணங்கள்

ஆகியவற்றின் அளவு மற்றும் அவற்றிற்கு செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதை அவர் வெவ்வேறாக குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி காலகட்டத்தில் இந்நாட்டில் உற்பத்திசெய்யப்பட்ட,

(i) மீன்பிடி வள்ளங்கள்;

(ii) மீன்பிடி வள்ளங்களுக்கு தேவையான பொருட்கள்;

(iii) பீன்பிடி வள்ளங்களுக்கான என்ஜின்கள்;

(iv) வலைகள், உபகரணங்கள் அல்லது வலைகள், உபகரணங்களுக்கு தேவையான பொருட்கள்;

(v) வேறு மீன்பிடி உபகரணங்கள்;

ஆகியவற்றின் அளவு மற்றும் அவற்றிற்கு செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும் அவர் வெவ்வேறாக குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3687/ '13

கௌரவ ரஞ்சன் ராமநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் கரப்பந்தாட்டத்தின் மேம்பாட்டுக்காக, இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனத்திற்கு 2012/2013 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்டுள்ள பணத் தொகைகள் தனித்தனியே எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) வெளிநாடு செல்கின்ற இலங்கை ஊழியர்களிடமிருந்து அறவிடப்படுகின்ற பணத்திலிருந்து இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் பிரதானமாக வருமானம் பெறுகின்றது என்பதையும்;

(ii) கஷ்டங்கள், துன்புறுத்தல்களுக்கு ஆளான இலங்கை ஊழியர்கள் பெருந்தொகையானோர் மத்திய கிழக்கு நாடுகளில் தடுப்பு முகாம்களில் கஷ்டப்பட்டுவருகின்றபோது, அவர்களை விடுவித்து துரிதமாக இலங்கைக்கு அழைத்துவருவதற்கு முன்னுரிமை வழங்காது, அப்பணத்தை கரப்பந்தாட்டம் போன்ற வேறு நோக்கங்களுக்கு செலவிடுவது அநீதியாகும் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இன்றேல், ஏன்?

3725/ '13

கௌரவ அனுர திசாநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மிரிஸ்ஸ மெதடிஸ்ட் சிங்கள மகளிர் பாடசாலை தற்போது மூடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி பாடசாலை மூடப்பட்டமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) மூடப்பட்டதை அடுத்து, குறித்த பாடசாலைக்கு சொந்தமான ஆதனங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி பாடசாலைக்கு சொந்தமான காணி எவரேனும் ஆளொருவருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், மேற்படி ஒப்படைத்தலுக்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3749/ '13

கௌரவ சுஜீவ சேனசிங்க,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தெற்கு அதிவேகப் பாதையில் அமைந்துள்ள கெனோவின் ஆர்கேட் சேவை நிலையத்தின் உரிமையாளர்கள் யார்;

(ii) மேற்படி சேவை நிலையத்திலிருந்து அரசாங்கத்துக்கு வருமானம் கிடைக்கின்றதா;

(iii) ஆமெனில், மேற்படி வருமானம் கிடைக்கின்ற வழிமுறை யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3867/ '13

கௌரவ கனக ஹேரத்,— தெங்கு அபிவிருத்தி, மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) தெங்கு அபிவிருத்தி, மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கும் தெங்குப் பயிர்ச் செய்கை சபை, இலங்கை தெங்கு ஆராய்ச்சி நிறுவகம் ஆகிய நிறுவனங்களுக்கு சொந்தமான நாற்று மேடைகளில் வளர்க்கப்படும் தென்னங் கன்றுகள் பொது மக்களை சென்றடைவதற்கான முறையியல் யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) தென்னங் கன்றுகளை மக்களுக்கு வழங்கும் வேலைத்திட்டம் வேறொரு நிறுவனம் அல்லது நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படுமாயின், அந்நிறுவனங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) கடந்த அண்மித்த 05 வருட காலத்தில் மேற்படி ஒவ்வொரு நிறுவனம் மற்றும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட தென்னங் கன்றுகளின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4056/ '13

கௌரவ அ. விநாயகமூர்த்தி,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மெதமஹநுவர முதல் வுட்செட் குறூப் (Woodsaid Group) வீரியகொல்ல வரையிலான பாதை கடந்த 20 வருடங்களாக திருத்தப்படவில்லை என்பதையும்;

(ii) வீரியகொல்ல பிரதேசத்தில் லயன் வீடுகளில் வாழ்கின்ற மக்களும் பாடசாலைப் பிள்ளைகளும் பேரூந்து சேவைகள் இல்லாத காரணத்தினால் மிகுந்த சிரமங்களுடன் சொல்லப்பட்ட வீதியை பயன்படுத்தவேண்டியுள்ளதையும்

அவர் அறிவாரா?

(ஆ) சொல்லப்பட்ட வீதியை உடனடியாகத் திருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதை அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4127/ '13

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு, மாணிக்கபுரத்திற்குச் செல்வற்குள்ள வீதியில் அமைந்துள்ள பலகையினாலான பாலம் மிகவும் அபாயகரமான நிலையில் உள்ளது என்பதையும்;

(ii) தற்போது நிலவுகின்ற அபாயகரமான நிலைமையையும் கவனத்தில் கொள்ளாது பொதுமக்கள் இந்தப் பாலத்தை நாளாந்தம் உபயோகிக்க வேண்டி ஏற்பட்டுள்ளது என்பதையும்;

(iii) மேற்படி பலகையினாலான பாலத்தை உடனடியாக மறுசீரமைத்துத் தருமாறு குறித்த பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி பாலத்தை மறுசீரமைக்க நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2608/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் பற்றிய விசாரணை ஆணைக்குழு அறிக்கையின் பிரதானமான அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகளின் பொழிப்பின் 67ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள, பொலிஸ் திணைக்களத்தை பாதுகாப்பு சம்பந்தமாக செயற்படுகின்ற நிறுவனங்களிலிருந்து வேறாக்குதல் உகந்ததென செய்யப்பட்டுள்ள பரிந்துரைக்கு இணங்குகின்றாரா என்பதையும்;

(ii) பொலிஸ் தொடர்பில் மக்கள் நம்பிக்கையை உருவாக்குவதற்கு நிலையான, சுயாதீன பொலிஸ் ஆணைக்குழுவொன்றை நியமித்தல் பூர்வாங்க தேவையாகும் என மேற்படி ஆணைக்குழுவினால் குறிப்பிடப்பட்டுள்ளதை ஏற்றுக் கொள்கின்றாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) பொலிஸ் தொடர்பிலான மேற்படி பரிந்துரைகளை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அது எத் திகதியிலிருந்து என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3079/ '12

கௌரவ புத்திக பதிரண,— சுதேச மருத்துவத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போதுள்ள தொழிலற்ற ஆயுர்வேத மருத்துவப் பட்டதாரிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்கத்திய மருத்துவப் பட்டதாரிகளுக்காக (MBBS) கற்றுருப் பயிற்சிக் காலத்தின் பின்னர் திறமைப் பட்டியல் அடிப்படையில் அரச சேவையில் சேர்த்துக்கொள்ளும் முறையியலொன்று இருப்பினும் ஆயுர்வேத மருத்துவப் பட்டதாரிகளுக்கு (BAMS) அவ்வாறான தேசியக் கொள்கையொன்று இல்லாமை பெரும் அநீதியாகுமென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) அவ்வாறெனின், அத்தகைய தேசிய கொள்கையொன்றை துரிதமாக தயாரித்து ஆயுர்வேத மருத்துவப் பட்டதாரிகளின் தொழில் பிரச்சினைக்கு முறை சார்ந்த தீர்வொன்றை வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2013 நவெம்பர் 23, சனிக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

2609/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் பற்றிய விசாரணை ஆணைக்குழு அறிக்கையின் பிரதானமான அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகளின் பொழிப்பின் 70 ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரசியலமைப்புத் தொடர்பான நீதிமன்ற மீளாய்வுக்கான அரசியலமைப்பு சார்ந்த ஏற்பாடுகள் போதுமானதாக இல்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளமை தொடர்பில் இணங்குகின்றாரா என்பதையும்;

(ii) அவ்வறிக்கையிலுள்ள சட்டமொன்றின் அரசியலமைப்புக்கு இணங்கியொழுகின்ற தன்மையை உயர்நீதிமன்றத்தின் முன்னே வெற்றிகரமாக விசாரிப்பதற்காக, குறிப்பாக அவசர சட்டமூலங்கள் தொடர்பில், வழங்கப்பட்டுள்ள ஏற்புடைய காலம் மிகவும் குறுகியதாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளதை ஏற்றுக் கொள்கின்றாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி நிலைமையை பற்றி கவனம் செலுத்தி அதற்குத் தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அந் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2700/ '12

கௌரவ புத்திக பதிரண,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தொழில் நிமித்தம் வெளிநாடு சென்றவர்களுக்கு அவர்கள் ஈட்டுகின்ற வருமானத்தில் இருந்து அமெரிக்க டொலர் 20,000 பணத்தொகையை இலங்கையின் வங்கியொன்றில் வைப்புச் செய்த பின்னர் தீர்வை வரிச் சலுகையின் கீழ் மோட்டார் வாகனமொன்றை இந்நாட்டுக்கு இறக்குமதி செய்வதற்கான வசதிகள் வழங்கப்பட்டிருந்ததா என்பதையும்;

(ii) மேற்படி வசதிகள் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி (அ) (i) இல் குறிப்பிட்டுள்ளவாறு தீர்வை வரிச் சலுகையின் கீழ் வாகனமொன்றை இறக்குமதி செய்ய நிலவிய வசதிகளை மீண்டும் வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அது எப்போது என்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3111/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) கொழும்பு பங்கு பரிவர்த்தனை தொடர்பில்,

(i) தொடக்கத்திலிருந்து விசாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்ட மோசமான அக உறுப்பினர்களின் கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கையையும்;

(ii) அத்தகைய சம்பவங்களின் பெயர்கள், சம்பந்தப்பட்ட தொகைகள் மற்றும் இறுதியாக எடுக்கப்பட்ட தீர்மானம்;

(iii) 'குவித்து முடக்குதல்' போன்ற சூழ்ச்சித்திறத்துடன் சந்தையைக் கையாளுதல் இடம்பெற்ற சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை;

(iv) மேற்குறிப்பிட்ட சந்தர்ப்பங்கள் தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் பெயர்கள், விசாரணைகள் எப்போது நடாத்தப்பட்டது மற்றும் எடுக்கப்பட்ட இறுதித் தீர்மானம் என்பவற்றையும்

அவர் கூறுவாரா?

(ஆ) கடந்த 5 வருடங்களுக்கான,

(i) பங்கு பரிவர்த்தனை தொடர்பில் கம்பனிகள் சந்தேகத்திற்குள்ளாக்கப்பட்ட சந்தர்ப்பங்களின் எண்ணிக்கையையும்;

(ii) சந்தேகிக்கப்பட்ட கம்பனிகளின் பெயர்களையும்;

(iii) மேற்குறிப்பிட்ட கம்பனிகள் சந்தேகத்திற்குள்ளாக்கப்பட்டதற்கான காரணங்களையும்

அவர் கூறுவாரா?

(இ) (i) பங்கு பரிவர்த்தனையில் இடம்பெறுகின்ற சூழ்ச்சித்திறத்துடனான கையாளுகைகளிலிருந்து விடுபடுவதற்கு நடைமுறையிலுள்ள சட்டங்கள் போதுமானவையா என்பதையும்;

(ii) இன்றேல், சூழ்ச்சித்திறத்துடனான கையாளுகைகளைத் தீர்ப்பதற்கான தீர்வுகள் மற்றும் ஆலோசனைகள் என்பவற்றையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3262/ '12

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஹோமாகம- ஹபரகட தாய்,சேய் சிகிச்சை நிலையத்தின் நவீனமயமாக்கல் பணிகளுக்காக மதிப்பிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி மதிப்பீட்டுத் தொகையில், நவீனமயப்படுத்தல் பணிகளுக்காக செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி நிலையத்தை நவீனமயப்படுத்தும் பணி ஆரம்பிக்கப்பட்ட மற்றும் முடிவுறுத்தப்பட்ட திகதிகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) நவீனமயப்படுத்தல் பணிகளுக்கு முன்னர், மேற்படி தாய், சேய் சிகிச்சை நிலையத்தில் ஒரு மாதத்தினுள் நடத்தப்பட்ட தாய், சேய் சிகிச்சையளிப்புகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) அதன் நவீனமயப்படுத்தல் பணிகளின் பின்னர், இற்றைவரை ஒரு மாதத்தில் எத்தனை தாய், சேய் சிகிச்சையளிப்புகள் நடத்தப்படுகின்றன என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3290/ '12

கௌரவ ரஞ்சன் ராமநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) கொழும்பு மருதானைப் பிரதேசத்தில் அமைந்துள்ள அல் அதீஸ் வெளிநாட்டு வேலை வாய்ப்பு நிறுவனத்தின் மூலம் டபிள்யு. எம். சுரேகா த சில்வா எனும் யுவதி வேலைவாய்ப்புக்காக சவூதி அரேபியாவுக்கு அனுப்பப்பட்டுள்ளார் என்பதையும்;

(ii) அங்கு இவர் மரணமடைந்துள்ளார் என்பதையும்;

(iii) குறித்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் இவரை வெளிநாட்டுக்கு அனுப்புவதற்காக போலி பொலிஸ் அறிக்கைகள் உள்ளிட்ட போலியான தகவல்களை சமர்ப்பித்துள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) போலியான தகவல்களின் மீது மேலே குறிப்பிடப்பட்டுள்ள யுவதியை வெளிநாட்டுக்கு அனுப்புவதற்காக செயலாற்றிய மேற்படி நிறுவனத்துக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட சட்ட ரீதியான நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) சுரேகா த சில்வா என்பவர் மரணமடைந்ததற்கான காரணம் தற்போது வெளிப்படுத்தப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், குறித்த காரணம் யாது;

(iii) மேற்படி மரணம் தொடர்பிலான மரண பரிசோதனை அறிக்கையை சமர்ப்பிப்பாரா;

(iv) இறந்த யுவதியின் சார்பில் இவரது பெற்றோருக்குக் கிடைக்க வேண்டிய நஷ்டஈட்டுத் தொகையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3377/ '12

கௌரவ பி. ஹரிசன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடமத்திய மாகாணத்திலுள்ள கோட்டக் கல்விக் காரியாலயங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி கோட்டக் கல்விக் காரியாலயங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) 2012 ஆம் ஆண்டாகின்ற போது ஒவ்வொரு கோட்டக் கல்வி ஆளுகைப் பிரதேசத்திலும் மூடப்பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அனுராதபுரம் மற்றும் பொலனறுவை மாவட்டங்களில் உள்ள பதில் கடமை புரியும் அதிபர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி பதில்கடமை புரியும் அதிபர்கள் உள்ள பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) அனுராதபுரம் மற்றும் பொலனறுவை மாவட்டங்களில் ஒவ்வொரு கல்விக் கோட்டத்திலும் உள்ள அதிபர் தரம் உடைய அதிபர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி அதிபர் தரத்தைக் கொண்ட அதிபர்களில் பாடசாலைகள் வழங்கப்படாத அதிபர்களுக்கு பாடசாலைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) அதிபர் தர அதிபர் நியமனங்களைப் பெற்றுள்ள ஆசிரியர்கள் இருக்கின்ற பாடசாலைகளுக்கும் பதில் கடமையாற்றும் அதிபர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்களா என்பதையும்;

(iv) ஆமெனில், அவ்வாறான நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ள அனுராதபுரம் மற்றும் பொலனறுவை மாவட்டங்களிலுள்ள பாடசாலைகள், அவை உரித்தாகின்ற கல்விக் கோட்டங்களின் அடிப்படையில் வெவ்வேறாக யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3726/ '13

கௌரவ அநுர திசாநாயக்க,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாடு பூராவும் உள்ள பாடசாலைகளில் தாபிக்கப்பட்டுள்ள இளவல் படைப் பிரிவுகளின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி பிரிவுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் மாணவர்களின் எண்ணிக்கை அண்ணளவாக யாது;

(iii) 1985 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க மனிதவலு பயன்பாட்டுச் சட்டத்தின் பிரகாரம், இளவல் படைப் பிரிவுத் தலைமையகத்தில் சேவா வனிதா பிரிவொன்றை தாபிக்க முடியுமா;

(iv) இளவல் படைப் பிரிவின் தலைமையகத்தில் கேட்போர் கூடமொன்றை நிர்மாணிப்பதற்காக இளவல் படைப் பிரிவைச் சார்ந்த ஒரு மாணவனுக்கு ரூபா 2500 பெறுமதியான டிக்கெட்டுக்களை விற்பனை செய்யுமாறு அறிவுரை வழங்கப்பட்டுள்ளதா;

(v) இதன் மூலம் எதிர்பார்க்கப்படும் வருமானம் யாது;

(vi) இவ்விதம் டிக்கெட்டுக்களை விற்பனை செய்வதற்குள்ள சட்டரீதியான அனுமதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3750/ '13

கௌரவ சுஜீவ சேனசிங்க,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திக்ஓவிட்ட மீன்பிடித் துறைமுகத்தை நிர்மாணிப்பதற்கு மதிப்பிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி துறைமுகத்தை நிர்மாணிப்பதற்கு செலவிடப்பட்ட மொத்தப் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி துறைமுகத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி, மற்றும் நிர்மாணப் பணிகள் முடிவுறுத்தப்பட்ட திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) திக்ஓவிட்ட மீன்பிடித் துறைமுகத்தில் இயக்கக் கூடிய மீன்பிடிக் கலங்களின் வகைகள் யாவை என்பதையும்;

(ii) இங்கு இயக்கக்கூடிய மேலே குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு கலங்கள் வகையினதும் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி துறைமுகத்தின் ஊடாக நாளாந்தம் பெற்றுக்கொள்ளப்படும் மீன் உற்பத்தி எவ்வளவென்பதையும்

(iv) தற்போது மேற்படி துறைமுகத்தின் ஊடாக பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள நேரடி மற்றும் மறைமுகமான தொழில் வாய்ப்புகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி துறைமுகத்தை நிர்மாணிப்பதன் ஊடாக நிறைவேற்றிக்கொள்வதற்கு எதிர்ப்பார்க்கப்பட்ட நோக்கங்கள் யாவை என்பதையும்;

(vi) மேற்படி நோக்கங்கள் தற்போது நிறைவேறியுள்ளனவா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2619/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தில் காணப்படுகின்ற தொழிலின்மை வீதம் பிரதேச செயலாளர் பிரிவுவாரியாக வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி தொழிலின்மைக்காக வழங்கப்படும் தீர்வுகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி தீர்வுகள் மூலமாக நிறைவேற்றிக்கொள்ள எதிர்பார்க்கப்படும் இலக்குகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி இலக்குகளை நிறைவேற்றிக்கொள்ள எடுக்கும் காலம் யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3080/ '12

கௌரவ புத்திக பதிரண,— சுதேச மருத்துவத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவைக்கென புதிய சேவைப் பிரமாணமொன்று தயாரிக்கப்படுகின்றதா அல்லது தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அதன் மூலம் ஆயுர்வேத மருத்துவர்கள் குறைத்து மதிப்பிடப்படுவதாக குற்றச்சாட்டொன்று உள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(iii) ஆயுர்வேத மருத்துவர்களின் கௌரவத்தை பாதுகாக்கும் விதத்தில் புதிய சேவைப் பிரமாணத்தை திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) பாரம்பரிய சுதேச மருத்துவ பரம்பரையினரைப் பேணிக் காப்பதற்கெனக் கூறிக்கொண்டு தகைமைகள் இல்லாத நபர்களுக்கு தனியார் நிறுவனங் களினூடாக சுதேச மருத்துவ டிப்ளோமா வழங்கப்படுகின்றதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) இது ஆயுர்வேத மருத்துவக் கல்லூரிகளில் பட்டம் பெறும் மாணவ, மாணவிகளுக்கு இழைக்கப்படும் பாரிய அநீதியாகுமென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) அந்த அநீதியை நீக்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், அதற்கான திகதி யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3122/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) வவுனியா – யாழ்ப்பாணம் வீதி அபிவிருத்திக் கருத்திட்டம் தொடர்பில்;

(i) பாதையின் நீளத்தையும்;

(ii) புனரமைப்பிற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட காலத்தையும்;

(iii) நிர்மாணதாரர் ஒரு கேள்விப்பத்திர நடைமுறையினைப் பின்பற்றியா தெரிவு செய்யப்பட்டார் என்பதையும்;

(iv) அவ்வாறாயின் தெரிவு செய்யப்பட்ட விலைகூறுநரின் பெயரையும்;

(v) நிதி மூலங்களையும்;

(vi) ஒரு கிலோ மீற்றருக்கான நிர்மாணச் செலவையும்;

(vii) யாருக்காவது இழப்பீடு செலுத்தப்பட்டதா என்பதையும்;

(viii) அவ்வாறாயின் இழப்பீடு செலுத்தப்பட்ட நபர்களின் பெயர்களையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3379/ '12

கௌரவ பி. ஹரிசன்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வட மத்திய மாகாண சபையினால் நிருவகிக்கப்படுகின்ற வைத்தியசாலைகளின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஏற்ப தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு வைத்தியசாலைக்கும் அங்கீகரிக்கப்பட்டுள்ள மருத்துவர்கள், தாதிமார்கள், வைத்தியசாலை தொழிலாளர்கள் மற்றும் ஏனைய அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதியினர் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி வைத்தியசாலைகளில் நிலவுகின்ற அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதியினரின் வெற்றிடங்கள் ஒவ்வொரு வைத்தியசாலைக்கும் ஏற்ப எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2012 ஆம் ஆண்டுக்காக வடமத்திய மாகாண சபையினால் மேற்படி மாகாண சுகாதார அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி பணத்தொகையைக் கொண்டு வைத்தியசாலைகளில் மேற்கொள்ளப்பட்ட சேவைகள் யாவையென்பதையும்;

(iii) 2012 ஆம் ஆண்டில் வடமத்திய மாகாணத்தின் ஒவ்வொரு வைத்தியசாலையிலிருந்தும் சிகிச்சை பெற்றுக்கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) இவ்வருடத்தில் சிகிச்சை பெற்றுக்கொண்ட நோயாளி ஒருவருக்காக வட மத்திய மாகாண சபையினால் செலவிடப்பட்டுள்ள ஒட்டுமொத்த பணத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3728/ '13

கௌரவ அனுர திசாநாயக்க,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சில வருடங்களுக்கு முன்னர் திறந்து வைக்கப்பட்ட ரன்மினிதென்ன ரெலி சினிமா கிராமமானது, 2013 மார்ச் 05ஆம் திகதி மீண்டும் திறந்து வைக்கப்பட்டமைக்கான காரணங்கள் யாவை;

(ii) முதலாவதாகத் திறந்து வைக்கப்பட்ட தினம் முதல் 2013 மார்ச் வரை இங்கு இடம்பெற்ற கலை நிகழ்வுகள் யாவை;

(iii) ரெலி சினிமாக் கிராமம் என்ற வகையில் மேற்படி கருத்திட்டத்துக்காக ஏற்கனவே செலவழிக்கப்பட்டுள்ள மொத்தப் பணத் தொகை யாது;

(iv) மேற்படி கிராமத்தை திறந்து வைக்கின்ற இரண்டு நிகழ்வுகளுக்குமாக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் வெவ்வேறாக யாது;

(v) கலைத் துறையின் மேம்பாட்டுக்காக மேற்படி இடத்தை பயன்படுத்துவதற்கான வேலைத்திட்டம் யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3732/ '13

கௌரவ ரஞ்சன் ராமநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் மேலதிக பொதுமுகாமையாளர் பதவியை வகிப்பவரின் பெயர் யாது;

(ii) மேற்படி பதவியை வகிப்பவரினால் பெற்றுக் கொள்ளப்படும் மாதாந்த சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவராண்மையில் பொது முகாமையாளர் பதவியை வகிப்பவரின் பெயர் யாது;

(ii) மேற்படி பதவியை வகிப்பவரினால் பெறப்படும் மாதாந்த சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் எவ்வளவு;

(iii) மேற்படி பதவியை வகிப்பவருக்கும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சருக்கும் இடையே உறவு முறை காணப்படுகின்றதா;

(iv) ஆமெனின், அந்த உறவு முறை யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) ஒரே நபரால் மேலே குறிப்படப்பட்ட இரண்டு நிறுவனங்களிலும் பதவி வகிக்க முடியுமா;

(ii) இதன்படி இரண்டு நிறுவனங்களிலும் பதவி வகித்தல் தவறாக இருப்பின், அதனை திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3123/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அனுராதபுரம் - வவுனியா வீதி அபிவிருத்திக் கருத்திட்டம் தொடர்பில்;

(i) பாதையின் நீளத்தையும்;

(ii) புனரமைப்பிற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட காலத்தையும்;

(iii) நிர்மாணதாரர் ஒரு கேள்விப்பத்திர நடைமுறையினைப் பின்பற்றியா தெரிவு செய்யப்பட்டார் என்பதையும்;

(iv) அவ்வாறாயின் தெரிவு செய்யப்பட்ட விலைகூறுநரின் பெயரையும்;

(v) நிதி மூலங்களையும்;

(vi) ஒரு கிலோ மீற்றருக்கான நிர்மாணச் செலவையும்;

(vii) யாருக்காவது இழப்பீடு செலுத்தப்பட்டதா என்பதையும்;

(viii) அவ்வாறாயின் இழப்பீடு செலுத்தப்பட்ட நபர்களின் பெயர்களையும்;

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

## (2013 நவெம்பர் 23, சனிக்கிழமை)

2303/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) 1990 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஆம் ஆண்டு வரையான காலத்தில் டெங்கு நோய் தொற்று, வாகன விபத்துகள், தற்கொலை, உணவு நஞ்சாகுதல், உடல் அல்லது உள ரீதியான துன்புறுத்தல்களுக்கு ஆளாகுதல் ஆகிய காரணங்களால் வருடாந்தம் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்ட அல்லது மரணமடைந்த பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கையும், அவர்கள் கல்வி பயின்ற பாடசாலைகளும் தனித்தனியே யாவை என்பதையும்;

(ii) கடந்த வருடத்தில் பல்வேறு தவறுகளுக்காக குற்றஞ்சுமத்தப்பட்டு சிறுவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை, பிள்ளையின் வயதெல்லை மற்றும் பாடசாலைக்கு ஏற்ப தனித்தனியே யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2905/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் புத்த சாசன மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சுதந்திரம் பெற்றதிலிருந்து இற்றைவரை இலங்கையை மாறி மாறி ஆட்செய்துகொண்டு வருகின்ற அரசாங்கங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேலே (i) இல் குறிப்பிடப்படும் ஒவ்வொரு அரசாங்கத்தினதும் அமைச்சரவையின் அங்கத்தவர்களின் எண்ணிக்கை தனித்தனியாக ஆரம்பம் முதல் முடிவு வரை எத்தனை என்பதையும்;

(iii) 1985, 1995, 2005 மற்றும் 2012ஆம் ஆண்டுகளில் ஒவ்வொரு அமைச்சருக்குமான சராசரிச் செலவு தனித்தனியாக எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மாகாண சபைச் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளவாறு அமைச்சரவையிலுள்ள அமைச்சர்களின் எண்ணிக்கை சட்டத்தின் மூலம் ஏன் மட்டுப்படுத்தப்படவில்லை என்பதையும்;

(ii) அமைச்சரவையிலுள்ள அமைச்சர்களின் எண்ணிக்கையின் அதிகரிப்பு நாட்டுக்கு உதவியுள்ளதா அல்லது நாட்டின் மீது மேலும் சுமையைச் சுமத்தியுள்ளதா என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3289/ '12

கௌரவ அஜித் குமார,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தெற்கு கடுகதி நெடுஞ்சாலையை நிர்மாணிக்கின்ற கருத்திட்டம் காரணமாக காலி மாவட்டத்தினுள் மூடப்பட்டுள்ள அல்லது நிர்மாணிப்பு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கு உரித்தான வீதிகளின் விபரமான தகவல்கள் உள்ளூராட்சி மன்ற மட்டத்தில் தனித்தனியே யாவை என்பதையும்;

(ii) மேற்படி வீதிகளுக்கு ஏற்பட்டுள்ள சேதங்களுக்காக தெற்கு கடுகதி நெடுஞ்சாலை கருத்திட்டத்தினால் அல்லது அரசாங்கத்தின் வேறு நிறுவனமொன்றினால் மேற்படி உள்ளூராட்சி மன்றங்களுக்கு நிதி ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி வழங்கப்பட்டுள்ள நிதியைப் பயன்படுத்தி அந்தந்த உள்ளூராட்சி மன்றங்கள் குறித்த வீதிகளை அமைத்துள்ளனவா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி அ (ii) இற்கமைய நிதி ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருப்பின்,

(i) பணம் வழங்கப்பட்டுள்ள நிறுவனம்;

(ii) பணம் வழங்கப்பட்டுள்ள ஏற்புடைய வீதிகள்;

(iii) ஒவ்வொரு வீதிக்காகவும் வழங்கப்பட்ட பணத்தொகை மற்றும் உரிய திகதி

யாவை என்பதை ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத்திற்கும் அமைய தனித்தனியே அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2013 நவெம்பர் 25, திங்கட்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

2620/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தில் காணப்படும் தொழிலின்மை வீதம், பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) இத் தொழிலின்மைப் பிரச்சினைக்கு வழங்கப்படும் தீர்வுகள் யாவை என்பதையும்;

(iii) இத் தீர்வுகளினூடாக அடைந்துகொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற இலக்குகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி இலக்குகளை அடைந்துகொள்வதற்குத் தேவைப்படும் காலம் எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2998/ '12

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) 2009 முதல் 2012 வரையிலான காலப்பகுதியில்,

(i) ஒவ்வொரு மாவட்ட ரீதியிலும் இடம்பெற்றுள்ள சிறுவர் துர்நடத்தை மற்றும் துஷ்பிரயோக சம்பவங்களின் எண்ணிக்கை;

(ii) மேற்படி சம்பவங்களின் இயல்புக்கு ஏற்ப ஒவ்வொரு சம்பவத்தினதும் எண்ணிக்கை;

(iii) குறித்த சம்பவங்களுக்கு இலக்காகிய பெண் பிள்ளைகளினதும் ஆண் பிள்ளைகளினதும் எண்ணிக்கை;

வருடாந்த ரீதியில் வெவ்வேறாக எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி சம்பவங்களுக்கு இலக்கான பிள்ளைகளில் தாய் அல்லது தந்தை வெளிநாடு சென்றுள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3081/ '12

கௌரவ புத்திக பதிரண,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2006 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க புகையிலை மற்றும் மதுசாரம் பற்றிய தேசிய அதிகாரசபை சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்படவுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி நடவடிக்கையை தாமதப்படுத்துவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) அதற்கான தடைகளை நீக்கிவிட்டு சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2012 ஆம் ஆண்டு உள்ளடங்களாக கடந்த 8 ஆண்டு காலப்பகுதியில் புகை பிடித்தல் காரணமாக உயிரிழந்தோரின் எண்ணிக்கை வருடாந்தம் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) புகை பிடித்தல் காரணமாக புற்றுநோய் அல்லது வேறு நோய்களால் பாதிக்கப்படும் நபரொருவருக்கு அரசாங்கத்தினால் செலவிட நேரிடுகின்ற பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) புகை பிடித்தல் காரணமாக நோயுற்ற நபர்களுக்கு 2005 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஒதுக்கப்பட்ட மருத்துவமனை கட்டில்களின் எண்ணிக்கை வருடாந்தம் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) 2012 ஆம் ஆண்டு அரச வரவு செலவுத் திட்டத்தின் மூலம் சுகாதாரத்திற்காக ஒதுக்கப்பட்ட பணத் தொகையில் புகை பிடித்தல் காரணமாக புற்றுநோய் அல்லது வேறு நோய்களினால் பாதிக்கப்பட்ட நோயாளர்களுக்காக ஒதுக்கப்பட்ட பணத் தொகையின் சதவீதம் எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி பணத் தொகை கடந்த வருடத்துக்கு ஒப்பீட்டளவில் அதிகரித்துள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3124/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) திருகோணமலை - அனுராதபுரம் வீதி அபிவிருத்திக் கருத்திட்டம் தொடர்பில்,

(i) பாதையின் நீளத்தையும்;

(ii) புனரமைப்பிற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட காலத்தையும்;

(iii) நிர்மாணதாரர் ஒரு கேள்விப்பத்திர நடைமுறையினைப் பின்பற்றியா தெரிவு செய்யப்பட்டார் என்பதையும்;

(iv) அவ்வாறாயின் தெரிவு செய்யப்பட்ட விலைகூறுநரின் பெயரையும்;

(v) நிதி மூலங்களையும்;

(vi) ஒரு கிலோ மீற்றருக்கான நிர்மாணச் செலவையும்;

(vii) யாருக்காவது இழப்பீடு செலுத்தப்பட்டதா என்பதையும்;

(viii) அவ்வாறாயின் இழப்பீடு செலுத்தப்பட்ட நபர்களின் பெயர்களையும்;

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3143 / '12

கௌரவ ஆர்.எம். ரஞ்சித் மத்தும பண்டார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) சுமார் நாற்பத்து மூன்று இலட்சம் பாடசாலை மாணவர்களில் உயர் கல்விக்கான வரத்தை பெறுகின்றவர்களின் சதவீதம் யாதென்பதையும்;

(ii) உலகத்தின் ஏனைய நாடுகளுக்கு ஒப்பீட்டளவில் மேற்படி சதவீதமானது ஆகக் குறைந்த மட்டத்தில் உள்ளதென்பதை எற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) கல்விக்காக 2012 ஆம் ஆண்டைத் தவிர கடந்த 20 ஆண்டுகளில் செலவிடப்பட்ட பணத் தொகை அந்தந்த வருடங்களின் மொத்த உள்நாட்டு வருமானத்தின் சதவீதமாக தனித் தனியாக எவ்வளவென்பதையும்;

(iv) 2012 ஆம் ஆண்டில் கல்விக்காக அரசாங்கம் ஒதுக்கியுள்ள பணத் தொகை மொத்த உள்நாட்டு வருமானத்தில் எத்தனை சதவீதமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) பாடசாலைக் கல்விக்காக பெற்றோர்களிடமிருந்து பணம் சேகரித்தல் தற்போது பொதுவாக நடைமுறையிலுள்ள செயற்பாடாகும் என்பதையும்;

(ii) அரசாங்கம் கல்விக்கு போதியளவு பணத்தை ஒதுக்காமையே இதற்கான காரணம் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இன்றேல், ஏன்?

3196/ '12

கௌரவ ரஞ்சன் ராமநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (5)

(அ) (i) இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்யப்பட்டு, சவுதி அரேபியாவில் வீட்டுப் பணிப் பெண்களாகவும் மற்றும் பிற வேலைவாய்ப்புகளின் நிமித்தமும் சென்றுள்ள பெரும் எண்ணிக்கையிலான இலங்கைப் பெண்களும் ஆண்களும் கடுமையாக துன்புற்று தற்போது அந்நாட்டில் "ஒலாயா" தடுப்பு முகாமிலும் "ஜித்தா" பாலத்திற்குக் கீழும் தங்கியுள்ளனர் என்பதையும்;

(ii) சம்பந்தப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் பொருத்தமான தொழில் அமைவிடங்கள் கிடைக்காமை, துன்புறுத்தல்கள் மற்றும் ஊதியம் செலுத்தப்படாமை போன்ற பல்வேறு விடயங்கள் அதற்குக் காரணமாய் அமைந்துள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி இலங்கையர்களை உடனடியாக இந் நாட்டிற்கு அழைத்து வர நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) இவர்களது குடும்பங்களின் பாதுகாப்பு, நலனோம்புகை மற்றும் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு துரித கதியில் நடைமுறைப்படுத்தக் கூடிய நடைமுறைச் சாத்தியமான வேலைத்திட்டமொன்றை அமுல்படுத்த நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3423/ '13

கௌரவ பி. ஹரிசன்,— வனசீவராசிகள் வளப் பேணுகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையினுள் இன்று வரை இனங்காணப்பட்டுள்ள பறவை இனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) இவற்றுள் இனங்காணப்பட்டுள்ள இலங்கைக்கே உரித்தான பறவை இனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) இலங்கைக்கே உரித்தான பறவைகளில் அழிவடைந்துள்ள அல்லது அழிவடையும் ஆபத்துக்கு உள்ளாகியுள்ள பறவை இனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி அழிவடையும் ஆபத்துக்கு உள்ளாகியுள்ள பறவை இனங்களை பாதுகாப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3469/ '13

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை சனாதிபதியவர்கள் பங்கேற்றுள்ள வெளிநாட்டு சுற்றுப்பயணங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி சுற்றுப்பயணங்கள் மேற்கொள்ளப்பட்ட நாடுகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு சுற்றுப் பயணத்திற்காகவும் செலவிடப்பட்டுள்ள மொத்தத் தொகை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு சுற்றுப்பயணத்தின்போதும் சனாதிபதியவர்களுடன் பயணம் செய்தோரின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு சுற்றுப்பயணத்தின்போதும் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் மற்றும் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகள் யாவை என்பதையும்;

(vi) மேற்படி ஒவ்வொரு சுற்றுப்பயணம், பேச்சுவார்த்தை மற்றும் உடன்படிக்கை மூலம் நாட்டுக்குக் கிடைத்த அல்லது கிடைத்துக்கொண்டிருக்கின்ற அல்லது கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகின்ற நன்மைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3731/ '13

கௌரவ அனுர திசாநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) பிலியந்தலை வலயக் கல்விப் பணிப்பாளரின் கையொப்பத்துடன் 2012.02.20 ஆம் திகதி வேவல ஆனந்த சமரகோன் வித்தியாலயத்தின் அதிபருக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் மூலம்,

(i) மேற்படி பாடசாலையில் 5 ஆம் ஆண்டில் சித்தியடைகின்ற மாணவர்களை மாம்பே தர்மராஜ வித்தியாலயத்திற்கு அனுமதிக்க உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) மகிந்த சிந்தனை எதிர்காலத்திற்கான தொலைநோக்கின் கீழ் வேவல ஆனந்த சமரகோன் வித்தியாலயத்தின் அபிவிருத்திக்காக பெருமளவு நிதியை அரசாங்கம் செலவிட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) வேவல ஆனந்த சமரகோன் வித்தியாலயத்தின் அபிவிருத்திக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள நிதி எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி நிதி ஈடுபடுத்தப்பட்டுள்ள பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி நிதியை யார், எந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வழங்கியுள்ளார்கள் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3751/ '13

கௌரவ சுஜீவ சேனசிங்க,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2013 பெப்ரவரி 23 ஆம் திகதியின் பின்னர் சுத்திகரிக்கப்பட்டு சந்தைக்கு விநியோகிப்பதற்காக இறக்குமதி செய்யப்பட்ட மசகு எண்ணெய் ஒரு பீப்பாவின் விலை இலங்கை ரூபாவில் எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி மசகு எண்ணெய் ஒரு பீப்பாவின் சுத்திகரிப்புச் செலவினம் எவ்வளவென்பதையும்;

(iii) சுத்திகரிக்கப்பட்ட பெற்றோல், டீசல். மண்ணெண்ணெய் ஒரு லீற்றருக்கான வரி மற்றும் இலாபத்தை சேர்ப்பதற்கு முன்னர் ஏற்கப்படும் செலவினம் தனித்தனியே எவ்வளவென்பதயும்;

(iv) டீசல் மற்றும் மண்ணெண்ணெய் ஒரு லீற்றரின் விலையில் சேர்க்கப்பட்ட வரி மற்றும் இலாபம் தனித்தனியே எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) 2013 பெப்ரவரி 23 ஆம் திகதி தொடக்கம் விற்பனைக்காக இறக்குமதி செய்யப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட டீசல் மற்றும் மண்ணெண்ணெய் ஒரு லீற்றருக்கு செலவிடப்பட்ட பணத் தொகை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(ii) 2013 பெப்ரவரி 24 ஆம் திகதி தொடக்கம் பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் ஒரு லீற்றறின் விற்பனை விலை தனித்தனியே எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி எரிபொருள் விலைகளை நிர்ணயிப்பதற்கு, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவ வினைத்திறனின்மை, விரயம் மற்றும் ஊழல்களே காரணமாகும் என்பதை ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(ii) இவ்வாறான நிலைமையினை சீராக்கி நியாயமான விலையில் எரிபொருளை விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2621/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) 2009, 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் கிழக்கின் உதயம் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாணத்தில் செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் யாவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இந் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு

(i) பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் செலவு செய்யப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) விடய அடிப்படையில் செலவு செய்யப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்

வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்காக இந் நிகழ்ச்சித் திட்டங்கள் போதுமானதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3082/ '12

கௌரவ புத்திக பதிரண,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2005 ஆம் ஆண்டு முதல் 2012ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில்,

(i) மதுபானப் பாவனையினால் நோயாளர்களானவர்களின் எண்ணிக்கை;

(ii) மதுபானப் பாவனையினால் நோயாளர்களாகி இறந்தவர்களின் எண்ணிக்கை;

(iii) மதுபானப் பாவனையினால் நேர்ந்த வாகன விபத்துக்கள் காரணமாக இறந்தவர்களின் எண்ணிக்கை;

(iv) அரசாங்கம் சுகாதாரத்துக்காக செலவிடும் பணத்தில், மதுபானப் பாவனையினால் நோய்வாய்ப்படுவோருக்காக செலவிடும் பணத்தொகை

வருடாந்தம் வெவ்வேறாக யாது என்பதை அவர் இச்சபைக்குஅறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3424/ '13

கௌரவ பி.ஹரிசன்,— வனசீவராசிகள் வளப் பேணுகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையினுள் இன்று வரை இனங்காணப்பட்டுள்ள வண்ணத்துப்பூச்சி இனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) இவற்றுள் இனங்காணப்பட்டுள்ள இலங்கைக்கே உரித்தான வண்ணத்துப்பூச்சி இனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) இலங்கைக்கே உரித்தான வண்ணத்துப்பூச்சிகளில் அழிவடைந்துள்ள அல்லது அழிவடையும் ஆபத்துக்கு உள்ளாகியுள்ள வண்ணத்துப்பூச்சி இனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி அழிவடையும் ஆபத்துக்கு உள்ளாகியுள்ள வண்ணத்துப்பூச்சி இனங்களை பாதுகாப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3637/ '13

கௌரவ ரவி கருணாநாயக்க,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) உத்தேசிக்கப்பட்ட சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையை மேம்படுத்துவதற்காக நவீனமயமாக்கல் தொடர்பாக,

(i) தற்போதைய நிலைமை;

(ii) பயன்படுத்தப்படுகின்ற தொழில்நுட்பம்;

(iii) சம்பந்தப்பட்ட நாடு;

(iv) குறிப்பிட்ட நவீனமயமாக்கல் ஏன் இன்னும் மேற்கொள்ளப்படவில்லை

ஆகியவற்றை அவர் கூறுவாரா?

(ஆ) (i) 2009 ஆம் ஆண்டு ஈரானிய அரசாங்கத்தால் கடனாக வழங்க உறுதியளிக்கப்பட்ட 1.5 பில்லியன் அமெரிக்க டொலர்களை ஏன் சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நவீனமயமாக்கலுக்காகப் பயன்படுத்தவில்லை என்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட கடனைத் திரும்பச் செலுத்தும் காலம்

ஆகியவற்றையும் அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3735/ '13

கௌரவ அனுர திசாநாயக்க,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2012 ஆம் ஆண்டு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின், பிரதம நிறைவேற்றுநர் பதவிக்கு,

(i) ஆட்சேர்ப்பதற்காக நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பது தொடர்பாக பத்திரிகை அறிவித்தலொன்று வெளியிடப்பட்டதா என்பதையும்;

(ii) மேற்படி பதவிக்கு ஆட்சேர்ப்பது தொடர்பாக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், அதற்கமைய விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தவர்கள் யாவர் என்பதையும்;

(iv) மேற்படி அழைப்புக்கு அமைய, தெரிவு செய்யப்பட்ட ஆட்கள் சேவைக்கு ஆட்சேர்க்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தற்போதைய முகாமைத்துவப் பணிப்பாளரின் பெயர் யாது என்பதையும்;

(ii) இவரின் தகைமைகள் யாவை என்பதையும்;

(iii) இவர் சேவைக்கு ஆட்சேர்க்கப்பட்ட திகதி யாது என்பதையும்;

(iv) இவரின் சம்பள அளவுத்திட்டங்கள் யாவை என்பதையும்

தனித்தனியே அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2013 நவெம்பர் 26, செவ்வாய்க்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

2451/ '12

கௌரவ புத்திக பதிரண,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நில்வள கங்கை கருத்திட்டத்தின் மூன்றாவது கட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் தற்போது பாதுகாப்பற்ற பிரதேசத்தில் காணப்படும் பெருமளவிலான காணிகளை அபிவிருத்தி செய்ய முடியுமென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) மேற்படி கட்டத்தை நடைமுறைப்படுத்தத் தேவையான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) அதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகள் தற்போது ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) அவ்வாறு ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகை யாதென்பதையும்;

(v) அதற்கான நிதியை வழங்கும் நாடுகள் அல்லது நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(vi) அவ்வாறாயின், மேற்படி கருத்திட்டம் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2622/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2009, 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் வடக்கின் வசந்தம் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வட மாகாணத்தில் செயற்படுத்தப்பட்ட வேலைத் திட்டங்கள் யாவையென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி வேலைத் திட்டத்துக்காக,

(i) பிரதேச செயலக மட்டத்தில் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) விடய மட்டத்தில் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) வட மாகாணத்தின் அபிவிருத்திற்காக மேற்படி வேலைத்திட்டங்கள் போதுமானதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3125/'12

கௌரவ ரவி கருணாநாயக்க,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) புத்தளம் -அனுராதபுரம் வீதி அபிவிருத்திக் கருத்திட்டம் தொடர்பில்,

(i) பாதையின் நீளத்தையும்;

(ii) புனரமைப்பிற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட காலத்தையும்;

(iii) நிர்மாணதாரர் ஒரு கேள்விப்பத்திர நடைமுறையினைப் பின்பற்றியா தெரிவு செய்யப்பட்டார் என்பதையும்;

(iv) அவ்வாறாயின் தெரிவு செய்யப்பட்ட விலைகூறுநரின் பெயரையும்;

(v) நிதி மூலங்களையும்;

(vi) ஒரு கிலோ மீற்றருக்கான நிர்மாணச் செலவையும்;

(vii) யாருக்காவது இழப்பீடு செலுத்தப்பட்டதா என்பதையும்;

(viii) அவ்வாறாயின் இழப்பீடு செலுத்தப்பட்ட நபர்களின் பெயர்களையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3425/ '13

கௌரவ பி. ஹரிசன்,— வனசீவராசிகள் வளப் பேணுகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையினுள் இன்று வரை இனங்காணப்பட்டுள்ள தேனீ இனங்களின் எண்ணிக்கை யாது;

(ii) இவற்றுள் இலங்கைக்கே உரித்தானதென இனங்காணப்பட்டுள்ள தேனீ இனங்களின் எண்ணிக்கை யாது;

(iii) இலங்கைக்கே உரித்தான தேனீ இனங்களில் அழிவடைந்துள்ள அல்லது அழிவடையும் ஆபத்துக்கு உள்ளாகியுள்ள தேனீ இனங்களின் எண்ணிக்கை யாது;

(iv) மேற்படி அழிவடையும் ஆபத்துக்கு உள்ளாகியுள்ள தேனீ இனங்களை பாதுகாப்பதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3698/'13

கௌரவ அனுர திசாநாயக்க,— வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2012 ஆம் ஆண்டு மின்சாரக் கட்டணப் பட்டியலில் எரிபொருள் சீராக்கல் கட்டணம் சேர்க்கப்பட்டு அறவிடப்பட்டதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி எரிபொருள் சீராக்கல் கட்டணம் விதிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி எரிபொருள் சீராக்கல் கட்டணத்தை அறவிடுவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி எரிபொருள் சீராக்கல் கட்டணம் அறவிடப்பட்ட தினம் முதல் ஒவ்வொரு மாதத்திலும் மின்சார சபை பெற்ற வருமானம் வெவ்வேறாக யாதென்பதையும்;

(v) எரிபொருள் சீராக்கல் கட்டணம் தற்போதும் அறவிடப்படுகின்றதா என்பதையும்;

(vi) இன்றேல், அதனை அறவிடுதல் நிறுத்தப்பட்ட திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3734/ '13

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— தொழில்நுட்ப, ஆராய்ச்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இந்தியாவில் தமிழ் நாடு மாநிலத்திலுள்ள கூடங்குளம் அணுமின் நிலையத்தில் அணுக்கதிர் கசிவு ஏற்படுமாயின், அது தொடர்பாக இலங்கை மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) அவ்வாறான ஒரு நிலைமையை எதிர்கொள்வதற்கு இலங்கை பாதுகாப்பான முன்னேற்பாடுகளை கொண்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், குறித்த பாதுகாப்பு முறையியல் யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) சர்வதேச அணுசக்தி முகவராண்மைச் சட்டவரம்பிற்கமைய, மேலே குறிப்பிட்டுள்ள அணுமின் நிலையத்தை அமைக்கும்போது, அதற்கு 500 கி.மீ தொலைவில் அமைந்துள்ள இலங்கையை விழிப்புணர்வூட்டுதலும் அதனுடன் தொடர்புடைய இணக்கப்பாட்டைப் பெறுதலும் நடைபெற்றுள்ளதா என்பதையும்;

(ii) இலங்கையின் அங்கீகாரம் அதற்காக வழங்கப்பட்டிருப்பின், அதற்கு ஏற்புடையதாக்கப்பட்ட நிபந்தனைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3747/ '13

கௌரவ அஜித் பி. பெரேரா,— புனர்வாழ்வளிப்பு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2007ஆம் ஆண்டு முதல் 2012ஆம் ஆண்டு வரை பெண் வன்புணர்ச்சிக் குற்றத்திற்கு குற்றவாளியாக்கப்பட்டு சிறையிலிடப்பட்டவர்களின் எண்ணிக்கை வருடாந்த ரீதியில் வெவ்வேறாக யாது என்பதையும்;

(ii) சிறையிலிடப்படுகின்றபோது அவர்களது வயதிற்கு ஏற்ப, மேற்படி நபர்களின் வகைப்படுத்தலொன்றை வழங்குவாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3934/ '13

கௌரவ சுஜீவ சேனசிங்க,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிலோன் சிப்பிங் லைன்ஸ் நிறுவனத்திற்கு சொந்தமான கப்பல்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) இவற்றில் நிதிக் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள கப்பல்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) இக்கப்பல்கள் வழங்கப்பட்டுள்ளவர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iv) இதனூடாக தற்போது ஈட்டப்பட்டுள்ள குத்தகை வருமானம் எவ்வளவென்பதையும்

(v) சிலோன் சிப்பிங் லைன்ஸ் நிறுவனத்திற்கு சொந்தமான சகல கப்பல்களிலிருந்தும் பெறப்படும் வருமானம் எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2627/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் கடற்றொழிலை அபிவிருத்தி செய்வதற்காக தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(ii) 2005 முதல் 2011 ஆம் ஆண்டு வரை கடற்றொழில் துறைக்காக வருடாந்தம் செலவிடப்பட்டுள்ள பணத் தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) ஒதுக்கப்பட்ட பணத் தொகை அந்தந்த வகைகளுக்கு போதுமானதாக அமைந்ததா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3126/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தம்புள்ள - அனுராதபுரம் வீதி அபிவிருத்திக் கருத்திட்டம் தொடர்பில்,

(i) பாதையின் நீளத்தையும்;

(ii) புனரமைப்பிற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட காலத்தையும்;

(iii) நிர்மாணதாரர் ஒரு கேள்விப்பத்திர நடைமுறையினைப் பின்பற்றியா தெரிவு செய்யப்பட்டார் என்பதையும்;

(iv) அவ்வாறாயின் தெரிவு செய்யப்பட்ட விலைகூறுநரின் பெயரையும்;

(v) நிதி மூலங்களையும்;

(vi) ஒரு கிலோ மீற்றருக்கான நிர்மாணச் செலவையும்;

(vii) யாருக்காவது இழப்பீடு செலுத்தப்பட்டதா என்பதையும்;

(viii) அவ்வாறாயின் இழப்பீடு செலுத்தப்பட்ட நபர்களின் பெயர்களையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3293/ '12

கௌரவ புத்திக பதிரண,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கையில் ஊடகவியலாளர்களுக்கு நேரிடுகின்ற இடையூறுகள் குறித்து ஆராய்வதற்காக 2008 ஜூன் மாதத்தில் பண்டாரநாயக்க மாநாட்டு மண்டப அறை இலக்கம் 2/08 இல் இளைஞர் அலுவல்கள், திறன் அபிவிருத்தி அமைச்சரின் தலைமையில் அமைச்சர்களின் உபகுழுவொன்று நியமிக்கப்பட்டது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) தற்போது மேற்படி உபகுழு இரத்துச் செய்யப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், இதற்கான காரணங்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி உபகுழுவின் நடவடிக்கைகளை நடத்திச் சென்ற கட்டிடத்திற்கான வாடகை, தொலைபேசிக் கட்டணப் பட்டியல், மின்சாரக் கட்டணப் பட்டியல் என்பவற்றுக்காக செலவழிக்கப்பட்ட பணத்தொகை வருடாந்த ரீதியில் வெவ்வேறாக யாது;

(ii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்ட செலவுகளுக்கு மேலதிகமாக ஏற்கப்பட்ட ஏனைய செலவுகளுக்காக செலவிடப்பட்ட மொத்தப் பணத்தொகை வருடாந்த ரீதியில் வெவ்வேறாக எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிவாரா?

(ஈ) (i) மேற்படி செலவுகளை மேற்கொண்ட அமைச்சுக்கள் மற்றும் அவற்றுக்கு உரிய செலவுத் தலைப்புக்கள் யாவை;

(ii) மேலே குறிப்பிடப்பட்ட கொடுப்பனவுகள் இதுவரையில் மேற்கொள்ளப் படவில்லையெனின், இக்கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும் திகதி யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

3433/ '13

கௌரவ பி. ஹரிசன்,— அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2012 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு மற்றும் மண்சரிவுகளினால் அகதிகளாகிய குடும்பங்களின் எண்ணிக்கை மற்றும் அக்குடும்பங்களைச் சேர்ந்த மொத்த அங்கத்தவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) ஒவ்வொரு மாவட்டம் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு வாரியாக தனித்தனியாக செலவு செய்யப்பட்ட மேற்படி பணத் தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) வெள்ளப்பெருக்கின் காரணமாக இடம்பெயர்ந்த ஒருவருக்காக சமைத்த உணவினை வழங்குவதற்கு நாள் ஒன்றுக்காக ஒதுக்கப்படும் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) இப் பணத்தொகை ஒதுக்கப்படும் நாட்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி அனர்த்தங்களுக்கு உள்ளாகிய குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு பால்மா பெற்றுக்கொடுப்பதற்காக நிதி ஒதுக்கப்பட்டதா என்பதையும்;

(iv) மேற்படி குடும்பங்களுக்கு உலர் நிவாரணம் வழங்கப்பட்டதா என்பதையும்;

(v) ஆமெனில், அதற்காக ஒதுக்கப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(vi) எவ்வளவு காலத்திற்காக இப்பணத் தொகைகள் ஒதுக்கப்பட்டன என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) வெள்ளத்தினால் சேதமடைகின்ற அனுமதியற்ற குடியிருப்பாளர்களின் வீடுகள் சார்பாக நட்டஈடு வழங்கப்பட்டதா என்பதையும்;

(ii) ஆமெனில் அப்பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) நித்தமும் வெள்ளப் பெருக்கு அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகும் ஆறுகள், வாய்க்கால்கள், சிற்றாறுகள் மற்றும் குளங்களின் பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களிலிலுள்ள குடியிருப்பாளர்களை மாற்று இடங்களில் குடியமர்த்துவதற்கான வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3578/ '13

கௌரவ சுஜீவ சேனசிங்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மத்திய வங்கியின் தற்போதைய வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குத் தொகை எவ்வளவு;

(ii) தற்போதைய தலைக்குரிய படுகடன் தொகை எவ்வளவு;

(iii) மொத்த படுகடன் சுமை எவ்வளவு;

(iv) பொதுப் படுகடன் சுமை எவ்வளவு

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3699/ '13

கௌரவ அனுர திசாநாயக்க,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2013 பெப்ரவரி மாதத்தில் ஒரு மெட்றிக் தொன் பெற்றோல் இறக்குமதி செய்யப்பட்ட சராசரி விலை (CIF VALUE);

(ii) மெட்றிக் தொன் ஒன்றில் அண்ணளவாக அடங்கும் பெற்றோல் லீற்றர்களின் எண்ணிக்கை;

(iii) இதற்கமைய, 2013 பெப்ரவரி மாதத்தில் துறைமுகத்திலிருந்து இறக்குகையில் நிலவிய ஒரு லீற்றர் பெற்றோலின் சராசரி விலை;

(iv) ஒரு லீற்றர் பெற்றோலுக்காக அரசாங்கம் அறவிடும் ஒவ்வொரு வரியினதும் அளவுகள்;

(v) ஒரு லீற்றர் பெற்றோலிலிருந்து இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பெறுகின்ற இலாபம்;

(vi) ஒரு லீற்றர் பெற்றோலை விநியோகிப்பதற்கான செலவு மற்றும் விற்பனையின் மூலம் எரிபொருள் நிரப்பும் நிலையம் பெறும் இலாபம்;

எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3748/ '13

கௌரவ அஜித் பி. பெரேரா,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் மதுபான பாவனையை குறைக்க வேண்டும் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா;

(ii) ஆமெனில், மதுபான பாவனையை குறைப்பதற்காக அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(iii) தற்போது பாவனையில் உள்ள மதுபான லீற்றர்களின் அளவை கவனத்திற்கொள்ளும் போது நாட்டினுள் மதுபான பாவனையை குறைக்கும் கொள்கை வெற்றியளித்துள்ளதா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2013 நவெம்பர் 27, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2460/ '12

கௌரவ,— புத்திக பதிரண, நீர்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நில்வலா கங்கையின் மாத்தறை மஹாநாம பாலத்திலிருந்து கடல் வரையான பகுதியை ஆழமாக்கும் திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திட்டத்தின் மூலம் நிறைவேற்ற உத்தேசித்துள்ள நோக்கங்கள் யாவை என்பதையும்;

(iii) அதற்காக செலவிட உத்தேசித்துள்ள பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) அதற்குத் தேவையான நிதி பெற்றுக் கொள்ளப்படுவது உள்நாட்டு நிதியங்களிலிருந்தா அல்லது வெளிநாட்டு நிதியங்களிலிருந்தா என்பதையும்;

(v) வெளிநாட்டு நிதி ஏற்பாடுகள் பெற்றுக் கொள்ளப்படுமாயின், அந்நாடு அல்லது நிறுவனங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2639/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மஹிந்த சிந்தனை எதிர்காலத்திற்கான தொலைநோக்கில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு 2012 ஆம் ஆண்டில் அனைவருக்கும் மின்சாரத்தை வழங்கும் நோக்கத்தை அடையப்பெறும் வரை மண்ணெண்ணெய் மூலம் வெளிச்சத்தை பெற்றுக்கொள்ளும் ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஒரு மாதத்திற்கு 5 லீற்றர் மண்ணெண்ணெய் இலவசமாக வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்குறிப்பிடப்பட்டவாறு ஒரு மாதத்திற்கு 5 லீற்றர் மண்ணெண்ணெய் வீதம் வழங்கப்படும் குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3128/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) திருகோணமலை -மட்டக்களப்பு வீதி அபிவிருத்திக் கருத்திட்டம் தொடர்பில்,

(i) பாதையின் நீளத்தையும்;

(ii) புனரமைப்பிற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட காலத்தையும்;

(iii) ஒப்பந்தகாரர் ஒரு கேள்விப்பத்திர நடைமுறையினைப் பின்பற்றியா தெரிவு செய்யப்பட்டார் என்பதையும்;

(iv) அவ்வாறாயின் தெரிவு செய்யப்பட்ட விலைகூறுநரின் பெயரையும்;

(v) நிதி மூலங்களையும்;

(vi) ஒரு கிலோ மீற்றருக்கான நிர்மாணச் செலவையும்;

(vii) யாருக்காவது இழப்பீடு செலுத்தப்பட்டதா என்பதையும்

(viii) அவ்வாறாயின் இழப்பீடு செலுத்தப்பட்ட நபர்களின் பெயர்களையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3368/ '12

கௌரவ பி. ஹரிசன்,— சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் உள்ள சிறுவர் இல்லங்களின் எண்ணிக்கை;

(ii) மேற்படி சிறுவர் இல்லங்களில் உள்ள சிறார்களின் எண்ணிக்கை;

(iii) இவர்களின் பாதுகாப்புக்காக 2013 வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள ஒட்டுமொத்தப் பணத் தொகை;

(iv) நிறுவனங்களில் உள்ள பிள்ளைகளின் திறமைகளை விருத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்டுள்ள மொத்தப் பணத்தொகை;

(v) இதற்காக ஒரு பிள்ளைக்கென ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகை

எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3612/ '13

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011 ஆம் ஆண்டில் கல்வியியல் கல்லூரிகளுக்கு அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இறுதியாக 18 கல்வியியல் கல்லூரிகளுக்கும் மாணவர் குழுக்கள் அனுமதிக்கப்பட்ட திகதிகள் ஒவ்வொரு கல்வியியல் கல்லூரி ரீதியாகவும் தனித் தனியாக யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2011 ஆம் ஆண்டில் உயர் தரத்தில் சித்தியடைந்து ஒவ்வொரு கல்வியியல் கல்லூரிக்கும் தகுதி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை தனித் தனியாக எவ்வளவென்பதையும்;

(ii) இவர்கள் அனுமதிக்கப்பட்ட திகதிகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி அனுமதி தொடர்பான வர்த்தமானி அறிவித்தில் வெளியிடப்பட்ட திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3937/ '13

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "LTL Projects (Pvt.) Ltd." நிறுவனம் அல்லது இதனை ஒத்த பெயரைக் கொண்டுள்ள நிறுவனத்திற்கு ஏற்புடையதான ஏதேனுமொரு வகையிலான உரிமையை எப்போதாவது இலங்கை மின்சார சபை கொண்டிருந்ததா என்பதையும்;

(ii) ஆமெனின், மேற்படி நிறுவனம் நிறுவப்பட்ட திகதி தொடக்கம் இற்றை வரை ஒவ்வொரு வருடமும் டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான அதன் பங்குகளில் இலங்கை மின்சார சபைக்கு உரித்தாக இருந்த பங்குகளின் சதவீதம் எவ்வளவென்பதையும்;

(iii) ஏதேனுமொரு காரணத்தினால் மேற்படி நிறுவனத்தின் பங்குகளில் இலங்கை மின்சார சபைக்கு சொந்தமான பங்குகளின் அளவு குறைந்திருப்பின், குறைந்த இப்பங்குகளின் இன்றைய உரிமையை கொண்டுள்ள நிறுவனம்/ நபர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி நிறுவனங்கள்/நபர்களுக்கு சொந்தமான பங்குகளின் சதவீதம் எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி நிறுவனங்களுக்கு/நபர்களுக்கு மேற்படி பங்குகள் எந்த அடிப்படையில் கையளிக்கப்பட்டன என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2640/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மகிந்த சிந்தனை எதிர்காலத்திற்கான தொலைநோக்கின் குறிப்பிட்டுள்ளதன் பிரகாரம் ரூபா 1000 இற்கு குறைவாக சமுர்த்தி நிவாரணம் பெறுகின்ற ஒவ்வொரு குடும்பத்திற்கும் மேற்படி கொடுப்பனவினை ரூபா 1000 வரை அதிகரிக்கவானது 2011 நவம்பர் மாதத்தில் இருந்து மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில் இன்றளவில் இவ்விதமாக சமுர்த்தி நிவாரணம் அதிகரிக்கப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3083/ '12

கௌரவ புத்திக பதிரண,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2002 முதல் 2011 ஆம் ஆண்டு வரையிலான கால கட்டத்தினுள் தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அதிகரிப்புக்கு சமாந்திரமாக விலை அதிகரித்துள்ள புகைத்தல் பொருட்கள் (சிகரெட்டுகள்) வகைகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) இவ்வாறு விலை அதிகரிக்காத சிகரெட் வகைகள் இருப்பின் அவை யாவை என்பதையும்;

(iii) 2012 மார்ச் மாதத்தில் டன்ஹில் வகை சிகரெட்டின் விலை அதிகரித்த அளவு யாதென்பதையும்;

(iv) இதன் விளைவாக சிகரெட் ஒன்றை விற்பனை செய்வதன் மூலம் அரசாங்கத்திற்கும் புகையிலைக் கம்பனிக்கும் கிடைத்த வருமானம் தனித்தனியே எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் இலங்கையில் விற்பனை செய்யப்பட்ட மொத்த சிகரெட்டுக்களின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி பெறுமானங்களுக்கமைய சிகரெட் விற்பனையின் அதிகரிப்பு அல்லது வீழ்ச்சியின் சதவீதம் எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3129/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) ஹபரண – பொலன்னறுவை வீதி அபிவிருத்திக் கருத்திட்டம் தொடர்பில்,

(i) பாதையின் நீளத்தையும்;

(ii) புனரமைப்பிற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட காலத்தையும்;

(iii) ஒப்பந்தகாரர் ஒரு கேள்விப்பத்திர நடைமுறையினைப் பின்பற்றியா தெரிவு செய்யப்பட்டார் என்பதையும்;

(iv) அவ்வாறாயின் தெரிவு செய்யப்பட்ட விலைகூறுநரின் பெயரையும்;

(v) நிதி மூலங்களையும்;

(vi) ஒரு கிலோ மீற்றருக்கான நிர்மாணச் செலவையும்;

(vii) யாருக்காவது இழப்பீடு செலுத்தப்பட்டதா என்பதையும்;

(viii) அவ்வாறாயின் இழப்பீடு செலுத்தப்பட்ட நபர்களின் பெயர்களையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3371/ '12

கௌரவ பி. ஹரிசன்,— சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2008, 2009, 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் இலங்கையில் நிகழ்ந்துள்ள சிறுவர் மற்றும் மகளிர் துஷ்பிரயோகங்களின் எண்ணிக்கை வருடாந்தம் மாவட்ட அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) சிறுவர் மற்றும் மகளிர் துஷ்பிரயோகங்களை கட்டுப்படுத்த 2013 ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையில் ஒரு தினத்தில் நடைபெறும் சட்டவிரோத கருச்சிதைவுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) சட்டவிரோத கருச்சிதைவுகளைக் கட்டுப்படுத்த அமைச்சு மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்

(iii) இந்நடவடிக்கைகளினூடாக சட்டவிரோத கருச்சிதைவுகள் நடைபெறுதல் குறைந்துள்ளதை தெளிவாகக் காணக்கூடியதாகவுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3613/ '13

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாதுருஓயா தேசிய பூங்காவினூடாக "காபற் வீதியொன்று" நிர்மாணிக்கப்பட்டு வருகின்றதா என்பதையும்;

(ii) இதற்கு வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் அனுமதி கிடைத்துள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி அனுமதி வழங்கல் தொடர்பான ஆவணங்களை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் இதன் மூலம் ஏற்படக்கூடிய சுற்றாடல் சேதங்கள் பற்றிய அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்ட வீதியின் மொத்த நீளம் எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி வீதியில் மாதுருஓயா தேசிய பூங்காவினூடாகச் செல்கின்ற பகுதியின் நீளம் எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி வீதி அமைக்கப்படுவதற்கான நோக்கங்கள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்ற நிறுவனம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3938/ '13

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை மின்சார சபைக்கு நேரடியாக அல்லது மறைமுகமாக ஆலோசனை வழங்கும் சகல ஆலோசகர்களினதும் (சனாதிபதி ஆலோசகர்கள் உள்ளிட்ட) பெயர்கள், முகவரிகள் யாவை என்பதையும்;

(ii) இவர்களுக்காக செலுத்தப்படும் அனைத்து கொடுப்பனவுகளும் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2641/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மஹிந்த சிந்தனை எதிர்காலத்திற்கான தொலைநோக்கில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பொருளாதார மற்றும் தொழில்சார் தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு இலகுவானவாறு பெண்கள் தரவு வங்கியொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி பெண்கள் தரவு வங்கி ஆரம்பிக்கப்பட்ட தேதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3130/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) ஹபரண – திருகோணமலை வீதி அபிவிருத்திக் கருத்திட்டம் தொடர்பில்,

(i) பாதையின் நீளத்தையும்;

(ii) புனரமைப்பிற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட காலத்தையும்;

(iii) ஒப்பந்தகாரர் ஒரு கேள்விப்பத்திர நடைமுறையினைப் பின்பற்றியா தெரிவு செய்யப்பட்டார் என்பதையும்;

(iv) அவ்வாறாயின் தெரிவு செய்யப்பட்ட விலைகூறுநரின் பெயரையும்;

(v) நிதி மூலங்களையும்;

(vi) ஒரு கிலோ மீற்றருக்கான நிர்மாணச் செலவையும்;

(vii) யாருக்காவது இழப்பீடு செலுத்தப்பட்டதா என்பதையும்;

(viii) அவ்வாறாயின் இழப்பீடு செலுத்தப்பட்ட நபர்களின் பெயர்களையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3395/ '12

கௌரவ புத்திக பதிரண,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை சமூர்த்தி அதிகார சபையினால் சமுர்த்தி உத்தியோகத்தர்களினதும் முகாமையாளர்களினதும் சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக பேணிவரப்படுகின்ற நிதியத்துக்கு இவ்வுத்தியோகத்தர்களின் மாதாந்தச் சம்பளத்திலிருந்து ரூபா 50.00 கழிக்கப்படுகின்றதென்பதையும்;

(ii) சுமார் இரண்டு வருட காலமாக இந்நிதியத்தினால் சமுர்த்தி சமூகப் பாதுகாப்பு நட்ட ஈட்டுத் தொகை வழங்கப்படுவதில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) குறிப்பிட்ட நிதியத்தினால் பேணிவரப்படுகின்ற கணக்கில் தற்போதுள்ள மொத்தப் பணத்தொகை யாது என்பதையும்;

(ii) 2012 யூன் 30 ஆம் திகதிக்குப் பின்பு இந்நிதியத்தினால் உரித்துரிமை ஈடு வழங்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) இதற்கென செலவிடப்பட்ட மொத்தப் பணத் தொகை யாது என்பதையும்;

(iv) இதுவரை வழங்கப்படாத உரித்துரிமைப் பணத் தொகைகளை வழங்க துரிதமாக நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2013 நவெம்பர் 28, வியாழக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1971/ '11

கௌரவ புத்திக பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாத்தறை மாவட்டத்திலுள்ள தெனியாய கல்வி வலயத்தின் பஸ்கொட கோட்டக் கல்விக் அலுவலகம் இயங்குகின்ற கட்டிடம் மிகவும் மோசமாக பழுதடைந்துள்ளதென்பதையும்;

(ii) இக்கட்டிடம் மாற/ஊறுபொக்க தேசிய பாடசாலை வளவிலேயே அமைந்துள்ளதனால் இவ்வித்தியாலயத்தின் மாணவ/மாணவிகள் மட்டுமின்றி அங்கு பணியாற்றுபவர்களினதும் உயிருக்கு கடும் அச்சுறுத்தலாகும் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) ஆமெனில், இக்கட்டிடத்தை துரிதமாக புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) அதற்காக நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2593/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நெற் பயிர்ச் செய்கையாளர் மற்றும் அரிசி நுகர்வோர் ஆகிய இரண்டு பிரிவினருக்கும் நியாயம் கிடைக்கக்கூடிய வகையில் நெல் கொள்வனவு மற்றும் அரிசி விற்பனைக்கு ஏற்ப நெல்-அரிசி விலை சூத்திரமொன்றை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனின், மேற்படி விலை சூத்திரம் யாதென்பதையும்;

(iii) மேற்படி விலை சூத்திரம் நடைமுறைப்படுத்தப்படும் திகதி யாதென்பதயும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2713/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2012 மார்ச்சு மாதம் ஜெனிவாவிலுள்ள மனித உரிமைகள் சபைக்கு இலங்கைக்கு எதிராக தீர்மானமொன்றை கொண்டு வரமுன், அமெரிக்க இராஜாங்க வெளியுறவுச் செயலாளருடனான முதல் சந்திப்பு உத்தியோகபூர்வமாக எப்போது இடம்பெற்றது என்பதையும் ;

(ii) இச்சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்ட விடயங்களையும்;

(iii) மேற்கூறிய சந்திப்பின் பின்னர், மேற்கூறியவாறான தீர்மானமொன்றை அமெரிக்கா கொண்டுவரலாமென்று எதிர்பார்க்கப்பட்டதா என்பதையும்;

(iv) இலங்கையைப் பொறுத்தவரை புறக்கணிப்பு, அகந்தை, செயற்திறனின்மை என்பன, மேற்கூறிய தீர்மானத்தில் இலங்கைத்தரப்பு தோல்வியடைய காரணமாய் அமைந்தனவா என்பதையும்;

அவர் கூறுவாரா?

(ஆ) (i) ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட பிரகடனத்துடன் தொடர்புடைய, இற்றைவரை மேற்கொள்ளப்பட்ட தகுந்த நடவடிக்கைகளையும்;

(ii) அரசாங்கம் தன்னுடைய நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டு, 2012 மே 18 ஆம் திகதி அமெரிக்க இராஜாங்க வெளியுறவுச் செயலாளர் திருமதி ஹிலரி கிளின்டனைச் சந்திக்க ஏன் இணக்கம் தெரிவித்தது என்பதையும்;

(iii) அங்கு கலந்துரையாடப்பட்ட விடயங்களையும் அச்சந்திப்பின் பிரதிபலனாக தற்போது மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3372/ '12

கௌரவ பி. ஹரிசன்,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வட மத்திய மாகாண சபை உறுப்பினரொருவருக்கு கிடைக்கின்ற பன்முகப்படுத்தப்பட்ட நிதி எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி நிதியை எத்தகைய அபிவிருத்திப் பணிகளுக்காக செலவிட வேண்டுமென்பது சுற்றறிக்கையின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில் அப்பணிகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) பன்முகப்படுத்தப்பட்ட நிதியத்திலிருந்து கிடைக்கின்ற நிதி,

(i) ஏற்புடைய சங்கங்களுக்கு அல்லது நபர்களுக்கு உரிய முறையில் கிடைப்பதில்லை என்பதையும்;

(ii) சில மாகாண சபை உறுப்பினர்களால் தமது தனிப்பட்ட தேவைகளுக்காக பயன்படுத்தப்படுகின்றதென்பதையும்;

(iii) செலவிடப்படுகின்றபோது சில மாகாண சபை உறுப்பினர்கள் உத்தியோகத்தர் களுடைய உதவியுடன் மோசடிகளில் ஈடுபடுகின்றனரென்பதையும்

அவர் அறிவாரா?

(இ) (i) மாகாண சபைகளுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதி வழங்கப்படும் போது ஏற்புடைய பிரதேச செயலகங்களின் தலையீடு நடைபெறுகின்றதா என்பதையும்;

(ii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) பிரதேச செயலகங்களினூடாக மேற்படி பணி மேற்கொள்ளப்படுமெனில் மாகாண சபை அது தொடர்பாக பின்ஆய்வை மேற்கொள்கின்றதா என்பதையும்;

(iv) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(v) பன்முகப்படுத்தப்பட்ட நிதியை செலவிடுதல் பிரதேச செயலகங்களின் மேற்பார்வையின் கீழ் ஒழுங்காக நடைபெறுகின்றதா என்பதையும்;

(vi) ஆமெனில், அதன் முன்னேற்றத்தை மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்திற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3617/ '13

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பாடசாலை பாடத்திட்டத்தில் பாலியல் கல்வி பற்றிய விடயப் பரப்பை சேர்ப்பதற்கு திட்டம் வகுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், பாலியல் கல்வி எந்தப் பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்படும் என்பதையும்;

(iii) மேற்படி விடயப் பரப்பை சேர்ப்பதற்கு எதிர்பார்க்கின்ற பாடசாலை வகுப்புகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3939/ '13

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை மின்சார சபைக்கு ஒரு பங்கேனும் உரித்தானதாகவுள்ள மின்சார உற்பத்தி, மின்சார அனுப்பல், விநியோகம் உள்ளிட்ட நடவடிக்கைகளுக்காகத் தாபிக்கப்பட்டுள்ள சகல நிறுவனங்களினதும் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்தினதும் பங்குகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள விதம் தனித்தனியே யாதென்பதையும்;

(iii) மேற்படி பங்குதாரர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்தினதும் பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு பணிப்பாளர் சபை உறுப்பினர்களிலிருந்தும் இலங்கை மின்சார சபைக்கு நியமிக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4252/ '13

கௌரவ அஜித் பி. பெரேரா,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1988.06.07 ஆம் திகதிய 509/7 ஆம் இலக்க இலங்கை நிர்வாக சேவைப் பிரமாணங்களின் கீழ் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்சேர்க்கப்படுகின்ற உத்தியோகத்தர்கள் முதலாவது வினைத்திறன் காண் பரீட்சையில் சித்தியடைய வேண்டுமா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி சேவைப் பிரமாணத்தில் இது சம்பந்தமாக குறிப்பிடப்பட்டுள்ள பிரிவு யாதென்பதையும்;

(iii) அவ்வாறனதொரு பிரிவு இல்லையெனில், மேற்படி வினைத்திறன்காண் பரீட்சையில் சித்தியடைய வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனையை நியமனக் கடிதங்களில் சேர்ப்பதற்கு மேற்படி சேவைப் பிரமாணத்தின் 28ஆம் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iv) சேவைப் பிரமாணத்தில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்படாதிருப்பின் மற்றும் 28 ஆம் பிரிவுக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படவில்லையாயின் மேலே கூறியவாறு ஆட்சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர்களின் நியமனக் கடிதங்களில் (அ) (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனை சேர்க்கப்பட்ட அடிப்படை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு சம்பந்தப்பட்ட நியமனக் கடிதங்களில் மேற்படி சேவைப் பிரமாணத்திற்கு ஒவ்வாதவாறு நிபந்தனைகள் சேர்க்கப்பட்டமையால் அசௌகரியத்திற்கு உள்ளாகியுள்ள உத்தியோகத்தர்களுக்கு நிவாரணம் வழங்குவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், இந்நிவாரணம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2452/ '12

கௌரவ புத்திக பதிரண,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மொனறாகலை மாவட்டத்தில், மடுல்ல பிரதேச சபைக்குச் சொந்தமான ஜீப் வண்டியொன்றும் கெப் வண்டியொன்றும் பிரதேச சபை வளாகத்தில் பல ஆண்டுகளாக சிதைவுற்று வருவதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பிரதேச சபையில், மேலே குறிப்பிடப்பட்ட சொத்துக்கள் அழிவடைய விடப்பட்டுள்ளமை வளங்களின் விரயமாகும் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா;

(ii) இந்த வாகனங்களைத் திருத்தி பயன்பாட்டிற்கு எடுக்காமைக்கான காரணங்கள் யாவை

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மடுல்ல பிரதேச சபை மேற்படி இரண்டு வாகனங்களையும் பயன்பாட்டிற்கு எடுக்காவிடின் அவற்றை ஏலத்தில் விட்டு வருமானம் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்காதிருப்பது ஏன் என்பதையும்;

(ii) இவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ள தடையேதுமிருப்பின் அவை யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2642/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பெண்கள் தலைமையிலான குடும்பங்களுக்கு பொருத்தமான பொருளாதார செயற்பாட்டில் ஈடுபடுவதற்காக ஒரு குடும்பத்திற்கு ரூபா 2 இலட்சத்தை விஞ்சாத கடன்தொகையொன்றை சலுகை வட்டி அடிப்படையில் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், இக்கடன்தொகை வழங்கப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3132/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) 2010 சனவரி மாதத்திலிருந்து மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சில காணிகள் அரசியல்வாதிகளாலும் அரசியல் ரீதியாகத் தொடர்புடைய அலுவலர்களாலும் பறிமுதல் செய்யப்பட்டிருப்பது பற்றி அவர் அறிவாரா?

(ஆ) (i) 2010 ஆம் ஆண்டிலிருந்து மட்டக்களப்பு மாவட்டத்தில் உடைமை மாற்றப்பட்டிருக்கின்ற, குத்தகைக்கு விடப்பட்டிருக்கின்ற மற்றும் அனுமதிப் பத்திரம் அல்லது 'சுவர்ணபூமி' உறுதிகளின் பிரகாரம் பராதீனப்படுத்தப் பட்டிருக்கின்ற அரசாங்கக் காணிகளின் பெயர்கள், ஏக்கர் அளவுகள், பெறுமதிகள் ஆகியவற்றை காணி வாரியாகவும்;

(ii) மேற்சொன்ன காணிகளை மாற்றிக்கொடுத்தல் அல்லது ஒப்படைத்தல் மற்றும் அதில் கேள்விப்பத்திர நடைமுறைகளைப் பின்பற்றாமை ஆகியவற்றுக்கான காரணங்களையும்;

(iii) (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள மற்றும் ஏனைய பகுதிகளிலும் தசாப்த காலங்களாக வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் மேற்படி காணிகளைப் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்புகள் அல்லது வசதிகள் வழங்கப்பட்டிருக்கின்றனவா என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) (i) பயங்கரவாதிகளின் உடைமையாக இருந்த பகுதிகளைச் சுத்திகரித்தல் எனும் பெயரின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கடற்கரைக் காணிகளைச் சட்டரீதியான உரிமையாளர்களிடமிருந்து பலவந்தமாக அல்லது வலுக்கட்டாயத்துடன் சுவீகரித்தல் தொடர்பான சார்த்துரை உண்மையானதா என்பதையும்;

(ii) இன்றேல், அத்தகைய சார்த்துரை எவ்வாறு எழுகின்றது என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3373/ '12

கௌரவ பி. ஹரிசன்,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) வட மத்திய மாகாண சபை அநுராதபுரம் புதிய நகரத்தில் பஸ் தரிப்பு நிலையமொன்றை நிர்மாணிக்கின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதன் நிர்மாணிப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி நிர்மாணிப்பு ஒப்பந்தத்தை வழங்கும் போது திறந்த கேள்விப் பத்திர நடைமுறை பின்பற்றப்பட்டதா என்பதையும்;

(iv) இதற்காக கேள்விப் பத்திரம் சமர்ப்பித்த கம்பனிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) அக்கம்பனிகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

(vi) மேற்படி ஒப்பந்தத்தை வழங்குகின்றபோது கம்பனிகளின் இயலுமை பற்றி ஆராயப்பட்டதா என்பதையும்;

(vii) மேற்படி ஒப்பந்தத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2012.11.30 ஆம் திகதியளவில் மேற்படி பஸ் தரிப்பு நிலையத்தின் நிர்மாணிப்புப் பணிகள் எந்தளவுக்கு முடிவடைந்திருந்ததென்பதையும்;

(ii) அதற்காக ஒப்பந்தக் கம்பனிக்கு செலுத்தப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி பஸ் தரிப்பு நிலையத்தை நிர்மாணித்து திருப்பி ஒப்படைக்க வேண்டிய திகதி அக்கப்பனிக்கு அறிவிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஒப்பந்த காலத்தின் படி வேலை முடிக்கப்படவில்லையெனில் கால தாமதத்துக்காக பணம் அறவிடப்படுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) நிர்மாணிப்பு ஒப்பந்தகாரரின் தாமதம் காரணமாக மக்களுக்கு நேரிடுகின்ற சிரமங்களைப் பற்றி அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அது சம்பந்தமாக தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) பஸ் தரிப்பு நிலையத்தின் நிர்மாணிப்புப் பணிகளை பூர்த்தி செய்யும் திகதி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3618/ '13

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— தேசிய மரபுரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சுற்றுலாத் துறைக்கும் கலாச்சாரத்திற்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாயுள்ள "சீகிரிய" தொல்பொருளியல் பிரதேசத்தின் அபிவிருத்திப் பணிகளுக்கு பொறுப்பாகவுள்ள நிறுவனம் யாதென்பதையும்;

(ii) சீகிரியவிற்கு பிரவேசிக்கும் சரளைக் கற்கள் கொண்ட பாதையை புனரமைப்பதற்கும் சீகிரியவை சுற்றிலும் காணப்படுகின்ற துப்பரவேற்பாட்டு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி சரளைக் கற்கள் பாதையை புனரமைக்கும் நிறுவனம் தென்பதையும்;

(iv) சீகிரிய நகரை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பின் அதனை மேற்கொள்கின்ற நிறுவனம் யாதென்பதையும்;

(v) சீகிரிய தொல்பொருளியல் பிரதேசம் சார்ந்ததாக ஈட்டப்படும் வருமானம் உரித்தாகின்ற தரப்பினர் யாரென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2643/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— சமூக சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மஹிந்த சிந்தனை எதிர்காலத்திற்கான தொலைநோக்கில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு 65 வயதை தாண்டும் ஒவ்வொரு நபருக்கும் ஓய்வூதியம் பெற்றுக்கொடுப்பதற்கான முறையியலொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில் , மேற்படி முறையியல் பற்றிய விபரங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3131/ ’12

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) யாழ்ப்பாண மாவட்டம் தொடர்பில்,

(i) 2012 சனவரி 1 முதல் ஒதுக்கப்பட்ட அல்லது பராதீனப்படுத்தப்பட்ட அல்லது பலவந்தமாக கையளிக்கப்பட்ட சகல காணிகளும் யாவை என்பதையும்;

(ii) மக்களுக்கு நட்டஈடு வழங்கி அக் காணிகளை பெற்றுக்கொண்டமைக்கான அல்லது அவற்றை மாற்றியமைக்கான காரணம் யாது என்பதையும்;

அவர் கூறுவாரா?

(ஆ) (i) குறிப்பிட்ட மாவட்டத்தில் அரச குடியேற்றங்கள் நடைபெறுகிறதா என்பதையும்;

(ii) அவ்வாறெனில், அதற்கான காரணங்கள் என்ன என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3295/ ’12

கௌரவ புத்திக பதிரண,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஊடகவியலாளர்களுக்கு இலவசமாக மடிக்கணினிகள் வழங்கப்பட்ட போது வெளிப்படைத்தன்மை பின்பற்றப்படவில்லை என்பதையும்;

(ii) ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றுகின்ற மற்றும் ஓய்வுபெற்ற ஊடகவியலாளர்களுக்கும் கணினிகள் பெற்றுக்கொடுக்கப்பட்டன என ஊடகவியலாளர்கள் குற்றஞ்சாட்டுகிறார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மடிக்கணினிகள் பெற்றுக்கொடுக்கப்பட்ட ஒவ்வொரு ஊடகவியலாளரினதும் சேவைக் காலம் தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(ii) ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றுகின்ற மற்றும் ஓய்வுபெற்ற ஊடகவியலாளர்களுக்கும் மேற்படி கணினிகள் பெற்றுக்கொடுக்கப்பட்டிருப்பின், அத்தகைய ஊடகவியலாளர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) இவர்களது பெயர், முகவரிகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி கணினிகளை பெற்றுக்கொடுப்பதற்கு செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) கணினிகள் பெற்றுக்கொடுக்கப்பட்ட நிரந்த ஊடகவியலாளர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) இவர்களுக்கு கணினிகளை பெற்றுக்கொடுப்பதற்காக செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# 2013 நவெம்பர் 29, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2645/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மகிந்த சிந்தனை எதிர்காலத்திற்கான தொலைநோக்கில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பொலிஸ் உத்தியோகத்தர்களின் வதிவிடப் பிரச்சினையை தீர்ப்பதற்காக விசேட வீடமைப்புத் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறெனின், அந்த விசேட வீடமைப்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3133/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2010 சனவரி மாதத்திலிருந்து அம்பாறை மாவட்டத்திலுள்ள சில காணிகள் அரசியல்வாதிகளாலும் அரசியல் ரீதியாகத் தொடர்புடைய அலுவலர்களாலும் பறிமுதல் செய்யப்பட்டிருப்பது பற்றி அவர் அறிவாரா?

(ஆ) (i) 2010ஆம் ஆண்டிலிருந்து அம்பாறை மாவட்டத்தில் உடைமை மாற்றப்பட்டிருக்கின்ற, குத்தகைக்கு விடப்பட்டிருக்கின்ற மற்றும் அனுமதிப் பத்திரம் அல்லது 'சுவர்ணபூமி' உறுதிகளின் பிரகாரம் பராதீனப்படுத்தப்பட்டிருக்கின்ற அரசாங்கக் காணிகளின் பெயர்கள், ஏக்கர் அளவுகள், பெறுமதிகள் ஆகியவற்றை காணி வாரியாகவும்;

(ii) மேற்சொன்ன காணிகளை மாற்றிக்கொடுத்தல் அல்லது ஒப்படைத்தல் மற்றும் அதில் கேள்விப்பத்திர நடைமுறைகளைப் பின்பற்றாமை ஆகியவற்றுக்கான காரணங்களையும்;

(iii) (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள மற்றும் ஏனைய பகுதிகளிலும் தசாப்த காலங்களாக வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் மேற்படி காணிகளைப் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்புகள் அல்லது வசதிகள் வழங்கப்பட்டிருக்கின்றனவா என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) (i) பயங்கரவாதிகளின் உடைமையாக இருந்த பகுதிகளைச் சுத்திகரித்தல் எனும் பெயரின் கீழ் அம்பாறை மாவட்டத்திலுள்ள கடற்கரைக் காணிகளைச் சட்டரீதியான உரிமையாளர்களிடமிருந்து பலவந்தமாக அல்லது வலுக்கட்டாயத்துடன் சுவீகரித்தல் தொடர்பான சார்த்துரை உண்மையானதா என்பதையும்;

(ii) இன்றேல், அத்தகைய சார்த்துரை எவ்வாறு எழுகின்றது என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3374/ '12

கௌரவ பி. ஹரிசன்,— சுகாதார அமைச்சரைக் கேட்தற்கு,— (1)

(அ) (i) 2012 ஆம் ஆண்டளவில் இலங்கையில் இனங்காணப்பட்டுள்ள ஒட்டுமொத்த எயிட்ஸ் நோயாளிகளின் எண்ணிக்கை யாது;

(ii) 2008, 2009, 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் இனங்காணப்பட்ட எயிட்ஸ் நோயாளிகளின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவு;

(iii) மேலே குறிப்பிட்ட ஒவ்வோர் ஆண்டிலும் இனங்காணப்பட்ட பெண் மற்றும் ஆண் நோயாளிகளின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவு;

(iv) எயிட்ஸ் நோயாளிகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு காணப்படுகின்ற மாவட்டங்கள் யாவை;

(v) மேற்படி அதிகரிப்புக்கான காரணங்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வெளிநாடு சென்றுள்ள பெண்கள் மற்றும் ஆண்கள் மூலமாக இந்நாட்டினுள் எயிட்ஸ் நோய் பரவுதல் அதிகரிக்கின்றதென்பதை ஏற்றுக் கொள்கிறாரா;

(ii) ஆமெனில், வெளிநாடுகளில் இருந்து இந்நாட்டுக்கு வருகின்ற ஆட்களை விமான நிலையத்தில்வைத்து எயிட்ஸ் நோய் பரிசோதனைக்கு உட்படுத்துவாரா;

(iii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) உலகின் ஏனைய நாடுகளுக்கு ஒப்பீட்டளவில் கடந்த வருடத்தில் இலங்கையினுள் எயிட்ஸ் நோய் நிலைமை விருத்தியடைந்துள்ள அளவு யாது;

(ii) இவ்வாறு விருத்தியடைந்தமைக்கான காரணங்கள் யாவை;

(iii) 2013 ஆம் ஆண்டில் இந்நோயைக் கட்டுப்படுத்த வரவு-செலவுத் திட்டம் மூலமாகவும் தொண்டர் அமைப்புக்கள் ஊடாகவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா;

(iv) அவ்வாறு ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகை யாது

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3396/ '12

கௌரவ புத்திக பதிரண,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 65 வயதை தாண்டிய 1980 யூலை வேலை பகிஷ்கரிப்பில் ஈடுபட்டவர்களுக்கு ரூபா 5000.00 கொடுப்பனவொன்று வழங்கப்படுமென 2013 வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்கையில் சனாதிபதி அவர்கள் அறிவித்தார் என்பதை அவர் ஏற்றுக்கொள்கிறாரா?

(ஆ) (i) 32 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக 1980 யூலை வேலை பகிஷ்கரிப்பில் ஈடுபட்டவர்களின் குடும்பங்கள் பெரும் பொருளாதார கஷ்டங்களுக்கு மத்தியில் வாழ்கின்றனர் என்பதையும்;

(ii) மேற்படி பகிஷ்கரிப்பாளர்களில் அதிகமானோர் தற்போது இறந்துவிட்டனரென்பதையும்

அவர் அறிவாரா?

(இ) (i) மேற்படி (அ)இல் குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவை வழங்குவதற்கு உத்தேசித்துள்ள வயதெல்லையை 65 இல் இருந்து 55 வரை குறைத்து அக்குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கும்;

(ii) இறந்துள்ள யூலை பகிஷ்கரிப்பாளரின் மனைவிக்கு அல்லது பிள்ளையொன்றுக்கு மேற்படி கொடுப்பனவை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுப்பாரா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3619/ '13

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— மீள்குடியேற்ற அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யுத்தத்தினால் இடம்பெயர்ந்தவர்கள் தங்கவைக்கப்பட்டுள்ள "சீனியாமோட்டை" பிரதேசத்தில் மீள்குடியேற்றம் இடம்பெறுகின்றதா என்பதையும்;

(ii) மேற்படி பிரதேசத்திற்குத் தேவையான நீர் மற்றும் துப்பரவேற்பாட்டு வசதிகள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) "சீனியாமோட்டை" யில் உள்ள குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) இவர்களின் ஆரம்பக் கிராமங்கள் யாவையென்பதையும்;

(v) மேற்படி குழுவினரை மீண்டும் ஆரம்பக் கிராமங்களில் குடியமர்த்தும் திகதி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2646/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மகிந்த சிந்தனை எதிர்காலத்திற்கான தொலைநோக்கில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு அரச ஊழியர்கள் அனைவருக்கும் வெளிநாட்டு புலமைப்பரிசில் வழங்கும் முறையியலொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறான புலமைப்பரிசில் வழங்கும் முறையியலொன்று அறிமுகப்படுத்தப் பட்டிருப்பின் அந்த முறையியல் தொடர்பான விபரங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3134/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2010 சனவரி மாதத்திலிருந்து திருகோணமலை மாவட்டத்திலுள்ள சில காணிகள் அரசியல்வாதிகளாலும் அரசியல் ரீதியாகத் தொடர்புடைய அலுவலர்களாலும் பறிமுதல் செய்யப்பட்டிருப்பது பற்றி அவர் அறிவாரா?

(ஆ) (i) 2010ஆம் ஆண்டிலிருந்து திருகோணமலை மாவட்டத்தில் உடைமை மாற்றப்பட்டிருக்கின்ற, குத்தகைக்கு விடப்பட்டிருக்கின்ற மற்றும் அனுமதிப் பத்திரம் அல்லது 'சுவர்ணபூமி' உறுதிகளின் பிரகாரம் பராதீனப்படுத்தப்பட்டிருக்கின்ற அரசாங்கக் காணிகளின் பெயர்கள், ஏக்கர் அளவுகள், பெறுமதிகள் ஆகியவற்றை காணி வாரியாகவும்;

(ii) மேற்சொன்ன காணிகளை மாற்றிக்கொடுத்தல் அல்லது ஒப்படைத்தல் மற்றும் அதில் கேள்விப்பத்திர நடைமுறைகளைப் பின்பற்றாமை ஆகியவற்றுக்கான காரணங்களையும்;

(iii) (அ)இல் குறிப்பிடப்பட்டுள்ள மற்றும் ஏனைய பகுதிகளிலும் தசாப்த காலங்களாக வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் மேற்படி காணிகளைப் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்புகள் அல்லது வசதிகள் வழங்கப்பட்டிருக்கின்றனவா

என்பதையும் அவர் கூறுவாரா?

(இ) (i) பயங்கரவாதிகளின் உடைமையாக இருந்த பகுதிகளைச் சுத்திகரித்தல் எனும் பெயரின் கீழ் திருகோணமலை மாவட்டத்திலுள்ள கடற்கரைக் காணிகளைச் சட்டரீதியான உரிமையாளர்களிடமிருந்து பலவந்தமாக அல்லது வலுக்கட்டாயத்துடன் சுவீகரித்தல் தொடர்பான சார்த்துரை உண்மையானதா என்பதையும்;

(ii) இன்றேல், அத்தகைய சார்த்துரை எவ்வாறு எழுகின்றது என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3397/ '12

கௌரவ புத்திக பதிரண,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் பணியாட்டொகுதியானது இலங்கை கணக்காய்வுச் சேவை மற்றும் இலங்கை கணக்காய்வுப் பரிசோதகர் சேவை ஆகிய இரு சேவைககளைச் சேர்ந்த ஊழியர்களைக் கொணடு அமைந்துள்ளதென்பதையும்;

(ii) ஏனைய நாடளாவிய சேவைகளின் சேவைப் பிரமாணங்கள் திருத்தப்பட்டுள்ள போதிலும் கணக்காய்வாளர் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுடன் சம்பந்தப்பட்ட சேவைப் பிரமாணம் இன்று வரை திருத்தப்படவில்லை என்பதையும்;

(iii) கணக்காய்வு உத்தியோகத்தர்களுக்கான சேவைப் பிரமாணம் தாபனப் பணிப்பாளர் நாயகத்தினதும் சம்பள, பதவியணி ஆணைக்குழுவினதும் அங்கீகாரத்தை பெற்றுக் கொண்டதன் பின்னர் 2010.09.13 ஆம் திகதியன்று அமைச்சரவையின் அங்கீகாரத்துக்காக சம்பள, பதவியணி ஆணைக்குழுவினால் சனாதிபதியின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(iv) இரண்டு ஆண்டுகள் கழிந்துள்ள போதிலும் மேற்படி சேவைப் பிரமாணம் இன்று வரை அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படவில்லையென மேற்படி உத்தியோகத்தர்கள் குற்றம் சாட்டுகின்றனரென்பதையும்;

(v) சேவைப் பிரமாணம் திருத்தப்படாமையினால் கணக்காய்வுச் சேவையின் ஊழியர்கள் பதவி உயர்வுகள் இன்றி மிகவும் விரக்தியடைந்துள்ளனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) கணக்காய்வுச் சேவைப் பிரமாணத்தை திருத்தி மேற்படி பணியாட்டொகுதியினருக்குரிய பதவி உயர்வுகளை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# 2014 சனவரி 10, வெள்ளிக்கிழமை

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா.15/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரச அலுவலர்களுக்கு தண்டனை வழங்குதல்,— அரச உயர் அலுவலர்கள் தமது சுதந்திர நிலைமையை அரசியல் மயமாக்கி மற்றும் அவர்கள் முறைகேடாக நடந்தால் அதனால் அவர்கள் குற்றவாளிகளாக கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுப் பத்திரங்களை கையளித்து தண்டனை விதிக்கப்பட வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.16/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஓய்வு பெறும் வயதெல்லையை நீடித்தல்,— அரச அலுவலர்களின் ஓய்வு பெறும் வயதெல்லை 65 வருடம்வரை நீடிக்கப்பட வேண்டுமென்றும் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டால் விசேட திறமையுள்ள அரச அலுவலர்களின் ஓய்வு பெறும் வயதெல்லை 70 வருடம்வரை நீடிக்கப்பட வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.17/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— கல்வியைப் பாதுகாப்பதற்காக தரப் பாதுகாப்பு பேரவையொன்றை நிறுவுதல்,— பொறுப்பற்ற முறையில் பல்கலைக்கழக பெயர்களை பாவித்து இலங்கையினுள் பல கல்வி நிறுவனங்கள் உருவாக்கப்படுவதனால் கல்வியை எதிர்கால சந்ததியினருக்காக பாதுகாப்பதற்காக "தரப் பாதுகாப்பு பேரவையொன்றை" சட்டத்தின் மூலம் உடனடியாக நிறுவ வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.18/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— 'விசேட வழக்குத் தொடுநர்' எனப்படும் பதவியொன்றை உருவாக்குதல்,— அரச சேவை அரசியல் தலையீடுகளிலிருந்து விலக்குவதற்காக சுதந்திர ஆணைக்குழுக்கள், அரசாங்க கணக்குக் குழு, அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழு ஆகியவற்றினால் நிறுவனங்களில் செயற்றிறமை பாதிக்கின்ற மோசடிகள், ஊழல்கள், செயற்திறமையில்லாமை ஆகியவற்றை கண்டுபிடித்த உடனே பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்காக அவற்றுக்கெதிராக வழக்குத் தொடுக்கப்படுவதற்கு ''விசேட வழக்குத் தொடுநர்" எனப்படும் பதவியொன்று உருவாக்கப்பட வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.20/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பணவீக்கத்திற்குப் பொருத்தமான வகையில் 1% கொடுப்பனவு ஒன்று ஊழியர்களுக்கு செலுத்துதல்,— அரச நிறுவனங்களினால் நிர்வகிக்கப்படும் ஊழியர் சேமலாப நிதிய மற்றும் ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதிய பணங்களை செலுத்துவதில் ஒவ்வொரு வருடத்திற்கான பணவீக்க அளவுக்கு மேலதிகமாக 1% கொடுப்பனவு ஒன்று ஊழியர்களுக்கு செலுத்துவதை உறுதிப்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.21/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— சிரேஷ்ட பிரசைகளுக்கு இலவச பயண வசதிகள் ஏற்பாடு செய்தல்,— சகல சிரேஷ்ட பிரசைகளுக்கும் பொதுப்போக்குவரத்துச் சேவைகளில் இலவச பயண வசதிகளை ஏற்பாடு செய்துதர வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.22/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தகராறுகள் தீர்க்கும் நிலையமொன்றை உருவாக்குதல்,— பல இன, மத மக்கள் வாழும் இலங்கையில் சமாதானத்திற்கு பங்கம் ஏற்படும் சவால்களை எதிர்நோக்குகின்றமையினால் அவைகளை இலங்கையிலும், பிராந்தியத்திலும் மற்றும் முழு உலகத்திலும் தீர்ப்பதற்காக பௌத்த, கிரிஸ்தவ, இந்து மற்றும் இஸ்லாம் ஆகிய மதங்களின் ஒழுக்க நெறிகளைக் கொண்ட, தகராறுகள் தீர்க்கும் நிலையமொன்றை உருவாக்க வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.23/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஓய்வு ஆகிய பணிக்கொடையை தாமதமின்றி பெற்றுக்கொடுத்தல்,— இதுவரை ஓய்வூதியப் பணிக்கொடையைப் பெற்றிராத ஓய்வு பெற்றவர்களுக்கு அப்பணிக்கொடையை தாமதமின்றி பெற்றுக்கொடுப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.24/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேசிய கொள்கையாக்க சபை ஒன்றினை நியமித்தல்,— முறைசார் தேசிய கொள்கை மற்றும் திட்டவாக்கம் தொடர்பில் அரசியல்வாதிகள், மற்றும் விடயம்சார் அதிகாரிகளைக் கொண்டதும் அரசாங்கம் மாறும்போது மாறாததுமான விசேட அதிகாரங்களைக் கொண்ட தேசிய கொள்கையாக்க சபையொன்று நியமிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.25/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டில் வேலை செய்பவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல் தொடர்பில் சட்ட அதிகாரங்களைக் கொண்டதோர் அலகை ஏற்படுத்தல்,— வெளிநாடுகளில் வேலைசெய்வோர்கள் முகம் கொடுக்க வேண்டி ஏற்படுகின்ற தாக்குதல்கள், ஆட்கடத்தல், கற்பழிப்பு, பெண்களை இழிதொழிலில் ஈடுபடுத்தல், ஆட்கொலைகள் மற்றும் வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்பு தொடர்பில் செல்லும்போது இடம்பெறுகின்ற மோசடிகள், வெளிநாடுகளில் அகதிகளாக்கப்பட்டுள் ளவர்களை திரும்ப அழைத்துக்கொள்ளல் மற்றும் அவர்களின் பாதுகாப்பு தொடர்பில் செயற்படக்கூடிய சட்ட அதிகாரங்களைக் கொண்டதோர் அலகு ஏற்படுத்தப்பட வேண்டு மென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.26/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— புதிய கண்டுபிடிப்பாளர்களை உலகிற்கு அறிமுகப்படுத்து முகமாக தேசிய திட்டமொன்றினை உருவாக்குதல்,— புதிய கண்டுபிடிப்பாளர்களையும் பலதரப்பட்ட திறமைகளைக்கொண்ட பிரசைகளையும் உலகத்திற்கு அறிமுகப்படுத்து வதற்காகவும் அவர்களது திறமைகள் உருவாக்கங்களை மேம்படுத்துவதற்காகவும் தேசிய திட்டமொன்றினை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.27/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— உள்ளூர் மூலவளங்களை பயன்படுத்தும் கைத்தொழிலாளர்களுக்கு வரிச்சலுகைகள் வழங்கல்,— உலகச் சந்தைக்காக 75% உள் நாட்டு மூலவளங்களைப் பயன்படுத்தி உற்பத்திகளை மேற்கொள்ளும் உள்நாட்டு கைத்தொழிலாளர்களுக்கு 2 வருடகால வரிச்சலுகை வழங்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.28/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தோட்ட சமுதாயத்திற்கு பிரசாவுரிமை வழங்குதல்,— இலங்கைப் பிரசாவுரிமையற்ற சகல தோட்டப்புற மக்களிற்கும் அவர்களது விருப்பத்தின் பேரில் பிரசாவுரிமை வழங்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.29/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தீவிலேயுள்ள ஆரம்பப் பாடசாலை மாணவர்களிற்கு ஒரு கோப்பைப் பால் வழங்குதல்.— தீவிலேயுள்ள சகல ஆரம்பப் பாடசாலை மாணவர்களிற்கும் காலையில் இலவசமாக ஒரு கோப்பை பால் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.30/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்களை ஒரு வாரகாலத்தினுள் விண்ணப்பதாரிகளுக்கு பெற்றுக் கொடுத்தல்,— ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்களை மீளப்பெற விண்ணப்பிப்பவர்களுக்கு ஒரு வார காலத்தினுள் அவற்றைப் பெற்றுக் கொடுப்பதற்கு உரிய திட்டமொன்றினை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.31/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாடசாலை மாணவர்களுக்கு இலவசப் பயணச் சீட்டு வழங்குதல்,— பாடசாலை மாணவர்கள் வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை பேரூந்துகளில் பிரயாணம் செய்வதற்காக இலவச பயணச்சீட்டுக்களை வழங்குகின்ற முறையொன்றினை அறிமுகப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.32/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— விளையாட்டுப் பாடசாலைகளை அமைத்தலும் தேசிய விளையாட்டுக் கொள்கையினை வகுத்தலும்,— நீண்ட கால இலக்குடைய தேசிய விளையாட்டுக் கொள்கையினை வகுப்பதற்கான நடிவடிக்கைகளை எடுப்பதற்கான முதல் கட்டமாக சகல மாவட்டங்களையும் உள்ளடக்கூடிய வகையில் விளையாட்டரங்கு, விளையாட்டு மைதானம், விளையாட்டு உபகரணங்கள், விளையாட்டு போதனாசிரியர் களைக் கொண்ட உயர் மட்ட விளையாட்டுப் பாடசாலைகளை அமைக்க வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.33/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேசிய மொழிகளிற்கான கல்விப் பீடமொன்றினை நிர்மாணித்தல்,— ஆசிரியர்களிற்கு சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளை கற்பிப்பதற்காக தேசிய மொழிகளிற்கான கல்விப்பீடமொன்றினை நிர்மாணிக்க வேண்டு மென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.44/ ’10

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரசாங்க தகவல்களை சுதந்திரமாக பெற்றுக் கொள்வதற்காக சட்டங்களை இயற்றுதல்,— அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மையை பேணுவதற்கும் பொதுமக்கள் அனைத்து அரசாங்க தகவல்களையும் சுதந்திரமாக பெற்றுக் கொள்வதற்கான உரிமைக்காகவும் பாராளுமன்றத்தில் சட்டங்கள் இயற்றப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.45/ ’10

கௌரவ ரவி கருணாநாயக்க,— இலங்கையர்களுக்கு மிகவும் சிறந்த சுகாதார வாய்ப்புக்களை வழங்குதல்,— மக்களில் அதிகமானோர் இருதய சத்திரசிகிச்சை செய்ய வேண்டிய தேவை உடையவர்களாய் இருப்பதால் இலங்கையர்களுக்கு மிகவும் சிறந்த சுகாதார வாய்ப்புக்களை வழங்க வேண்டியிருப்பதாலும் அதற்காக தனியார் துறை ஊழியர்களுக்கு ஊழியர் சேமலாப நிதியம் அல்லது ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தினூடாக இலவசமாக வசதிகளை செய்துகொடுக்க வேண்டும் என்றும் அரசாங்க ஊழியர்கள் அல்லது தொழிலற்றோருக்கு அதற்கான முழு செலவையும் அரசாங்கத்தினால் சனாதிபதி நிதியத்தினூடாக வழங்குதல் வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.46/ ’10

கௌரவ ரவி கருணாநாயக்க,— உலக சுற்றாடலை பாதுகாத்தல்,— இலங்கை உலக சுற்றாடலை பாதுகாக்கும் பொருட்டு கூடிய கவனம் செலுத்த வேண்டுமென்பதோடு புவி வெப்பமாதலை தவிர்ப்பதற்காக குறிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.47/ ’10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாராளுமன்ற நடவடிக்கைகளை ஒளிபரப்புதல்,— தொலைக்காட்சி அல்லது இணையம் மூலமாக பாராளுமன்ற நடவடிக்கைகள் நேரடியாக அல்லது தணிக்கை செய்யப்பட்டு ஒளிபரப்பப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.48/ ’10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாடுகளில் வசிக்கின்ற இலங்கையர்களுக்கு வாக்களிப்பதற்கான அனுமதியை வழங்குதல்,— வெளிநாடுகளில் வசிக்கின்ற இலங்கையர் களுக்கு எதிர்கால தேர்தல்களில் வாக்களிப்பதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.49/ ’10

கௌரவ ரவி கருணாநாயக்க,— இலத்திரனியல் வாக்களிப்பு முறைமையினை அறிமுகப்படுத்துதல்,— தற்போதுள்ள பழைமையான வாக்களிப்பு முறைமைக்குப் பதிலாக இலத்திரனியல் வாக்களிப்பு முறைமையொன்று அறிமுகப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.57/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேருநர் இடாப்பை அடிக்கடி இற்றைப்படுத்துதல்,— தேருநர் இடாப்பு வருடத்தில் மாதமொன்றுக்கு முப்பது நாட்களுக்கு மட்டும் இற்றைப்படுத்தும் பட்டியலொன்றாக அல்லாமல் அது அடிக்கடி இற்றைப்படுத்தும் திறந்த பட்டியலொன்றாக இருத்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.59/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களில் ஈடுபட்டுள்ளோருக்கு ஓய்வூதிய முறையொன்றை அறிமுகப்படுத்துதல்,— வெளிநாடுகளுக்குச் சென்று மிகவும் சிரமத்திற்கு மத்தியில் உழைக்கும் செல்வத்தை, இலங்கையின் செல்வத்தை அதிகரிப்பதற்காக அனுப்புகின்ற, வெளிநாட்டு வேலைவாய்ப்புகளில் ஈடுபட்டுள்ளவர்களை மதிக்கும் வகையில் ஓய்வூதிய முறையொன்றை பெற்றுக்கொடுத்தல் வேண்டுமேன இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.60/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— 2009 மே மாதம் 19 ஆம் திகதிக்கு முன்னர் சேவையில் இருந்த ஆயுதப் படையினருக்காக ஓய்வூதிய முறையொன்றை அறிமுகப்படுத்தல், — பாராளுமன்ற உறுப்பினர்கள் 5 வருட சேவைக்காலத்தை பூர்த்திசெய்த பின்னர் ஓய்வூதியத்தைப் பெறுவதற்கு தகைமைபெறுகின்றதனால் ஆயுதப் படைகளில் 22 வருடங்கள் பூர்த்தி செய்யாத போதிலும் 2009 மே மாதம் 19 ஆம் திகதிக்குப் முன்னர் சேவையில் இருந்த ஆயுதப் படையினருக்கும் ஓய்வூதியம் பெற்றுக்கொடுக்கப்படல் வேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.62/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வலது குறைந்ததும் நடமாடமுடியாததுமான நபர்களுக்கு விசேட வடிவங்களை அறிமுகப்படுத்துதல்,— சட்டத்தில் குறிப்பிடப்படுகின்றவாறு வலது குறைந்தோரின் வசதிகளை உறுதிப்படுத்தவும் அவர்களிடமுள்ள வினைத்திறனை அதிகரிப்பதற்காகவும் அவர்கள் தேவையற்ற விதத்தில் பிறர்மீது தங்கிருப்பதைக் குறைப்பதற்காகவும் அரசாங்கத்தின் அனைத்து புதிய கட்டிடங்கங்களிலும் விசேட வடிவமொன்றை அமைக்க வேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.63/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வாக்களிக்கும் உரிமையை உறுதிப்படுத்தல், – பதிவுசெய்திருந்தும் வாக்களிப்பதற்கான வாய்ப்புக்கிடைக்காத வாக்காளர் அநேக எண்ணிக்கையானோர் இருப்பதனாலும் 18 வயதுக்கு மேற்பட்ட அனைத்து நபர்களுக்கும் வாக்களிக்கும் உரிமையை பெற்றுக்கொடுக்க வேண்டுமெனவும் தேருநர் இடாப்பில் பெயர் குறிப்பிடப்பட்டதன் பின்னர் வாக்களிக்காத நபர்களிடமிருந்து தண்டப் பணமொன்றை அறவிவிடுதல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.64/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஊழலற்ற உலகொன்றை உறுதிப்படுத்தல்,— ஊழலை முற்றாக ஒழிப்பதற்காக இலங்கை பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைந்து உலகிலுள்ள பாராளுமன்ற அமைப்புக்களில் சேர வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 69/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஏமாற்றப்பட்ட பண வைப்பாளர்களுக்கு தமது நிதிகளை மீளச் செலுத்துதல்,— போலி நிதி நிறுவனங்களில் தமது பணத்தை வைப்பிலிட்டு அதனால் ஏமாற்றமடைந்த அநேகமானோர் இருப்பதனாலும் கடந்த 2009/2010 தேர்தல் பிரசாரங்களில் இந்த அரசாங்கம் பண வைப்பாளர்கள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு அவற்றின் மிகுதிப் பணத்தை மீளச் செலுத்த வாக்குறுதி அளித்திருப்பதனாலும் மத்திய வங்கி இந்நிறுவனங்களின் பொறுப்பாளராக இருப்பதனால் மிகவும் வினைத்திறனுடன் செயற்படவேண்டுமென்பதோடு பண வைப்பாளர்களுக்கு அவர்களது மிகுதிப் பணத்தை பெற்றுக் கொடுக்க அரசாங்கம் முன்வர வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 77/ '10

கௌரவ புத்திக பதிரண,— அரச சேவையைச் சேர்ந்த ஓய்வூதியம் பெறுபவர்களின் சம்பள முரண்பாட்டினை நீக்குதல்,— 2006/6 சம்பள மீள்திருத்த சுற்றறிக்கையின் பிரகாரம் 2006.06.01 ஆம் திகதியிலிருந்து அமுலாகின்றவாறு அரச ஊழியர்களுக்கு சம்பள மாற்றம் வழங்கப்பட்டமையால் 2006.06.01 ஆம் திகதிக்கு முன்னர் ஓய்வுபெற்ற மற்றும் அதன் பின்னர் ஓய்வுபெற்ற அரச ஊழியர்களுக்கிடையில் பாரிய சம்பள முரண்பாடு நிலவுவதால் அதனை நீக்குவதற்கான ஒரு தேசிய வேலைத்திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 78/ '10

கௌரவ புத்திக பதிரண,— மாவட்ட மட்டத்தில் தகவல் மத்திய நிலையங்களை நிறுவுதல்,— புவியியல் அமைவு, வரலாற்றுப் பின்னணி, பயிரிடப்படும் பயிரினங்கள், வீதி முறைமை அரச அலுவலகங்கள், பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், புகையிரத நிலையங்கள் மற்றும் பேரூந்து தரிப்பிடங்கள் ஆகிய அனைத்து தகவல்களும் கணனிமயப்படுத்தப்பட்ட மற்றும் ஆவணப்படுத்தப்பட்ட தகவல் மத்திய நிலையங்களை நிறுவுவதற்கும், அதன் முதலாவது கட்டத்தின் போது மகாகாண மட்டத்திலும் இரண்டாவது கட்டத்தின் போது மாவட்ட மட்டத்திலும் மூன்றாவது கட்டத்தின் போது பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேச மட்டத்திலும் இந்நிலையங்களை நிறுவவேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 79/ '10

கௌரவ புத்திக பதிரண,— இலங்கையில் அறநெறி பாடசாலைகளின் கல்வி மற்றும் நிர்வாகத்தை ஒழுங்கு முறைப்படுத்தல்,— இலங்கையில் சகல மதங்களினதும் அறநெறி பாடசாலைகளின் கல்வி மற்றும் நிர்வாகத்தை மேலும் ஒழுங்கு முறைப்படுத்துவதற்கும் பௌத்த அறநெறி பாசாலைகளில் காணப்படும் அறநெறி இறுதிப் பரீட்சை மற்றும் அறநெறி தர்மாசார்ய பரீட்சை மற்றும் சகல மதங்களினதும் அறநெறி பாடசாலைகளில் நடாத்தப்படும் இவற்றுக்கு இணையான பரீட்சைகளின் சான்றிதழ்களுக்கு உரிய அங்கீகாரத்தை வழங்குதலும், அறநெறிப் பாடசாலைக்கு தொடர்ச்சியான மனித வளங்களுடன் பௌதீக வளங்களையும் வழங்குவதன் மூலம் அறநெறிப் பாடசாலைகளுக்கு சமுகமளிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு துரித வேலைத்திட்டமொன்றை வகுத்தலும் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 80/ '10

கௌரவ புத்திக பதிரண,— நாய்கள், பூனைகள் போன்ற செல்லப் பிராணிகளை வளர்த்தல் தொடர்பான சட்டங்களை வகுத்தல்,— வீடுகளில் அல்லது விற்பனை செய்வதற்காக வளர்க்கப்படும் நாய்கள், பூனைகள் போன்ற செல்லப்பிராணிகளை உள்ளூராட்சி நிறுவனங்களில் பதிவு செய்யத் தேவையான சட்டங்கள் வகுக்கப்பட வேண்டுமென்பதோடு, குறித்த பிராணிகளின் குட்டிகளை, சட்டரீதியான அனுமதி பெற்ற நிலையங்களில் மாத்திரம் விற்பனை செய்தல் வேண்டுமெனவும் அவ்வாறல்லாத இடங்களில் வளர்க்கப்படும் பெண்ணினப் பிராணிகளை கட்டாயமாக மலடாக்கலுக்கு உட்படுத்துவதற்கும், தேவையான சட்டங்கள் வகுக்கப்படவேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 81/ '10

கௌரவ புத்திக பதிரண,— தொழில் சந்தைக்குத் தேவையான ஊழியர்களை பயிற்றுவித்தல்,— எதிர்காலத்தில் இலங்கையில் உருவாகும் புதிய தொழில் வாய்ப்புகளுக்குத் தேவையான ஊழியர்களைப் பயிற்றுவிக்கும் வழியொன்றைத் தொடங்கி வைக்கும் பணியை மிகவும் வினைத்திறனான வகையில், நாட்டினுள் காணப்படும் அனைத்து மூன்றாம் நிலைக்கல்வி நிறுவனங்களினூடாக ஆரம்பித்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 82/ '10

கௌரவ புத்திக பதிரண,— பொதுநிர்வாக கட்டமைப்பை மறுசீரமைத்தல்,— தற்சமயம் பொதுநிர்வாக அமைச்சினால் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எல்லைகளை மீள நிர்ணயிப்பதற்கனான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதோடு அவ்வாறு எல்லை நிர்ணயம் செய்யப்படும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளினூடாக புதிய பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேச எல்லைகளையும் புதிய மாவட்ட எல்லைகளையும் நிர்ணயிக்க வேண்டுமெனவும், இவ்வாறு நிர்ணயிக்கப்படும் பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசங்கள் உள்ளூராட்சி மன்ற ஆளுகைப் பிரதேசங்களாக மாற்றியமைக்க வேண்டுமெனவும், அத்தகைய ஆளுகைப் பிரதேசத்தினுள் கோட்டக் கல்வி அதிகாரப் பிரதேசம், பொலிஸ் அதிகாரப் பிரதேசம், கமநல சேவைகள் அதிகாரப் பிரதேசம், பிரதேச சுகாதார சேவை உத்தியோகத்தர் அதிகாரப் பிரசேதம் உள்ளிட்ட சகல அரச நிறுவனங்களினதும் அதிகாரப் பிரதேச எல்லைகள் உள்ளடங்கும் வகையில் ஒட்டுமொத்தமான பொதுத்துறைக் கட்டமைப்பும் திருத்தப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 83/ '10

கௌரவ புத்திக பதிரண,— நில்வளா கங்கை திட்டத்தின் எதிர்கால அபிவிருத்திப் பணிகளை மீள ஆரம்பித்தல்,— மாத்தறை மாவட்டத்தின் நில்வளா கங்கை திட்டத்தின் அபிவிருத்திப் பணிகள் இடைநடுவில் முடங்கியிருப்பதால் அப்பள்ளத்தாக்கின் ஊட்டப் பிரதேசத்தில் பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ளும் மக்கள் முகங்கொடுத்துள்ள பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும், நில்வளா கங்கை திட்டத்தின் எதிர்கால அபிவிருத்திப் பணிகளை விரைவில் மீள ஆரம்பிக்க வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 84/ '10

கௌரவ புத்திக பதிரண,— மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் மக்களின் பிரதிநிதிகளின் பதவிக் காலத்துக்குப் பின்னரும், சமாதான நீதவான் பதவியினை வழங்குதல்,— மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் மக்கள் பிரதிநிதிகளுக்கு வழங்கப்படுகின்ற, சமாதான நீதவான் பதவியானது, அவர்களது பதவிக் காலத்துக்கு மட்டும் வரையறுக்கப்பட்டுள்ளதாலும், இப்பதவிக்காலத்தின் பின்னரும், அவர்களிடம் மேற்படி சேவையினைப் பெறுவதற்காக வரும் அநேகமானோர் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர் என்பதாலும், இம் மக்கள் பிரதிநிதிகளுக்கு தமது பதவிக் காலத்தின் பின்னரும், சமாதான நீதவான் பதவியினை வழங்குவதற்கான தகுந்ததொரு வேலைத் திட்டத்தினை வகுத்தல் வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 85/ '10

கௌரவ புத்திக பதிரண,— மாகாண சபை அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள் அனைவரினதும் கொடுப்பனவுகள் மற்றும் சிறப்புரிமைகள் குறித்து மீளாய்வு செய்தல்,— நாட்டில் தற்போது இயங்கி வருகின்ற மாகாண சபைகள் மற்றும் எதிர்காலத்தில் ஒழுங்கு முறையாக செயற்படவுள்ள வடமாகாண சபையின், கௌரவ அமைச்சர்கள், தவிசாளர்கள், உபதவிசாளர்கள், ஆளும் கட்சியின் முதற்கோலாசான், சபைத் தலைவர்கள், எதிர்க் கட்சித் தலைவர்கள், எதிர்க் கட்சியின் முதற்கோலாசான் மற்றும் கௌரவ உறுப்பினர்கள் ஆகியோரின் கொடுப்பனவுகள், சிறப்புரிமைகள் மற்றும் வசதிகள் ஒழுங்கான முறையில் காணப்படாமையினால், இது தொடர்பாக ஆழமாக ஆராய்ந்து அதற்கான ஒழங்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 86/ '10

கௌரவ புத்திக பதிரண,— உள்ளூராட்சி நிறுவனங்களின் அனைத்து மக்கள் பிரதிநிதிகளினதும் கொடுப்பனவுகள் மற்றும் சிறப்புரிமைகளை மீளாய்வு செய்தல்,— நாட்டில் நடைமுறையிலுள்ள மற்றும் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள அனைத்து மாநகர சபை, நகர சபை, மற்றும் பிரதேச சபைகளினதும் நகரபிதாக்கள், நகர சபைத் தலைவர்கள், மற்றும் பிரதேச சபைத் தலைவர்கள், பிரதி நகரபிதாக்கள், பிரதி நகர சபைத் தலைவர்கள், உப தலைவர்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள் மற்றும் கௌரவ உறுப்பினர்கள் ஆகியோரின் கொடுப்பனவுகள், சிறப்புரிமைகள் மற்றும் வசதிகள் ஒழுங்குமுறையாக இல்லாத காரணத்தால் இது தொட்பாக ஆழமாக ஆராய்ந்து இதற்கான ஒழுங்குமுறையுடன் கூடிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 87/ '10

கௌரவ புத்திக பதிரண,— வடக்கு கிழக்கில் காணாமற் போன தமிழ் மக்களுக்கு மரணச் சான்றிதழ் வழங்குதல்,— வடக்கு கிழக்கு பிரதேசங்களில் யுத்தம் நடைபெற்ற கடந்த மூன்று தசாப்த காலமாக பல்வேறு காரணங்களால் காணாமற் போயுள்ளவர்கள் தற்போது உயிர் வாழ்கின்றார்களா, இல்லையா என்பதையிட்டு துரிதமாக விசாரணை செய்து, இவர்கள் உயிருடன் இல்லாதிருப்பின் இவர்களுக்கான மரணச் சான்றிதழ்களை வழங்குதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 88/ '10

கௌரவ புத்திக பதிரண,— தேசிய இளைஞர் கொள்கையொன்றை வகுத்தல்,— அனைத்து அரசியல் கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட தெரிகுழுவொன்றை நியமித்து, இலங்கைக்கு உகந்த தேசிய இளைஞர் கொள்கையொன்றை வகுத்தல் ஆரம்பிக்கப்பட்ட வேண்டுமெனவும் அந்நோக்கத்திற்காக அதனுடன் தொடர்புடைய அனைத்துத் துறைகளும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தேர்ச்சி பெற்றவர்கள் அறிஞர்கள் மற்றும் புத்திஜீவிகளினதும் அதேபோன்று அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினதும் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 89/ ’10

கௌரவ புத்திக பதிரண,— அரசாங்க பாடசாலைகளையும், பல்கலைக் கழகங்களையும் விடுமுறை நாட்களில் கற்கை அலகுகளுக்காகப் பெற்றுக்கொடுத்தல்,— அரசாங்க பாடசாலைகளின் விடுமுறை நாட்களிலும் பிற்பகல் நேரத்திலும், பல்கலைக்கழகங்களின் விடுமுறை நாட்களிலும், அந்த நிலையங்களை அடிப்படையாகக் கொண்டு, வர்த்தக சமுதாயத்தினரையும், அரச சார்பற்ற அமைப்புகளையும், வர்த்தகச் சபைகளையும், சமுதாய அடிப்படையிலான அமைப்புகளையும் இணைத்துக்கொள்கின்றதான விரிவானதொரு வேலைத்திட்டமாக, முதியோர் மற்றும் முறைசாரா கற்கை அலகுகள் சலுகைக் கட்டண அடிப்படையில் ஆரம்பிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 90/ ’10

கௌரவ புத்திக பதிரண,— வெற்றிடமாகின்ற கிராம உத்தியோகத்தர் பதவிகளில் பதிற் கடமை புரியும் நியமனங்களுக்காக வினைத்திறன்மிக்க வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்,— கிராம உத்தியோகத்தர் பதவியில் வெற்றிடம் ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் அண்மையிலுள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்த கிராம உத்தியோகத்தர் மிகச் சிறியதொரு கொடுப்பனவின் அடிப்படையில் பதிற்கடமைக்காக நியமிக்கப்படுவதாலும், மேற்படி பதிற் கடமை நியமனத்தின் மூலம் கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் இரண்டினதும் வினைத்திறன் வீழ்ச்சயடைவதாலும், இந்த நிலைமையை தவிர்த்துக் கொள்ளும் பொருட்டு சகல பிரதேச செயலகப் பிரிவுகளிலும் கிராம உத்தியோகத்தர் சேர்மம் ஒன்றை அமைக்க வேண்டுமென்பதோடு, வெற்றிடம் ஏற்படுகின்ற பிரிவுகளுக்கு மேற்படி சேர்மத்திலிருந்து கிராம உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கும், மேற்படி சேர்மத்திலுள்ள கிராம உத்தியோகத்தர்களை, பிரதேச செயலாளரினால் ஒப்படைக்கப்படுகின்ற வேறு பயனுள்ள துறைகளில் அல்லது கடமைகளில் ஈடுபடுத்துவதற்குமான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 91/ ‘10

கௌரவ புத்திக பதிரண,— தற்போது செயற்படும் சிவில் பாதுகாப்புக் குழுக்குகளுக்கு உத்தியோகபூர்வ அங்கீகாரத்தை வழங்குதல்,— சகல கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் அமைந்துள்ள மத வழிபாட்டுத் தலங்களின் தலைமை தேரர், மதகுரு, பாடசாலை அதிபர், கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், கமத்தொழில் ஆராய்ச்சி உதவியாளர், சனசபைச் செயலாளர்கள், பிரதேசத்தின் பொலிஸ் நிலையத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் ஒரு உத்தியோகத்தர், மற்றும் உரிய கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள தொண்டர் அமைப்புக்கள், அரச மற்றும் தனியார் துறைகளில் பணிபுரியும் உரிய பிரிவில் வசிக்கும் பிரதிநிதிகளை உள்ளடக்கிய சிவில் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்படுவதை மிகவும் எளிதாக்கும் பொருட்டு தற்போதைய சிவில் பாதுகாப்புக் குழுக்களுக்கு உத்தியோகபூர்வ அங்கீகாரமொன்றை வழங்கக்கூடியவாறான பாராளுமன்றச் சட்டமொன்று நிறைவேற்றப்படுதல் வேண்டுமெனவும் அதனூடாக கிராம உத்தியோகத்தர் பிரிவில் நடைபெறுகின்ற குற்றச் செயல்கள், துர்நடத்தைகள் மற்றும் சட்ட விரோத நடவடிக்கைகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட பிரிவுகளுடன் சிறந்த தொடர்பைக் கட்டியெழுப்புவதற்கு இயலுமானவாறு குறித்த சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 92/ ‘10

கௌரவ புத்திக பதிரண,— நாட்டில் தற்பொது அமுலில் உள்ள காலங்கடந்த சட்டங்களை இற்றைப்படுத்துதல்,— தற்போதும் இலங்கையில் ஏகாதிபத்திய வழிகளின் காலத்தில் அறிமுகஞ் செய்யப்பட்ட சட்டங்கள் அமுலாகிவருவதால் காலங்கடந்த தண்டனைகள், தண்டப்பணம் என்பவற்றை இற்றைப்படுத்துவதற்கான தேசிய வேலைத் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுத்தப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 93/ '10

கௌரவ புத்திக பத்திரண,— தேர்தல்ள் அனைத்தையும் ஒரே நாளில் நடத்துதல்,— இலங்கையில் 1988 இல் இருந்து 2010 வரையான 22 வருட காலப்பகுதிக்குள் 1990, 1992, 1995, 1996, 1998, 2003, மற்றும் 2007 ஆம் ஆண்டுகளைத் தவிர்ந்த ஏனைய ஒவ்வோர் ஆண்டிலும் ஏதேனும் ஒரு தேர்தல் நடத்தப்பட்டுள்ளதோடு அவ்விதமாக தேர்தல்களை நடத்துதலானது மக்களின் அபிப்பிராயத்தைக் கண்டறிவதற்கான பெறுமதி மிக்க அளவுகோலாக அமைந்த போதிலும், இதன் மூலமாக நாட்டின் பொருளாதாரம், நிருவாகம் போன்ற அனைத்துத் துறைகளிலும் தீவிரமான தாக்கம் ஏற்படுத்தப்படுவதால் உள்ளூராட்சித் தேர்தல்கள், பொதுத்தேர்தல்கள் மற்றும் சனாதிபதித் தேர்தலை ஒரே நாளில் நடத்துவதற்கேதுவாக மேற்படி நிறுவனங்களின் பதவிக் காலத்தை திருத்தியமைக்கவும் பொருத்தமான தேர்தல் வழிமுறையொன்றை உருவாக்கவும் தகுந்தவாறு அரசியலமைப்புத் திருத்தமொன்றை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 94/ '10

கௌரவ புத்திக பத்திரண,— பாராளுமன்ற சனநாயகத்தை வலுப்படுத்துவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளுதல்,— நாட்டினுள் சனநாயகத்தை மேலும் வலுவூட்டும் நோக்கத்துடன் பாராளுமன்றத்திற்கும் மாகாண சபைகளுக்கிடையிலும், மாகாண சபைகளுக்கும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கிடையிலும் சிறந்த இணைப்பினை பேணிவருதல் அத்தியாவசியமாயுள்ளதோடு, இதற்கு உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள் மாகாண சபைகளில் பிரதிநிதித்துவம் வகிப்பதை உறுதிசெய்வதற்கும் மாகாண சபை தலைவர்கள் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிப்பதை உறுதி செய்வதற்குமான செயல்முறையொன்றை தயாரிப்பதற்குத் தேவையான அரசியலமைப்புத் திருத்தமொன்று மேற்கொள்ளப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 95/ '10

கௌரவ புத்திக பதிரண,— தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்,— தேசிய ஒருமைப்பாட்டை மேம்படுத்தும் நோக்கில் தமிழ் மொழி பேசுகின்ற மக்கள் வாழ்ந்து வரும் பிரதேசங்களில் சிங்கள மொழிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும் சிங்கள மொழி பேசுகின்ற மக்கள் வாழும் பிரதேசங்களில் தமிழ் மொழிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும், அரச, அரச சார்பற்ற மற்றும் தனியார் நிறுவனங்களின் உதவியுடன் நடைமுறைப்படுத்தல் வேண்டுமென்பதுடன், அரச மற்றும் தனியார் இலத்திரனியல் ஊடகங்கள் மட்டுமன்றி அச்சு ஊடக நிறுவனங்களின் ஒத்துழைப்பினையும் பெற்றுக்கொண்டு இப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பிப்பதற்கான ஒரு தேசிய நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 96/ '10

கௌரவ புத்திக பதிரண,— வாழ்க்கைத் துணையின் தகாத செயல்களினால் நிர்க்கதிக்குள்ளாகும் தரப்பினருக்கு நிவாரணமளித்தல்,— திருமணமான கணவன் மனைவி தம்பதிகள் ஒரே வீட்டில் வாழ்கின்ற சந்தர்ப்பங்களில் கணவன் அல்லது மனைவி மதுபாவனை சூதாட்டம் அல்லது வேறு துர்நடத்தைகளில் ஈடுபட்டு, காணி, வீடு அல்லது வீட்டுப் பாவனைப் பொருட்களை தனது தற்றுணிபின் பிரகாரம் விற்பதன் காரணமாக அல்லது வேறு நபர்களுக்கு ஒப்படைப்பதன் காரணமாக மற்றைய தரப்பினருடன் பிள்ளைகளும் கடும் நிர்க்கதி நிலைக்குள்ளாகின்ற சந்தர்ப்பங்களில் அந்நிலைமையை தடுப்பதற்குத் தேவையான சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 98/ '10

கௌரவ புத்திக பத்திரண,— ஒழுக்க நெறிகள் பற்றிய குழுவை தாபித்தல்,— இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர்களின் நம்பகத்தன்மையையும் அவர்களிடத்தில் உயரிய ஒழுக்க நெறிகளையும் பேணவேண்டிய தேவைப்பாட்டைப் பற்றி ஆராய்வதற்காக ஒழுக்க நெறிகள் பற்றிய குழு ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 99/ '10

கௌரவ புத்திக பத்திரண,— புதிய இலத்திரனியல் அடையாள அட்டையை வழங்குதல்,— நிர்வாகத்தை எளிதாக்குதல், குற்றங்களை கட்டுப்படுத்துதல் மற்றும் ஏனைய மோசடியான நடவடிக்கைகளில் ஈடுபடுவதைக் குறைப்பதற்காக, குறித்த நபரின் இரத்தப் பிரிவு, வங்கிக் கணக்குகள், கடன் அட்டை, கல்வித் தகைமை, சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் வெளிநாட்டுப் பிரயாண கடவுச்சீட்டு இலக்கம் ஆகிய முக்கியமானதும் தேவையானதுமான தகவல்களை உள்ளடக்கிய புதிய இலத்திரனியல் இலக்கத்துடனான, தேசிய அடையாள அட்டையொன்று வழங்கப்படுதல் வேண்டும் எனவும், பிரதேச செயலகப் பிரிவுகளில் வசிக்கும் அனைவரது தகவல்களையும், கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் மட்டத்தில் கணனிமயப்படுத்தலை துரிதப்படுத்தல் வேண்டும் எனவும் இத் தகவல்கள் அவ்வப்போது இற்றைப்படுத்தப்படல் வேண்டும் எனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 100/ '10

கௌரவ புத்திக பத்திரண,— ஆண் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் இருபது வருட சேவைக் காலத்தின் பின்னர், ஓய்வு பெறுவதற்கு வாய்ப்பளித்தல்,— பொலிஸ் திணைக்களத்தில் பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான இருபது வருட சேவைக் காலத்தின் பின்னர், சுயவிருப்பில் ஓய்வு பெறுவதற்கான இயலுமானது, ஆண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொடர்பிலும் ஏற்புடையதாதல் வேண்டுமென்றும் அதற்கான செயல்முறை ஒன்று உருவாக்கப்படல் வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 101/ '10

கௌரவ புத்திக பத்திரண,— ஒழுங்குவிதிகளை நீக்குவதற்கான குழுவை தாபித்தல்,— ஒழுங்குவிதிகள் உருவாக்கப்படுவதும் நீக்கப்படுவதும் அன்றாடம் இடம்பெறும் நடைமுறையாதலால், காலம் கடந்த ஒழுங்குவிதிகளை நீக்குவது பற்றி ஆராய்வதன் பொருட்டு ஒழுங்கு விதிகளை நீக்குவதற்கான குழு ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 102/ '10

கௌரவ புத்திக பதிரண,— சிவில் பாதுகாப்புப் படையைச் சார்ந்த உத்தியோகத்தர்களை, சேவையில் நிரந்தரமாக்கல்,— சிவில் பாதுகாப்புப் படையைச் சார்ந்த உத்தியோகத்தர்களுக்கும் அரசாங்கத்தின் ஏனைய பாதுகாப்புப் பிரிவுகளில் மற்றும் திணைக்களங்களில் சேவையில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கு உள்ளதைப் போன்று சம்பளம், கொடுப்பனவு, நிரந்தர சேவை மற்றும் ஓய்வூதியத்துடனான உத்தியோக அந்தஸ்து வழங்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 103/ '10

கௌரவ புத்திக பத்திரண,— உறுதியளித்தல் பற்றிய குழுவை தாபித்தல்,— பாராளுமன்றத்தில் கேட்கப்படும் வினாக்களுக்கு விடைகளாக அரசாங்கம் வழங்கும் உறுதி மொழிகளும் அரசாங்கத்தின் கடப்பாடுகளும் மீறப்படுகின்ற பல சந்தர்ப்பங்களைக் காணக்கூடியதாயுள்ளதால் அரசாங்கம் தனது பொறுப்புக்களை நிறைவேற்றுவதையும் அவை தொடர்பில் பொறுப்புக் கூறுவதையும் உறுதி செய்யும் பொருட்டு உறுதியளித்தல் பற்றிய குழுக்களை தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 105/ '10

கௌரவ புத்திக பத்திரண,- புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளின் உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்தல்,- இலங்கை புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளில் உள்ள அனுமதியற்ற கட்டுமானங்களையும் அனுமதியற்ற குடியிருப்பாளர்களையும் துரிதமாக அப்புறப்படுத்தி சட்டரீதியான கட்டுமானங்கள் தொடர்பான உடன்படிக்கைகளை மீளாய்வுக்குட்படுத்துவதன் மூலம் திணைக்களத்திற்கு கிடைக்கும் வருமானங்களை அதிகரிக்கச் செய்ய வேண்டுமென்பதுடன், திணைக்களத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு நேரடி தாக்கத்தை ஏற்படுத்தாத காணிகளை நீண்ட கால குத்தகை அடிப்படையில் தனியார் துறைக்கு வழங்கி, அந்நிதியை புகையிரத வலைப்பின்னலின் நவீனமயமாக்கலுக்கு பயன்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.108/ '10

கௌரவ புத்திக பத்திரண,— பிச்சைக்காரர்களின் வாழ்வைப் பாதுகாப்பதற்கான முறையியலொன்றைத் தயாரித்தல்,— தற்போது பிச்சைக்காரர்களின் வாழ்வுக்கு பாரியளவில் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதால் அவர்களது வாழ்வைப் பேணிக்காக்கும் பொருட்டு, அவர்களுக்கு பயிரிடுவதற்கான காணிகளை வழங்கி அதிலிருந்து கிடைக்கின்ற வருமானத்தில் அவர்களது வாழ்வின் பாதுகாப்பினையும் போசனையையும் உறுதிப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.109/ '10

கௌரவ புத்திக பத்திரண,— கட்டாக்காலியாக திரிகின்ற நாய்களின் மூலம் மனித உயிர்களுக்கு ஏற்படுகின்ற சேதத்தை தடுப்பதற்காக முறையியலொன்றைத் தயாரித்தல்,— கட்டாக்காலியாக திரிகின்ற நாய்களின் மூலம் மனித உயிர்களுக்கு ஏற்படுகின்ற சேதத்தை தடுக்கும் நோக்கத்தோடு, அரசாங்கம் நிலப் பரப்பொன்றை ஒதுக்கி கட்டாக்காலியாக திரிகின்ற நாய்களை அவ்விடத்திற்குக் கொண்டுசென்று அவற்றைப் பராமரிப்பதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.110/ '10

கௌரவ புத்திக பத்திரண,— சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்பில் கடுமையான தண்டனைகளை விதித்தல்,— நாடு முழுவதிலும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் நாளுக்கு நாள் சடுதியாக அதிகரித்துவரும் நிலைமை ஏற்பட்டுள்ளதால், அது தொடர்பாக தற்போதுள்ள சட்ட விதிகள் போதியதாக இல்லாதிருப்பின், புதிய சட்ட விதிகளை புதிதாக நிறைவேற்றி மிகவும் துரிதமாக இது தொடர்பான வழக்குகளை தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.111/ '10

கௌரவ புத்திக பத்திரண,— சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காக கரையோர நுழைவுப் பாதைகளை அமைத்தல்,— நாட்டின் கரையோர வலயத்தில் துரிதமாக இடம்பெறுகின்ற நிர்மாணங்கள் காரணமாக உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மற்றும் கடற்றொழிலாளர்கள் கடற்கரைக்கு பிரவேசிப்பதில் அசௌகரியம் ஏற்படுதலானது, சுற்றுலாத்துறை மேம்பாட்டிற்கும் கடற்றொழிலை மேற்கொள்வதற்கும் தடைகளை ஏற்படுத்துவதனால், இந்நிலமையை தடுப்பதற்கும் இத்துறைகளை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டும் கடற்கரை நுழைவுப் பாதை முறைமையொன்று அமைக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.112/ '10

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி நிருவாக சேவை உத்தியோகத்தர்களின் சம்பள முரண்பாடுகளை நீக்குதல்,— அதிபர் சேவை, ஆசிரியர் சேவை, கல்வி நிருவாக சேவை ஆகிய சேவைகளில் பாரிய சம்பள முரண்பாடுகள் நிலவுவதால் இந்நிலைமையை போக்கி இவர்களின் சுய கௌரவத்திற்கு உகந்ததொரு சம்பளத்தைக் கிடைக்கச் செய்யும் வகையில், சம்பள முரண்பாடுகளை நீக்குவதற்குரிய முறையியலொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.113/ '10

கௌரவ புத்திக பத்திரண,— பௌத்த பிக்குக் கல்வியை மேம்படுத்துதல்,— பௌத்த பிக்குமார்களின் மத அறிவை மேம்படுத்தும் நோக்கத்தோடு அவர்களின் பேச்சாற்றல், செவிமடுக்கும் ஆற்றல், கனணி, உளவியல் மற்றும் ஆலோசனை பற்றிய அறிவு என்பவற்றை மேம்படுத்துவதற்காக, தற்போதுள்ள பிக்குக் கல்வி நிறுவனங்களுக்குப் புறம்பாக இப்பணிக்ளுக்கே ஒதுக்கப்பட்டதான பிக்குக் கல்வி நிறுவனங்களை உருவாக்குவதற்கான முறையியலொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.114/'10

கௌரவ புத்திக பத்திரண,— இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள நொத்தாரிசு சேவையை இற்றைப்படுத்துதல்,— இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள நொத்தாரிசு சேவை காலங்கடந்த சட்டங்களைக் கொண்டுள்ளதால் அது தொடர்பாக மீள பரிசீலனை செய்து தற்காலத்திற்குப் பொருத்தமானவாறு சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.115/'10

கௌரவ புத்திக பத்திரண,— உலர் வலய சேனைப் பயிர்செய்கையாளர்களின் பொருளாதாரத்தை வலுவூட்டுதல்,— உலர் வலயங்களில் சேனைப் பயிர்செய்கையாளர் களால் பயிரிடப்படுகின்ற நெல், குரக்கன், பயறு, எள்ளு ஆகிய பயிர்களின் விளைச்சலை அதிகரிப்பதற்கும் உற்பத்திப் பொருட்களை பதனிடுவதற்கும் ஏதுவான வகையில் புதிய தொழிட்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் தரச்சிறப்புவாய்ந்த வகையில் உற்பத்திகளை பதனிடுவதற்கும், உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளில் உற்பத்திகளை சந்தைப்படுத்தும் நடவடிக்கையை வலுவூட்டுவதற்கும் வரையறுக்கப்பட்ட கூட்டுறவு கம்பனிகள் தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.116/'10

கௌரவ புத்திக பதிரண,— ஆசிரியர் ஆலோசனை சேவையை உருவாக்குதல்,— இலங்கையில் கல்வித் தரத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கத்தோடு இற்றைக்கு சுமார் இருபது (20) வருடங்களுக்கு முன்னர் தொட்டு ஆரம்பமாகி நடைமுறையிலிருக்கும் ஆசிரியர் ஆலேசானை சேவையை தனியானதொரு சேவை அலகாக தாபிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.118/ '10

கௌரவ புத்திக பத்திரண,— கோதுமை மாவிற்குப் பதிலாக அரிசி மாவை மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்துவதற்காக புதிய தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்துதல்,— கோதுமை மாவிற்காக வெளிநாடுகளுக்கு வெளிப் பாய்ச்சப்படும் பெருமளவு செலாவணியை நிறுத்தும் நோக்கத்துடன், மாற்றீடாக பயன்படுத்தக்கூடிய அரிசி மாவினால் தயாரிக்கப்படும் உணவை பிரபல்யப்படுத்துவதற்கும், நார்த்தன்மை கொண்ட தானிய வகையான அரிசியை மிகவும் மென்மையானதாக கோதுமை மாவைப் போன்று அரைப்பதற்கும், கோதுமை மா அரைப்பதற்கு பயன்படுத்தப்படுவதைப் போன்ற இயந்திர உபகரணங்களையும் புதிய தொழில்நுட்பத்தையும் அறிமுகப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.119/ '10

கௌரவ புத்திக பத்திரண,— யுத்தத்தால் அங்கவீனமுற்றவர்களுக்கு நிவாரணம் வழங்குதல்,— ஏறக்குறைய 30 வருடகாலமாக நடைபெற்ற யுத்தம் காரணமாக அன்றாடம் நாட்கூலிக்கு வேலை செய்து வாழ்ந்த மக்கள் மற்றும் நிரந்தர தொழில் புரிந்த மக்கள் மத்தியில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையானோர் உடலுறுப்புக்களை இழந்து அங்கவீனர்களாக வாழ்க்கைச் சுமையினால் பெரும் பாதிப்புக்குள்ளாகி நிர்க்கதியான நிலையில் வாழ்வதால், அவர்களுக்கு மாதாந்த கொடுப்பனவொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.120/ '10

கௌரவ புத்திக பத்திரண,— உயர் பிரமுகர்களின் பாதுகாவலர்கள் அனைவருக்கும் பிரயாணச் செலவுக் கொடுப்பனவொன்றை வழங்குதல்,— ஜனாதிபதி பாதுகாப்புச் சேவை மற்றும் பிரதம அமைச்சர் பாதுகாப்பு சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களைப் போன்று ஏனைய உயர் பிரமுகர் பாதுகாப்பு சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கும் சமமான பிரயாணச் செலவுக் கொடுப்பனவொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.127/'11

கௌரவ ரவி கருணாநாயக்க,— காலி சர்வதேச விளையாட்டரங்கிற்கு மீள் பெயரிடுதல்,— இலவசக் கல்வியின் தந்தை காலஞ்சென்ற கௌரவ (கலாநிதி) சீ. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கர அவர்களுக்கு மரியாதை செலுத்தும் முகமாக காலி சர்வதேச விளையாட்டரங்கிற்கு அவரின் பெயரை சூட்டவேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.130/'11

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேர்தல் நடைமுறைகள் மற்றும் தேர்தல்களை நடாத்துதல் பற்றிய பாராளுமன்றத் தெரி குழுவொன்றை நியமித்தல்,— தேர்தல் நடைமுறைகள் மற்றும் தேர்தல்களை நடாத்துதல் பற்றிய பாராளுமன்றத் தெரிகுழுவொன்று நிரந்தர அடிப்படையில் நியமிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.131/'11

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ஆகிய நிதியங்களிலிருந்து பணம் உடனடியாக செலுத்துதல்,— ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் ஆகியனவற்றுக்கு பங்களிப்புச் செய்கின்ற சகல அங்கத்தவர்களுக்கு செலுத்த வேண்டிய தொகைகள் செயல்படுநிலைத் தொழிலிருந்து ஓய்வு பெற்று ஒரு மாத காலத்தின் பின்னர் அவர்களுக்கான நிலுவைகள் செலுத்தப்படுவதற்கான ஏற்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.132/'11

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரச ஊடகங்களில் பக்கச் சார்பற்ற தன்மையை உறுதிப்படுத்தல்,— அரச ஊடகங்கள் இலங்கைப் பிரசைகளின் விசேட உரிமையாக இருப்பதாலும், அரச ஊடகங்கள் தொடர்ச்சியாக அரசியல்மயப்பட்டு இருப்பதாலும், இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள சகல அரசியல் கட்சிகளுக்கும் அரச ஊடகங்களில் சமமாக நடதப்பட்டு சம வாய்ப்புகள் உறுதிப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.133/'11

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரச சேவையில் மொழித் தேர்ச்சியின் தேவைப்பாடுகள்,— 2025 ஆம் ஆண்டளவில் சகல அரச சேவை ஊழியர்களும், தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் கருமங்களை ஆற்றக் கூடியவர்களாகவும் கடிதப் பரிமாற்றல் மூலம் பணியாற்றுவதற்கும் பேசுவதற்கும் இயலுமையுடையவர்களாக இருப்பதை அரசாங்கம் கட்டாயமாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.134/'11

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீட்டினை வழங்குதல்,— இப்பாராளுமன்றத்தின் 225 உறுப்பினர்களும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 1%ற்கு சமமாகின்ற பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்ட ஒதுக்கீட்டிற்கு வருடாந்த அடிப்படையில் உரித்துடையவர்களாகவேண்டுமென்றும் மேலும் இந்த ஒதுக்கீடானது 50% மூலதனச் செலவின்மீது பயன்படுத்தப்படல் வேண்டுமென்றும் எஞ்சியுள்ளவை தனது வாக்காளர்களின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் விரும்புகின்றதும் அரசாங்கத்தின் வழிகாட்டலை அடிப்படையாகக் கொண்டதுமான எவ்வடிப்படையிலும் செலவழிக்கப்படலாமென்றும் இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.138 / 11

கௌரவ புத்திக பத்திரன,— பல்கலைக்கழகங்களால் நடாத்தப்படுகின்ற கற்கை நெறிகளை தொழில்மையக் கற்கைநெறிகளாக ஆக்குதல்,— நாட்டின் அனைத்து அரசாங்க பல்கலைக்கழகங்கள் மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களால் நடாத்தப்படுகின்ற கலைக் கல்விகளுக்கான பட்டப்படிப்பு கற்கைநெறிகளை தொழில்மையக் கற்கைநெறிகளாக மாற்றி அதன் மூலமாக உருவாகின்ற பட்டதாரிகளுக்கு புதிய தொழில்வாய்ப்புகளை வழங்கும் நோக்கத்துடன், அனைத்துப் பல்கலைக்கழகங்களுடன் அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களை இணைப்பதற்கான முறைசார்ந்த வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.139/'11

கௌரவ புத்திக பத்திரண,— பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்கின்ற வான்களுக்கான தரநியமங்களை விதித்தல்,— நாடு பூராவும் நடாத்தப்படுகின்ற பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்துச் சேவைகள் உரிய தரத்தில் இல்லாமையினாலும், சில பாடசாலை வான்களின் ஊழியர்களது நடத்தை சிறந்ததாக இல்லாமையினாலும், உரிய தரநியமங்களுடன் கூடிய வான் சேவையொன்றை நடாத்துவதற்காகவும், மேற்படி சேவையைப் பெறுகின்ற பாடசாலை மாணவ மாணவிகளது பாதுகாப்பை உறுதி செய்வதற்காகவும் வான் சேவைகளுக்கான தரநியமங்களை அறிமுகப்படுத்துதல் வேண்டுமெனவும், வான் ஊழியர்களிடையே சிறந்த பழக்க வழக்கங்களைப் பேணிவருவதற்காக ஒழுக்க நெறிக் கோவையொன்றை அறிமுகப்படுத்துதல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.141/'11

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— கித்துள் கைத்தொழிலை மேம்படுத்து முகமாக கித்துள் பயிர்ச்செய்கையை அதிகரித்தல்,— கிராமிய பிரதேசங்களில் கித்துள் பாரியளவு பங்களிப்பை வழங்குவதால், கிராமியக் கைத்தொழிலுக்கும் கிராமிய மக்களுக்கும் ஊக்கமளித்து தாவர உணவிற்காக வளர்க்கப்படும் கித்துள் மரங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும் என்னும் எமது குறிக்கோள் திட்டத்திற்கு அமைவாக புதிய கித்துள் பயிர்ச்செய்கைகளை அதிகரிப்பதற்கான தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.142/'11

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— இலங்கையைச் சூழ மாசற்ற கடல்சார் சுற்றாடலை உறுதிப்படுத்தல்,— 2020 ஆம் ஆண்டளவில் ஸ்திரத்தன்மை மிக்க தேசிய அபிவிருத்திக்காகவும் இலங்கை மக்கள் மற்றும் அதன் பொருளாதாரம் ஆகியவற்றின் நலனுக்காகவும் இலங்கையைச் சூழ மாசற்ற கடல்சார் சுற்றாடலை உறுதிப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.143/'11

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கையை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தல்,— மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கை மற்றும் அதனோடு தொடர்புடைய உற்பத்திகளின் பதனிடல், சந்தைப்படுத்தல் மற்றும் பயிர்ச்செய்கை ஆகியவற்றுக்கான உதவிகளை நல்கி அதன்மூலம் தரமான பெறுமதி சேர்க்கப்பட்ட மரமுந்திரிகையை உற்பத்திகளின் முன்னணி ஏற்றுமதி உற்பத்தியாளர் மற்றும் ஏற்றுமதியாளராக இலங்கையை திகழச் செய்வதற்கு உதவக்கூடிய விதத்தில் மரமுந்திரிகைச் செய்கையை அபிவிருத்தி செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.144/'11

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— பாரம்பரிய கைத்தொழில்களை அபிவிருத்தி செய்தல்,— அம்பாறை மாவட்டத்தில் அருகி வரும் பாரம்பரிய கைத்தொழில்களான கைத்தறித் தொழில், மட்பாண்டம் தயாரித்தல், பனை ஓலை மற்றும் பன்கொண்டு பெட்டி, தண்டு மற்றும் பாய் போன்றவற்றை இழைத்தல், தும்புத் தொழில், பிரம்புத் தொழில் ஆகியவற்றை அபிவிருத்தி செய்து அப்பகுதி மக்களுக்கு தொழில்வாய்ப்புக்களை ஏற்படுத்தி அவர்களின் வருவாயைப் பெருக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.147/11

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,– பேரிச்சம் பழச் செய்கையை அறிமுகப் படுத்துவற்குரிய வாய்ப்புகள் பற்றி விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்படுதல்,– மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள காத்தான்குடியில் பரீட்சார்த்தமாகப் பயிர் செய்யப்பட்ட பீனிக்ஸ் டெக்லிபெரா *(Phoenix dactylifera)* என்ற பேரிச்சம் பழச் செய்கை வெற்றியளித்துள்ளதால், எமது சொந்த மண்ணில் வளர்ந்த நற்சுவைமிக்க இப் பழத்தை சுவைப்பதற்கான வாய்ப்புகள் எமது நாட்டு மக்களுக்கும் கிடைக்கக்கூடியவாறு இப் பேரிச்சம் பழச் செய்கையை எமது நாட்டிலும் அறிமுகப்படுத்துவதற்குரிய வாய்ப்புகள் பற்றி விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இச்சபை கருதுகிறது.

பா.151/'11

கௌரவ ரவி கருணாநாயக்க,— வானோலி ஒலிபரப்பை ஒழுங்குபடுத்தல்,— வானொலி ஒலிபரப்பை ஒழுங்குபடுத்தும் ஒரு சுயாதீன அதிகார சபையை கூட்டிணைப்பதற்கான சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.152/'11

கௌரவ ரவி கருணாநாயக்க,— தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் ஒளிபரப்பை ஒழுங்குபடுத்தல்,— தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் ஒளிபரப்பை ஒழுங்குபடுத்தும் ஒரு சுயாதீன அதிகார சபையை கூட்டிணைப்பதற்கான சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.153/'11

கௌரவ ரவி கருணாநாயக்க,— மாநகர சபைகளில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவை அறிமுகம் செய்தல்,— 2013 சனவரி 1 ஆம் திகதியளவில் சகல மாநகர சபைகளிலும் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவைத் தாபிப்பதற்கான சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.154/'11

கௌரவ ரவி கருணாநாயக்க,— உரிமைகள் பிரகடனச் சட்டமூலத்தைச் சட்டமாக்குதல்,— தென்னாபிரிக்காவில் மனித கண்ணியம், சமத்துவம் மற்றும் சுதந்திரம் ஆகியவற்றின் ஜனநாயக விழுமியங்களை உறுதிப்படுத்தி, ஜனநாயகத்தின் ஆதாரமாகத் திகழ்கின்ற உரிமைகள் பிரகடனச் சட்டத்தை அடியொற்றி, சட்டமூலத்தில் விதித்துரைக்கப்பட்ட வரையறைகளுக்கு அமைவாக அரசினால் மதித்து, பாதுகாத்து, மேம்படுத்தி நிறைவேற்றப்பட்ட வேண்டிய நாட்டின் எல்லா மக்களினதும் உரிமைகளை உறுதிப்படுத்தும் சட்டமூலம் இலங்கையில் சட்டமாக்கப்பட வேண்டும் இந்தப் பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.155/'11

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விசேட படிகள் கொடுப்பனவு,— அரச சேவைகள் ஆணைக்குழு மற்றும் சம்பளங்கள் பதவியணி ஆணைக்குழு ஆகியவற்றினால் அங்கீகரிக்கப்பட்டு பாராளுமன்றத்தில் கொண்டுவரப்படாதவிடத்து அமைச்சர், பிரதி அமைச்சர் அல்லது பாராளுமன்ற உறுப்பினர் எவருக்கும் எந்த வகையான விசேட படிகளும் வழங்கப்படக் கூடாது என இப் பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.158/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— இலங்கையில் துறைமுகங்களை அபிவிருத்தி செய்தல்,— இலங்கை புவியியல் ரீதியாக மையப் பகுதியில் நன்கு அமையப்பட்டிருப்பதாக அறியப்பட்டிருந்ததாலும், பண்டைக் காலங்களிலிருந்த கடற்போக்குவரத்து என்பது ஒரு மிக முக்கியமான சேவைத் துறையாக இருந்து வருவதனாலும், அத்துடன் இந்தியா அதன் துறைமுகங்களை மிகுந்த ஆர்வத்துடன் அபிவிருத்தி செய்து மேம்படுத்தி வருகின்ற காரணத்தினாலும் நாம் இந்தியாவுடனும் இந்திய வியாபாரத்துடனும் அணிசேர்ந்து இரண்டு நாடுகளினதும் நன்மைக்காக துறைமுகங்களை அபிவிருத்தி செய்ய வேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.117/ '10

கௌரவ ருவண் ரணதுங்க,— உப பிரிவாக்கல் தடை செய்யப்பட்டுள்ள அரசாங்க அளிப்பு பத்திர காணிகளின் உப பிரிவாக்கல் அதிகாரத்தை பிரதேச செயலாளர்களிடம் ஒப்படைத்தல்,— ஜய பூமி, சுவர்ண பூமி,ரத்ன பூமி ஆகிய அரசாங்கக் காணி அளிப்புப் பத்திரங்களைக் கொண்டுள்ளவர்களின் காணிகளில் உப பிரிவாக்கல் தடை செய்யப்பட்டுள்ளதெனினும், ஆரம்பக் காணி பெற்றவர்களின் இரண்டாம் பரம்பரையின் உரிமையை உறுதி செய்வதற்கும் அவர்களின் வீடு, தோட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கும் உப பிரிவாக்கலுக்கான தேவை தோன்றும் போது மாகாண ஆணையாளர், காணி ஆணையாளர் மற்றும் ஜனாதிபதி செயலகத்துடனான தற்போது நடைமுறையில் உள்ள நீண்ட செயன்முறையை குறுகியதாக்கி உப பிரிவாக்க அதிகாரத்தை பிரதேச செயலாளர்களிடம் ஒப்படைப்பதற்கு தேவையான சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.159/ '12

கௌரவ புத்திக பத்திரண,— தேசிய மற்றும் சர்வதேச எதிர்கால கேள்விக்கு ஏற்றவாறு உற்பத்திகளை அதிகரிக்கச் செய்வதற்கான முறையியலொன்றை வகுத்தல்,— தேசிய மற்றும் சர்வதேச சமூகத்தினரின் எதிர்கால கேள்விக்கு ஏற்றவாறு கைத்தொழில் மற்றும் கமத்தொழில் உற்பத்திகள் தொடர்பாக எதிர்வுகூறலை மேற்கொண்டு சம்பந்தப்பட்ட உற்பத்திகள் சார்ந்த சகல துறைகளுடனான இடைத் தொடர்புகளின் ஊடாகவும் நவீன தொழிநுட்பத்தை உச்ச அளவில் பயன்படுத்தியும் உற்பத்திச் செயற்பாடுகளை அதிகரிக்கச் செய்வதற்கான முறையியலொன்றை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.160/ '12

கௌரவ புத்திக்க பத்திரண,— இலங்கை மக்களின் பாரம்பரிய மரபுரிமைகளை பாதுகாக்கும் பொருட்டு டிஜிடல் நூலகமொன்றை தாபித்தல்,— இலங்கை மக்களின் மரபார்ந்த அறிவை பாதுகாத்து, போஷித்து அதனை எதிர்கால சந்ததியினருக்கு கொண்டு செல்வதற்கும், மரபணு வளங்கள் மற்றும் உயிர் மரபுரிமைகளின் தவறான பயன்பாட்டை தடுப்பதற்காகவும் விரிவான தேசிய வேலைத்திட்டமொன்றின் தேவை உணரப்பட்டுள்ளதாலும் சுற்றாடல், சுதேச மருத்துவத் துறை, கமத்தொழில் மற்றும் பாரம்பரிய கைத்தொழில் உள்ளடங்கலாக சகல துறைகளுக்கும் டிஜிடல் தொழிநுட்பத்துடனான நவீன நூலகமொன்றை தாபிப்பதற்கும், அதன் பொருட்டு உலக புலமைச்சொத்து அமைப்பு (WIPO ), இலங்கை புலமைச்சொத்து பணியகம், சுற்றாடல் அமைச்சின் உயிர் பல்வகைமை அலகு உள்ளடங்கலாக சகல துறைகளும் ஒருங்கிணைந்த வேலைத்திட்டமொன்றை வகுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.161/ '12

கௌரவ புத்திக பத்திரண,— இலங்கைவாழ் மக்களின் மரபார்ந்த அறிவைப் பேணிப் பாதுகாப்பதற்கான தேசிய வேலைத்திட்டமொன்றை ஆரம்பித்தல்,— இலங்கைவாழ் மக்களின் மரபார்ந்த அறிவு கையாளப்படும் மருத்துவ முறைகள், கமத்தொழில், உணவுப் பாதுகாப்பு, கைப்பணிக் கைத்தொழிற்றுறை உள்ளிட்ட பல்வேறு துறைகளிலும் காணப்படும் மரபார்ந்த அறிவை பாதுகாப்பதற்காக சம்பந்தப்பட்ட துறையில் ஈடுபட்டுள்ள மக்களிடமிருந்து தகவல்களைப் பெற்றுக்கொண்டு, உயிர் பல்வகைமை அலகு, புலமைச் சொத்துப் பணியகம் உள்ளிட்ட ஏற்புடைய துறைகள் ஒருங்கிணைந்து தேசிய வேலைத்திட்டமொன்றை ஆரம்பிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகிறது.

பா.162/ '12

கௌரவ புத்திக பத்திரண,— இலங்கைக்கே தனித்துவமானதும் மருத்துவ ரீதியில் பெறுமதிமிக்கதுமான தாவரங்களின் மரபணு வளத்திற்கான ஆக்க உரிமத்தைப் பெற்றுக்கொள்ளல்,— வெளிநாடுகள் இலங்கைக்கே தனித்துவமான, பெறுமதிமிக்க மூலிகைத் தாவரங்களின் விளைதிறன்கொண்ட இரசாயனக் கூறுகள் மற்றும் மரபணு வளத்தினைக் கண்டறிந்து, அவற்றிற்கு மோசடியான முறையில் ஆக்க உரிமம் பெறுவதைத் தடுப்பதற்காக சம்பந்தப்பட்ட விளைதிறன்கொண்ட இரசாயனக் கூறுகள் மற்றும் மரபணு வளத்திற்கான ஆக்க உரிமத்தை இலங்கைக்கு பெற்றுக்கொள்வதற்கும் ஔடத உற்பத்தி மற்றும் அதன் மேம்பாட்டிற்கு அக் கூறுகளைப் பயன்படுத்துவதற்கும் உயிர் பல்வகைமை அலகு, புலமைச் சொத்துப் பணியகம் மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சு உள்ளிட்ட பொறுப்பு வாய்ந்த அனைத்து நிறுவனங்களும் இணைந்து விசேட வேலைத்திட்டமொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகிறது.

பா.163/ '12

கௌரவ புத்திக பதிரண,— மக்கள் பிரதிநிதிகளின் கௌரவப் பெயர்களை கைவிடல்,— ஜனாதிபதி, பிரதம அமைச்சர் உள்ளிட்ட பாராளுமன்றம், மாகாண சபைகள், பிரதேச சபைகளைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற சகல மக்கள் பிரதிநிதிகளும் மாதாந்தம் தாம் ஆற்றும் சேவைக்குரிய சம்பளம் மற்றும்/அல்லது கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்வதுடன், மேற்படி எந்தவொரு பதவியும் தன்னலமின்றி மேற்கொள்ளப்படுகின்ற கௌரவ சேவைகளாக இல்லாமையினாலும், மேற்படி பதவிகளை வகிப்பவர்களின் பெயர்களுக்கு எதிரே அல்லது பதவிக்கு எதிரே அதிமேதகு, பிரபு அல்லது கௌரவ ஆகிய பெயர்கள் மற்றும் பெயருக்குப் பின்னால் அவர்கள் போன்ற பதங்களை பயன்படுத்துவதானது நகைப்புக்குரிய விடயமாக மாறியுள்ளதனாலும், மக்கள் பிரதிநிதிகளின் கௌரவப் பெயர்களைப் பயன்படுத்துவதை நிறுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.164/ ' 12

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினை சுதந்திரமானதொரு நிறுவனமாக மாற்றுதல்,— பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு சம்பந்தமான சகல தடங்கல்களையும், முக்கியமாக அரசியல் தலையீடுகள் மற்றும் ஆதரவுகளை அகற்றும் சுதந்திரமான ஒரு நிறுவனமாக ஆக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.165/ ' 12

கௌரவ ரவி கருணாநாயக்க,— தபால் மூல வாக்களிப்பை மாற்றீடு செய்வதற்காக "முன்கூட்டிய வாக்களிப்பை" அறிமுகம் செய்தல்,— தற்போது நடைமுறையிலுள்ள தேர்தல் முறைமையில் காணப்படுகின்ற குறைபாடுகளை சீர்செய்ய உதவும் "முன்கூட்டிய வாக்களிப்பினால்" தபால்மூல வாக்களிப்பை மாற்றீட செய்வதற்கு அரசியலமைப்பு திருத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.166/ ' 12

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஒரு வெளிப்படையான தேர்தல் இடாப்பினை அறிமுகம் செய்வதற்கு அரசியலமைப்பினை திருத்துதல்,— தற்போது பேணப்பட்டு வருகின்ற ஒரு நிலையான பட்டியலைப் போல் அல்லாது, தேர்தல் இடாப்பு வெளிப்படையான ஓர் இடாப்பாக இருக்கக் கூடியவாறு அரசியலமைப்பு திருத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.170/ '12

கௌரவ புத்திக பத்திரண,— முதியோர் பராமரிப்புச் சபை வேலைத்திட்டத்தை மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் விஸ்தரித்தல்,— பல்வேறு தரப்பினரால் முதிய பிரசைகள் புறக்கணிக்கப்படுவதால் நேரிடுகின்ற அநீதிகள் தொடர்பில் முறைப்பாடு செய்வதற்காக சமூக சேவைகள் அமைச்சின் முதியோர் செயலகத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்ற முதியோர் பராமரிப்புச் சபை வேலைத்திட்டத்தை மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் விஸ்தரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.171/ '12

கௌரவ புத்திக பத்திரண,— முதியோர் சமூகம் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் பங்கேற்கச் செய்வதற்கு கடன் வழங்கும் வேலைத்திட்டமொன்றைத் தயார்செய்தல்,— 60 வயதைத் தாண்டியுள்ள முதியோர் சமுதாயத்தினரின் வாழ்வாதார வழிமுறைகளை வலுவூட்டி இலங்கையின் ஒட்டு மொத்த பொருளாதார வளர்ச்சியில் பங்கேற்கச் செய்வதற்கு வங்கி முறைமையின் ஊடாக கடன் வழங்கும் முறையியல் ஒன்று அமுல்படுத்தப்படாமையானது அவர்கள் சமூகத்தினுள் வித்தியாசமாகக் கவனிக்கப்படுவதாகும் என்பதால் அத்தகைய அநீதியான நிலைமையைத் தடுப்பதற்கு முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று உருவாக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.172/ '12

கௌரவ புத்திக பத்திரண,— 60 வயதைத் தாண்டியுள்ளவர்களை சமூகத்தில் முனைப்பான நபர்களாக ஆக்குகின்ற வேலைத்திட்டமொன்றை தயாரித்தல்,— சமூக, பொருளாதார செயற்பாட்டின் முன்னேற்றத்திற்காக தமது உழைப்பை அர்ப்பணித்து, 60 வயதைத் தாண்டிய பின்னர் சமூகத்தில் முறையான அங்கீகாரம் இன்றி செயலிழந்து ஓரங்கட்டப்பட்டுள்ள முதியவர்களை, சமூகத்தின் முனைப்பான நபர்களாக ஆக்குவதற்கான வேலைத்திட்டமொன்றைத் தயாரிப்பதற்காக பாடசாலை சமுதாயம் உள்ளிட்ட முழுச் சமூகத்தையும் விழிப்புணர்வூட்டுகின்ற முறையியலொன்று உருவாக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.124/ '11

கௌரவ ருவன் ரணதுங்க,— கல்விசார் நூல்கள் தவிர்ந்த தினசரி பத்திரிகைகளிலும் வாராந்த சஞ்சிகைகளிலும் புத்தர் பெருமானின் உருவப் படங்கள் பிரசுரிக்கப்படுவதை தடைசெய்தல்,- தினசரி பத்திரிகைகள் மற்றும் வார சஞ்சிகைகளில் புத்தர் பெருமானின் உருவப் படங்களும் சிலைகளின் படங்களும் எதுவித கட்டுப்பாடுமின்றி எல்லையற்ற வகையில் அச்சிடப்படுவதோடு அந்த அட்டைகள் பல்வேறுபட்ட பொருட்ளின் உறைகளாகவும் வேறு பொருத்தமற்ற அலுவல்களுக்காகவும் பயன்படுத்தப்படுவது புத்தர் பெருமானுக்குச் செய்கின்ற அவமரியாதையாகுமென்பதால் 2600 ஆம் புத்தர் ஜெயந்தி கொண்டாட்டத்தையும் கருத்திற்கொண்டு இதன் பின்னர் கல்விசார் நூல்கள் தவிர்ந்த தினசரி பத்திரிகைகளிலும் வாராந்த சஞ்சிகைகளிலும் புத்தர் பெருமானின் உருவப் படங்கள் பிரசுரிக்கப்படுவதை தடைசெய்வதற்குத் தேவையான சட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது

பா.175/'13

கௌரவ புத்திக பத்திரண,— மோட்டார் வாகன தொழில்நுட்பத் துறை தொடர்பில் பாடசாலை மாணவர்களின் அறிவை வளர்த்தல்,— இலங்கையின் எதிர்கால இளைஞர், யுவதிகளின் வேலைவாய்ப்புப் பிரச்சினைக்கான ஒரு தீர்வாகவும், மோட்டார் வாகன தொழில்நுட்பத் துறையில் ஏற்படும் வளர்ச்சிக்கு ஒப்பீட்டளவில் பயிற்றப்பட்ட ஊழியர்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கத்துடனும் பாடசாலை பாடத் திட்டத்தில் மோட்டார் வாகன தொழில்நுட்பத்தை ஒரு பாடமாக உள்ளடக்குவதற்கான முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று ஏற்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.176/'13

கௌரவ புத்திக பத்திரண,— மோட்டார் வாகன தொழில்நுட்பக் கல்வியை கற்பிப்பதற்கான ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்கு கல்வியியற் கல்லூரியொன்றை தாபித்தல்,— இலங்கையிலும் வெளிநாடுகளிலும் மோட்டார் வாகன தொழில்நுட்பத் துறையில் ஏற்படக்கூடிய வளர்ச்சிக்கேற்ப மேற்படி துறையில் பயிற்றப்பட்ட ஊழியர்களின் தேவையை பூர்த்தி செய்வதற்கேற்ற வகையில் பாடசாலை மட்டத்தில் அதனை கற்பிப்பதற்கான ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்கு மோட்டார் வாகன தொழில்நுட்பத்துறை தொடர்பாக கல்வியியற் கல்லூரியொன்று தாபிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.177/'13

கௌரவ புத்திக்க பத்திரண,— மோட்டார் வாகன தொழில்நுட்பக் கல்வி பாடத் திட்டங்களை இற்றைப்படுத்தல்,— மோட்டார் வாகன தொழில்நுட்பத் துறையுடன் தொடர்புடைய அரசாங்க தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களில் கற்பித்தல் நடவடிக்கைகள் 25-30 வருடங்கள் பழமையான பாடத் திட்டங்களின் கீழேயே நடைபெறுவதால், அந்நிலைமையை மாற்றியமைக்கும் பொருட்டு மேற்படி பாடத் திட்டங்களை இற்றைப்படுத்துவதற்கு முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று வகுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.178/'13

கௌரவ புத்திக பத்திரண,— முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கில் சார்ந்த தொழிலில் ஈடுபடுபவர்களின் தொழில் பாதுகாப்பினை உறுதிசெய்தல்,— முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கில் சார்ந்த நேரடி மற்றும் மறைமுக தொழில்களில் ஈடுபடுவதற்கு விருப்பம் கொண்டுள்ள இலங்கையில் வாழும் இளைஞர்கள், ஓய்வுபெற்ற முப்படை உத்தியோகத்தர்கள் மற்றும் மூத்த பிரஜைகள் ஆகிய சமூக குழுக்களின் பொருளாதார பலத்தை மேம்படுத்துவதன் மூலம் மொத்தத் தேசிய உற்பத்திக்கு அவர்களது பங்களிப்பை பெற்றுக் கொள்ளும் நோக்கத்துடன் குறித்த துறையில் ஈடுபட்டுள்ளவர்களது முனைப்புடனான பங்களிப்பை தேசிய பொருளாதாரத்திற்கு பெற்றுக் கொள்வதற்கான முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று விரைவாக தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.179/'13

கௌரவ புத்திக பத்திரண,— இலங்கை/சுதேச சமையற்கலை தொடர்பில் நாட்டினுள் மக்கள் மனப்பான்மைகளை வளர்த்தல்,— இலங்கை/சுதேச சமையற்கலை பற்றி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மக்களிடையே அதிக ஆர்வத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் நாட்டினுள் மக்களின் மனப்பான்மைகளை இதன்மீது செலுத்துவதற்காக பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களின் பாடநெறியில் சமையற்கலையை ஒரு பாடமாக சேர்ப்பதற்கும், அரச மற்றும் தனியார் துறை தலையீட்டின் அடிப்படையில் ஆராய்ச்சித் துறைகளை ஊக்குவிப்பதன் ஊடாக புதிய கண்டுபிடிப்புக்களை மேற்கொள்ளவும், இதனோடு தொடர்புடைய நிறுவன முறைமைகளை இணைத்து சான்றிதழ், டிப்ளோமா, பட்டம், பட்டப்பின் படிப்பு பாடநெறிகளை உருவாக்குவதன் மூலம் இத் துறை பற்றி மக்கள் மத்தியில் விரிவான விதத்தில் மனப்பான்மை ரீதியிலான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.180/'13

கௌரவ புத்திக பத்திரண,— இலங்கையின் உணவுக் கலாசாரத்தை கற்றல், கற்பித்தல் செயற்பாட்டுடன் இணைத்தல்,— இலங்கையின் உணவுக் கலையானது சுவையூட்டல் மற்றும் கலவையாக்கல் கலை, சமையற்கலை, நிறமூட்டல், உணவு வெட்டுதல் உள்ளிட்ட பல பிரிவுகளை உள்ளடக்கியுள்ளதுடன் இதனோடு இணைந்துள்ள இலங்கையின் உணவுக் கலாசாரம் பற்றி கற்றல், கற்பித்தல் வழிமுறைகள் ஊடாக எதிர்கால சந்ததியினருக்கு கையளிப்பதற்கும் அதேபோன்று உள்நாட்டு, வெளிநாட்டு மக்களிடையே எமது உணவுக் கலாசாரத்தை பரப்புவதன் ஊடாக இலங்கையின் தனித்துவத்தை சர்வதேச ரீதியாக மேலோங்கச் செய்வதற்குமான வேலைத்திட்டமொன்று உருவாக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.181/ '13

கௌரவ அஜித் பி. பெரேரா,— நீதிபதிகள் தொழில் பயிற்சி நிறுவகமொன்றை தாபித்தல்,— இலங்கையிலுள்ள நீதிமன்றங்களில் நீதி நிர்வாகத்தின் பொருட்டு பண்புசார் மேம்பட்ட நீதிபதிகளை உருவாக்குவதே முதன்மைத் தேவையாக காணப்படுவதால், அதற்கு தேவையான "பண்புசார் மேம்பட்ட" பயிற்சியொன்றை பெற்றுக் கொடுப்பதற்கு தற்போது தாபிக்கப்பட்டுள்ள "இலங்கை நீதிபதிகள் நிறுவகம்" எவ்விதத்திலும் போதுமானதாக இல்லையென்பதால், நீதிபதிகளை பயிற்றுவிப்பதற்கு பல்கலைக்கழகமொன்றின் தரத்துக்கேற்ற நீதிபதிகளின் தொழிற்பயிற்சி நிறுவகமொன்று தாபிக்கப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.182/ '13

கௌரவ அஜித் பி. பெரேரா ,— இரண்டாம்நிலை பாடசாலைக் கல்வியையும் பல்கலைக்கழக கல்வியையும் ஆங்கில மொழியில் இலவசமாக போதித்தல்,— இலங்கையின் சகல அரச பாடசாலைகளிலும் இரண்டாம் நிலைக் கல்வியும் சகல அரச பல்கலைக்கழகங்களிலும் முழுமையான கல்வியும் ஆங்கில மொழியில் போதிக்கப்பட வேண்டுமென்றும், மேற்படி கல்வியானது முழுமையாகவே அரச செலவில் வழங்கப்படுகின்ற இலவச கல்வியாக அமைதல் வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.183/ '13

கௌரவ அஜித் பி. பெரேரா,— மோட்டார் வாகனங்களுடன் தொடர்புடைய நட்டஈட்டு வழக்குகளுக்கு சுருக்கமுறை நடைமுறையொன்றை அறிமுகப்படுத்தல்,— மோட்டார் வாகனங்களுடன் தொடர்புடைய திடீர் விபத்துகளினால் உயிரிழந்த ஆட்களின் வாரிசுகளுக்கும் தங்கிவாழ்வோருக்கும், அவ்வாறான விபத்துகளினால் காயமடைந்த ஆட்களுக்கும் நட்டஈட்டைப் பெற்றுக்கொள்வதற்கு மிகச் சிரமமானதும் நீண்டதுமான நீதிமன்ற செயற்பாடொன்றில் பங்குபற்ற நேர்ந்துள்ளதால் அவர்கள் மிகவும் நிர்க்கதி நிலைக்கு தள்ளப்படுவதனால், மோட்டார் வாகனங்கள் தொடர்பான நட்டஈட்டு வழக்குகளுக்கு சுருக்கமுறை நடைமுறையொன்றை அறிமுகப்படுத்தும் வகையில் குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை திருத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.186/ '13

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொதுமக்களின் நலனுக்கான சட்டநடவடிக்கை களுக்காக சட்டங்களை அறிமுகப்படுத்தல்,— வறிய மக்களின் அடிப்படை உரிமைகள் மீறுதல், அரசாங்க கொள்கைகளில் உள்ளடக்கம் அல்லது நடாத்துதல், மாநகர சபைகள் அதிகாரிகளினால் பொதுக் கடமைகள் நிறைவேற்றுதல், சமய உரிமைகள் அல்லது அடிப்படை உரிமைகள் மீறுதல் மற்றும் பொதுமக்களை அதிகளவில் கடனாளிகளாக்குகின்ற அல்லது அவர்களுக்கு மேலதிக பொறுப்புகள் ஏற்படுத்துகின்ற ஊழல்கள் ஆகியவை தொடர்பில் பொதுமக்களின் நலனுக்கான சட்டநடவடிக்கைகளுக்காக சட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.187/ '13

கௌரவ ரவி கருணாநாயக்க,— அமைச்சர்களுக்கான பாதுகாப்பு ஆளணியினரை அரசியல்வாதிகளுக்கு மாத்திரம் வரையறுத்தல்,— அமைச்சர்களுக்கான பாதுகாப்புப் பிரிவு (MSD ) ஊடாக வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு ஆளணியினரை அரசியல்வாதிகளுக்கு மாத்திரமே வரையறுக்கப்பட வேண்டும் எனவும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு வழங்கக் கூடாது எனவும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.188/ '13

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— தேசிய விளையாட்டான கரப்பாந்தாட்ட விளையாட்டைத் தரம் உயர்த்துதல்,— உயர்ந்த அளவிலான திறனையும், சுறுசுறுப்பையும், உடலுறுதியையும், தீர்மானம் மேற்கொள்ளுதலையும், குழு முயற்சியையும் வேண்டி நிற்கும், அற்புதமான தேசிய விளையாட்டாகிய கரப்பாந்தாட்டத்தைத் தரமுயர்த்துவதற்கு, நன்கு திட்டமிடப்பட்ட ஒரு நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.189/ '13

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— "பீறலு" என அறியப்படும், பாரம்பரியக் கைத்தறி பின்னல் ஆடைக் கைத்தொழிலை தரமுயர்த்துதல்,— "பீறலு" குடிசைக் கைத்தொழிலை விருத்தி செய்து அதன் மூலம் பின்னல் ஆடை உற்பத்தியில் ஈடுபட்டுள்ள கிராமிய மக்கள் உயர் வருமானத்தைப் பெற்றுக் கொள்ள நவீன வசதிகளை ஏற்பாடு செய்யவும் உல்லாசப் பயணிகளிடையே, பின்னல் ஆடையையும், பின்னல் ஆடை உற்பத்திகளையும், பிரபல்யப்படுத்தவும், வினைத்திறனும், அர்த்தபுஷ்டியும் உடைய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.190/ '13

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொருளாதார காரணங்களுக்காக இளம் தாய்மார் இலங்கையை விட்டுச் செல்வதை தடுப்பதற்கான சட்டவாக்கம்,— தாய்மார்கள் ஒரு வலுவான மற்றும் சந்தோசமான குடும்ப சூழ்நிலை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிப்பதாலும் மற்றும் கடந்த காலங்களில் அத்தகைய தாய்மார்கள் வலுவான குடும்ப அலகின் மதிப்பை இல்லாதொழித்து பாரிய சமூக நெருக்கடியை உருவாக்கி இலங்கையை விட்டு தொழிலுக்காக வெளியேறியதாலும், ஐந்து வயதுக்குக் குறைவான குழந்தைகளின் இளம் தாய்மார்கள் பொருளாதாரக் காரணங்களுக்காக இலங்கையை விட்டு வெளியேறுவதை தடுப்பதற்கான பொருத்தமான சட்டவாக்கம் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.191/ '13

கௌரவ புத்திக பத்திரண,— பல்கலைக்கழகங்கள் மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களைச் சார்ந்த மாணவர்களின் ஆராய்ச்சிகளுக்கான ஆய்வுக் கட்டுரைகளை அமைச்சுக்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளை இலக்காகக் கொண்டு தயாரித்தல்,— பல்கலைக்கழகங்கள் மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களைச் சார்ந்த மாணவர்கள் தமது பாடநெறிகள் தொடர்பில் சமர்ப்பிக்கும் ஆராய்ச்சிக் கட்டுரைகளை நாட்டின் பொருளாதார, சமூக, கலாசார மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் பயன்படுத்துதல் முக்கியமானதாகையால், மேற்படி ஆய்வுக் கட்டுரைகளை மேற்பார்வை செய்யும் பேராசிரியர்களுக்கும் ஆய்வுக் கட்டுரைகள் ஏற்புடையதாகும் அமைச்சுக்களுக்கும் இடையில் சிறந்த தொடர்பினை ஏற்படுத்தும் முகமாக, குறித்த அமைச்சின் உத்தியோகத்தரொருவரை நியமிப்பதன் மூலம் குறித்த ஆய்வுக் கட்டுரைகள் மூலம் அமைச்சின் எதிர்கால அபிவிருத்திச் செயற்பாடுகள் மற்றும் நடைமுறை இலக்குகளை பூர்த்தி செய்யக் கூடிய விதத்திலான முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று ஏற்படுத்தப்படுதல் வேண்டுமன இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.192/ '13

கௌரவ புத்திக பதிரண,— 18 வயது நிரம்பியவுடன் தேருநர் இடாப்புகளில் பெயரைச் சேர்த்தல்,— தேர்தல்கள் திணைக்களத்தினால் வருடாந்தம் தேருநர் இடாப்புகளைத் திருத்தும் திகதிக்கு பின்னர் அல்லது முன்னரான திகதியில் 18 வயதை பூர்த்தி செய்யும் ஆட்களுக்கு உரிய வயது நிரம்பிய திகதியிலேயே தேருநர் இடாப்புகளில் தமது பெயரை சேர்க்கக் கூடிய விதத்தில் நடைமுறைச்சாத்தியமான வேலைத்திட்டமொன்று ஏற்படுத்தப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.193/ '13

கௌரவ ரவி கருணாநாயக்க,— "தேசிய சுகாதாரப் பேரவை பணித்துறை ஆட்சிமுறையொன்றை உருவாக்கல்",— சுகாதார பராமரிப்பு முகாமைத்துவத்திற்கு இன்றுள்ள நிலைமையை விட அதிகளவான வழிகாட்டலும் முக்கியத்துவமும் வழங்கப்பட வேண்டியுள்ளதால் பிரதம அமைச்சருக்கு அறிக்கையிடுவதற்கும் நிரல் அமைச்சில் ஊடுருவிச் சென்று உச்ச பயனைப் பெறாத நிலைமையை இல்லாதொழிக்கவும் தேசிய சுகாதாரப் பேரவை பணித்துறை ஆட்சி முறை" ஒன்றை உருவாக்க வேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.195/ '13

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஓய்வூதிய பணிக்கொடை மீது விதிக்கப்படும் வரிகளுக்கு விலக்களித்தல்,— இந்நாட்டின் விதிக்கப்பட்டுள்ள வரிகள் விசேடமாக இறுதியான நன்மைகள் மீதான வரிகள் மிகவும் சீரற்றதாகவுள்ளதாலும், ஊழியர்கள் கடின உழைப்பின் பின்னர் பெறும் அவர்களின் ஓய்வு பெற்று அவர்கள் பெறும் பணிக்கொடையானது 36% வரிக்கு உட்படுவதாலும் ஓய்வூதிய பணிக்கொடை மீது விதிக்கப்படும் வரிகளுக்கு முழுமையான விலக்களிப்பு அளிக்கப்பட வேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.196/ '13

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஐக்கிய நாடுகள் சபையில் நிரந்தர ஆசனம் ஒன்றைப் பெற்றுக்கொள்ள இந்தியாவுக்கு உதவுதல்,— இந்தியா இலங்கையின் நட்பு நாடு என்ற வகையில் ஐக்கிய நாடுகள் சபையில் நிரந்தர ஆசனம் ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்கு இந்தியாவுக்கு உதவ வேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.